# செவிமடுத்தல் திட்டம்

## வெளிக்கள அறிக்கை

### இலங்கை

செப்டம்பர் - ஒக்டோபர் 2007

இந்த ஆவணமானது CDA நிறுவனத்தால் இயக்கப்பட்ட ஒரு கூட்டுமுயற்சியுடனான கற்கைத் திட்டத்தின் ஒரு பகுதியாக ஆக்கப்பட்டது. இவ்வாவணமானது இத்திட்டத்தின் ஆரம்ப மற்றும் பகுதி கண்டுபிடிப்புக்களாகக் கருதப்பட வேண்டும். பல்வேறுபட்ட நிலவரங்களில் காணப்படும் குறுக்கீட்டு நிகழ்வுகள் மற்றும் கொள்கைகளைக் கண்டுபிடிப்பதற்காக இவ்வாவணங்கள் காணப்பட வேண்டும். ஒவ்வொரு விடயமும் இவ்வாவணம் வரையப்பட்ட தருணம் பல்வேறுபட்ட மக்களிடத்தில் காணப்பட்ட கருத்துக்களையும் விதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

இவ்வாவணம் திட்டத்தின் இறுதி அறிக்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தாது. இவ்வாவணம் பயன்படுத்தப்பட்டாலும் இது ஒரு கூட்டுமுயற்சியுடனான கற்கைத் திட்டத்தின் பணிபுரியும் ஆவணமாக இருக்கும். தனிப்பட்ட ஒரு நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு திட்டத்தின் கண்டுபிடிப்புகளைப் பொதுவாக்க முடியாது.

CDA நிறுவனமானது இதற்கு நேரம், அனுபவம் மற்றும் இவ்வறிக்கைகளுக்கான உள்ளார்ந்தம் போன்றவற்றை அர்ப்பணித்த நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கும் மற்றும் அவர்களின் அனுபவங்களைப் பகிர முன்வந்தமையையும் அங்கீகரிக்கிறது.

எந்தவொரு திட்டத்திற்காகவும் வரையப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் பகிரங்கப்படுத்தப்பட்டதாக இல்லை. ஒரு ஆவணம் தயாரிக்கப்பட்ட பிரதேசத்தில் உள்ள மக்கள் அவர்களின் தனித்தன்மையையும் பாதுகாப்பையும் காப்பதற்கு கேட்டுக்கொண்டவிடத்து, அவர்களினதும் அதில் அடங்கும் சமூகத்தினதும் பாதுகாப்பு கருதி இவ்வாவணங்கள் தனித்தன்மை பேணப்படும்.

## உள்ளடக்கம்

செவிமடுத்தல் திட்டத்தின் பின்னணி

இலங்கையில் செவமடுத்தல் பயிற்சி

இலங்கைக்கான சர்வதேச உதவி பற்றிய சிறு விளக்கம்

செவிமடுக்கும் குழு செவிமடுத்தவை:

**I.** சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்றிறன் மற்றும் வினைத்திறன்
   a. சர்வதேச உதவி முயற்சிகளின் மதிப்பிடல்
   b. வேகம், போட்டி மற்றும் பிரதிபண்ணல்
   c. இலக்குக் குழு மற்றும் பிரதேசம் தெரிவு செய்தல்
   d. உதவியின் தரமும் பொருத்தப்பாடும்
   e. நீண்ட கால தலையீடு எதிர் குறுகிய கால தலையீடு

II. நிதி வழங்கும் நிறுவனங்களின் நிகழ்ச்சி நிரல், அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தரவு, முன்னுரிமை போன்றவற்றின் தாக்கம்
   a. யுத்தத்தால் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட
   b. வறியோர் பற்றி என்ன?

**III.** உதவி வளத்தின் முகாமைத்துவம்
   a. சம்பந்தமில்லாதோர் பணத்தைக் கையாளல் மற்றும் ஊழல்
   b. சர்வதேச மற்றும் உள்ளூர் நிறுவனங்கள் எவ்வாறு பணத்தைச் செலவழிக்கின்றன?

IV. "வெளி" மதிப்புக்களை மேம்படுத்தலும், கௌரவம் மற்றும் மதிப்பு போன்ற விடயங்களும்
   a. "வெளி" மதிப்புக்களை மேம்படுத்தல்
   b. கௌரவம் மற்றும் மதிப்பு போன்ற விடயங்கள்

**V.** பொருளாதார மற்றும் சமூக தாக்கங்கள்
   a. பொருளாதார தாக்கங்கள்: ஊதியம், பணவீக்கம் மற்றும் வணிகம்
   b. நேர்மறை சமூக தாக்கங்கள்: வலுவூட்டல் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு
   c. தங்கிநிற்காமை எதிர் தங்கிநிற்றல்
   d. எதிர்மறை சமூக தாக்கங்கள்: சமூகத்துக்குள்ளும் சமூகத்துக்கு வெளியேயும் காணப்படும் குழப்பம்

VI. நிதி வழங்கும் நிறுவனங்களினதும் அமுல்படுத்துவோரினதும் பாத்திரங்களும் பொறுப்புக்களும்
   a. கட்டளைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் பற்றி தொடர்பாடல்
   b. பெறுனர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்தல்
   c. கொள்ளளவை விருத்தி செய்தலும் உத்தியோகத் தோழமையும்
   d. கண்காணிப்பு
   e. தேசிய மற்றும் மாகாண அரசோடு பணிபுரிதல்

**VII.** உதவி வழங்கும் நிறுவனமானது முரண்பாடு காணப்படும் பிரதேசத்தில் பாதுகாப்புத் துறை மற்றும் அரசோடுள்ள உறவு

இறுதி பிரதிபளிப்பு

செவிமடுத்தல் திட்டத்தின் பின்னணி

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், நிதிவழங்குனர்கள், மற்றும் வேறு மனிதநேய, அபிவிருத்தி நிறுவனங்களை சகாக்களாகக் கொண்ட CDA கூட்டுமுயற்சியுடனான கற்கும் திட்டம், சர்வதேச உதவியைப் பெறும் பக்கத்திலுள்ள சமூகங்களில் வாழும் மக்களின் கருத்துக்கள் மற்றும் உள்ளெண்ணங்களை முழுமையாகவும் திட்டமிட்ட முறைமையின் படி ஆராயவும் இந்த செவிமடுத்தல் திட்டத்தை ஆரம்பித்தது. சர்வதேச பங்குபற்றுனர்களின் உதவி முயற்சிகளின் தாக்கத்தை அளவீடு செய்யும் பொருட்டு, உதவிபெறும் சமூகங்களில் பலவித பதவிகளை வகிக்கும் அனுபவமிகு மற்றும் சிந்தனைமிகு மக்களின் பிரதிபலிப்பை செவிமடுத்தல் திட்டம் வேண்டிநிற்கின்றது. சர்வதேச உதவிகளின் நீண்டகால தாக்கங்களையும் உடன்விளைவுகளையும், அது தொடர்பான சுதேச மக்களின் பகுப்பாய்வுகளும் தீர்மானங்களும் பிரதிபளிப்பதால் எங்கள் மத்தியில் மனிதநேய உதவி, அபிவிருத்தி உதவி, சுற்றாடல் பராமரிப்பு, மனித உரிமைகள் அல்லது/மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் துறைகளில் பணிபுரிவோருக்கு வெகுவாக அவற்றுக்குச் செவிமடுப்பதன் மூலம் கற்றுக்கொள்ள உதவியாக இருக்கும்.

செவிமடுக்கும் குழுவானது ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட கேள்விக்கொத்து அடிப்படையிலோ, கடினமான நேர்முகங்காணல் முறைமையிலோ பணிபுரியவில்லை. மாற்றமாக, சர்வதேச உதவிப் பணிகளில் ஈடுபடுவோர் என்ற அடிப்படையில் இப்பணிகளைப் பற்றிய அவர்களின் எண்ணங்களைக் கேட்டறிவதில் நாங்கள் ஆர்வம் கொண்டுள்ளோம் எனக் கூறினோம். அது போல் அவர்களும் சர்வதேச உதவி முயற்சிகள் பற்றிய அவர்களின் அனுபவங்கள் மற்றும் கருத்துக்களை எம்மோடு பகிர்ந்து கொள்ள சிறிது நேரம் ஒதுக்க முன்வருவார்களா எனவும் கேட்டோம். இந்த வழியில் அவர்களின் முக்கிய விடயங்களை, தலைப்பை முன்கூட்டியே வரையறைப்படுத்தாமல் கலந்துரையாடினோம்.

ஓரிரு நபர்களுடன் பல கலந்துரையாடல்கள் செய்யப்பட்டாலும் வேறு சந்தர்ப்பங்களில் பெரிய குழுக்கள் உருவாக்கப்பட்டன. இவை சிறுகுழு கலந்துரையாடல்களாக மாறி இலகுவாக முன்சென்றது. பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடல்கள் முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்படாமல் நிகழ்த்தப்பட்டன. செவிமடுக்கும் குழுவானது ஒரு சமூகத்துக்குச் சென்று அங்கு காணக் கிடைக்கும் கதைப்பதற்கு விருப்பமுள்ளவர்களை அவர்கள் சர்வதேச உதவிகள் கிடைக்காதவர்களாயினும் அவர்களுடன் கலந்துரையாடலை ஆரம்பிப்பார்கள். அரச அதிகாரிகளுடனும் ஏனைய உள்ளூர் தலைவர்களுடனும் நியமனங்கள் ஏற்படுத்தப்பட்டன.

மூன்று வருடங்களுக்குள் செவிமடுத்தல் குழுவானது இருபது நாடுகளுக்கு விஜயம் செய்யும். அதில் இலங்கையானது பதினொராவது நாடாக இருக்கிறது. இத்திட்டமானது எதிர்கால உதவிப் பணிகளில் ஆழமான கருத்துக்களை ஒன்றுசேர்த்து அதன் வினைத்திறனை முன்னேற்றுவதற்காக வேண்டி மக்களிடமிருந்து கேட்டுக்கொண்ட விடயங்களை இத்திட்டமானது சேர்த்துக்கொள்ளும்.

செவிமடுக்கும் திட்டம் போன்ற ஒன்றுகூடலுடனான கற்கும் திட்டமானது பங்குபற்றும் அனைத்து நிறுவனங்களினதும் முக்கியமான பங்களிப்புகள் மற்றும் பங்கேற்பில் முழுமையாகத் தங்கியுள்ளது. இலங்கையிலிருந்து பங்கேற்றவர்கள், அவர்களின் பரந்த பொருள்சார் உதவி, மற்றும் பங்கேற்றவர்களின் ஆழ்ந்த கருத்துக்கள் மற்றும் பங்களிப்புக்காக அதிகூடிய பாராட்டைப் பெற தகுதியோடையோராவர்.

## இலங்கையில் செவிமடுக்கும் பயிற்சி

செப்டம்பர் 2007ம் ஆண்டு பிற்பகுதியில் செவிமடுத்தல் திட்டமானது, மனிதநேய அமைப்புக்களின் கூட்டிணையம் (CHA), ∴போரூட், சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கம் (IFRC) ஐரிஷ் செஞ்சிலுவை, மர்சி கொர்ப்ஸ், அமெரிக்க ஒக்ஸ்பாம் நிறுவனம், பிரித்தானிய ஒக்ஸ்பாம் நிறுவனம், சேவா லங்கா மற்றும் வேர்ல்ட் விஷன் போன்ற நிறுவனங்களின் உதவியுடன் செவிமடுக்கும் பயிற்சியை ஏற்பாடு செய்தது. இந்த நிறுவனங்கள் நிதி, ஆளணி, மற்றும் வேறு ஒத்தாசைகளையும் (உபசரிப்பு, போக்குவரத்து, etc) இத்திட்டத்துக்கு வழங்கியதுடன், CHA ஆனது அவர்களின் ஆளணியரில் ஒருவரை இலகுபடுத்தும் குழுவுக்கு அனுப்பி வைத்தனர். CDA ஒரு ஆளணி, இரண்டு நிபுணர்கள் மற்றும் உள்ளூர் இலகுபடுத்துனரையும் செவிமடுக்கும் பயிற்சியை இலகுபடுத்தும் பொருட்டு அனுப்பிவைத்தனர்.

செவிமடுக்கும் பயிற்சியின் போது இலங்கையின் 6 பிரதேசங்களுக்கு விஜயம் மேற்கொள்ளப்பட்டது. 1. நாட்டின் தென்பகுதியில் காணப்படும் சுனாமியால் பாதிக்கப்பட்ட காலி மற்றும் அதனை அண்டியுள்ள பிரதேசங்கள் 2. கிழக்கில் சுனாமி மற்றும் முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு பிரதேசம் 3. 1990 ம் ஆண்டின் ஆரம்பப் பகுதியிலிருந்து உள்நாட்டில் இடம்பெயர்ந்த முஸ்லிம்களால் கூடிக்காணப்படும் புத்தளம் மற்றும் அதனை அண்டியுள்ள பிரதேசங்கள் 4. பதுளை மற்றும் ஊவா மாகாணங்களில் காணப்படும் மத்திய உயர்நிலங்கள் மற்றும் தேயிலை பயிர்ச்செய்கை நிலங்கள் 5. வடக்கில் முரண்பாட்டால் பாதிக்கப்பட்டு அநுராதபுரம் மாவட்ட எல்லைப் பிரதேசங்களில் வசித்து வரும் மக்கள் 6. கொழும்பு மற்றும் அதன் எல்லைப் புரங்களில் காணப்படும் கைத்தொழில் பணியாளர்கள், அரசாங்க அமைச்சுக்கள், வெளிநாட்டு நிதியுதவி வழங்கும் நிறுவனங்கள், இலங்கையின் அரச சார்பற்ற நிறுவனங்கள், மற்றும் ஆய்வு நிலையங்கள். CDA நிறுவனத்தின் ஆலோசனையின் அடிப்படையில் பங்குபற்றும் நிறுவனங்கள் பிரதேசங்களைத் தேர்ந்தெடுத்ததுடன் பல்வேறுவிதமான சர்வதேச உதவி அனுபவங்களை பலவருட காலங்களின் மட்டங்களில் பெற்றுக்கொண்ட சமூகங்களை விஜயம் செய்வது இதன் நோக்கமாக இருந்தது.

செவிமடுக்கும் பயிற்சியின் போது இந்த 6 பிரதேசங்களுக்கும் செவிமடுப்பாளர்கள், பங்குபற்றும் நிறுவனத்தின் 35 ஆளணியினரும் 375 பேருடன் 195 கலந்துரையாடல்களை நிகழ்த்தினர். இந்த கலந்துரையாடல்கள் இலங்கையின் முக்கிய இனமத குழுக்களை ஒன்றிணைத்ததாகவும் வளர்த்த ஆண் பெண்களையும், முதியோரையும் இளைஞரையும் அதிக எண்ணிக்கையான விவசாயிகள் மீனவர்கள் மற்றும் தேயிலைத் தோட்ட பணியாளர்களையும் சமயத் தலைவர்களையும் சிறிய வியாபாரிகள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் மாவட்ட மற்றும் தேசிய அரச அதிகாரிகள் மற்றும் சமூகத் தலைவர்கள் நகர மற்றும் கிராமப்புரங்களிலுள்ள மக்கள் மற்றும் தலைமைத்துவ பாத்திரத்தில் காணப்படும் மற்றும் தாழ்த்தப்பட்டோர் என்ற எண்ணம் கொண்ட மக்களையும் இந்த கலந்துரையாடல்கள் சேர்த்துக்கொண்டது. செவிமடுக்கும் குழுவானது உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கும் சுனாமியால் மற்றும் முரண்பாட்டால் பாதிக்கப்பட்டோருக்கும் கிராம மட்ட மற்றும் அரச சார்பற்ற உள்ளூர் நிறுவனங்களுக்கும் கதைத்தது. இந்த குழுவானது பிராந்தியங்களிலுள்ள மற்றும் கொழும்புத் தலைநகரிலுள்ள சில நிதிவழங்கும் நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்களின் ஆளணியினரிடமும் கதைத்தது.

ஒவ்வொரு பிரதேசங்களிலும் செவிமடுக்கும் குழுவானது சர்வதேச உதவிகளின் நேரடிப் பயனாளிகளாக இருக்கும் மற்றும் அவ்வாறில்லாத மக்களிடமும் கதைத்தது. குழுக்களானது மக்கள் கதைப்பதற்கு ஆர்வமான உள்ளதையும் அவர்களின் அனுபவங்கள் மற்றும் அவதானங்களை திறந்து பிரதிபளிப்பதற்கு ஆர்வமாக உள்ளதை அவதானித்தது. பலவிதமான மட்டங்களில் காணப்படும் மக்களுக்கு செவிமடுப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது மிகவும் ஒரு அரிய சந்தர்ப்பமென உணர்ந்தோம். எனினும் நாங்கள் இந்த கலந்துரையாடல்களாவன இலங்கை மக்களின் கருத்துக்கள் மற்றும் எண்ணங்களின் மிகச் சிறிய ஒரு பகுதியையே பிரதிநிதித்துவப்படுத்துவதாக நாங்கள்

நன்கறிகிறோம். எனவே இந்த விஜயங்களினூடாக நாங்கள் பரந்தளவிலான தீர்மானங்களை எடுக்காமல் இருப்போம். சர்வதேச உதவிகளின் திறண்ட தாக்கங்களைப் பற்றிய கருத்துக்களை அதன் பல்வேறு கோணங்களில் நாங்கள் பதித்திருக்கிறோம். அதே போல் எதிர்வரும் மாதங்களில் உலகின் பல்வேறு பாகங்களில் இந்த செவிமடுக்கும் திட்டத்தைக் கொண்டு செல்லும் போது பொதுவான கொள்கைகள், செயல்கள், தீர்மானங்கள் மற்றும் முன்வைப்புக்களை எடுக்கலாம்.

**இலங்கையின் சர்வதேச உதவிகளின் வரலாறு பற்றிய சுருக்கமான விளக்கம்**

1948ஆம் ஆண்டு பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றுக்கொண்டதன் பின் இலங்கையானது பொதுநலவாய நாடுகளிடமிருந்து வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதற்கு ஆரம்பித்தது. அதே போன்று இலங்கை IMF மற்றும் உலக வங்கியோடு இணைந்தும் கடன் உடன்பாட்டை 1954ம் ஆண்டு கைச்சாத்திட்டது. 1950ம் ஆண்டுகளின் ஆரம்பப் பகுதிகளிலிருந்து 1970 காலப்பகுதி வரை இலங்கையானது அதன் வெளிநாட்டு உதவிகளின் மூலங்களை பரவலாக்கியதுடன் சீனா மற்றும் கீழைத்தேய நாடுகளிடம் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தியது. அதே போன்று இவை அரசுமயமான நாட்டின் கைத்தொழில்மயப்படுத்தலுக்கு பங்களிப்பு செய்தது. இந்த காலப்பகுதியில் அரசுகளுக்கிடையிலிருந்த அமைதியின்மை மற்றும் கெடுபிடியான நிலைமை போன்ற காரணங்களால் மேற்கத்தேய வெளிநாட்டுதவிகள் குறைந்தன. 1970களின் பிற்பகுதியில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் பின் இலங்கை வெளிநாட்டுதவிகளின் அதிகரிப்பை ஜப்பான், அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய அமெரிக்கா போன்ற நாடுகளிடமிருந்து கண்டது. IMF மற்றும் உலக வங்கி, உள்நாட்டில் அதன் காரியாலங்களை அமைத்ததுடன் கட்டமைப்பு சார் மாற்றங்கள் சில மற்றும் பொருளாதார சீரமைப்புத் திட்டங்களாவன விவசாயம் தேயிலைப் பயிர்ச்செய்கை மற்றும் கைத்தொழில்துறை போன்றவற்றைக் குறிவைத்தன.

வெளிநாட்டு நிதியுதவிகளின் ஒதுக்கீடு இலங்கைக்கு அதிகரித்தபோது பல சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் அதன் அபிவிருத்தி நிகழ்ச்சிகளை இலங்கையில் 1950களின் ஆரம்பப் பகுதிகளில் ஆரம்பித்தது. முதலில் பல சர்வதேச நிறுவனங்கள் வருமானமேற்படுத்தல், போஷாக்கு, கல்வி மற்றும் சுகாதாரம் போன்றவற்றை மையமாகக் கொண்ட வறுமைக் குறைப்பு மற்றும் சமூக அணிதிரட்டல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்தியது. இலங்கை அரசுக்கும், LTTE யினருக்கும் இடையில் ஏற்பட்ட இன அரசியல் முரண்பாட்டில் 1980களில் ஏற்பட்ட வெடிப்பைத் தொடர்ந்து சில சர்வதேச நிறுவனங்கள் பரிபாலனம், மனித உரிமை, ஜனநாயக எழுச்சி மற்றும் முரண்பாட்டுத் தீர்வு போன்ற விடயங்களிலும் ஈடுபாடு கொண்டது. வடக்கிலுள்ள LTTE கட்டுப்பாட்டில் வாழும் மக்களுக்கு மனிதநேய நிவாரணம், அபிவிருத்தி உதவிகளை வழங்க சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களின் தீர்மானமானது மத்திய அரசு மற்றும் இடதுசார் கட்சிகளினதும் கண்டனத்துக்கு உள்ளாகியது.

இலங்கையின் கரையோரப் பகுதியின் ¾ பங்கு பிரதேசங்களை அழித்த 2004 டிசெம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமியின் பின், முன்காணாத முறையில் பல சர்வதேச மற்றும் உள்ளூர் நிறுவனங்களும் தனியார் கொடை குழுக்களும் நாட்டின் தெற்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களுக்கு உதவிகளைக் கொண்டு வருவதற்காக அணிதிரண்டது. 15 வருடங்களாக மனிதநேய அபிவிருத்தி மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்பல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்தியிருந்த உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் தற்போது புதிதாக வந்த நிறுவனங்களோடு சேர்ந்து பணிபுரிய ஆரம்பித்தது. இந்த புதிய நிறுவனங்களின் அதிகரிப்பின் பின் உதவி பணியாளர்கள் இந்த நிலைமையை "நெருங்கிய மனிதநேய பிரதேசம்" என்று கூறுமளவுக்கு இட்டுச்சென்றது. 2005ம் ஆண்டிலிருந்து இலங்கை அரசு மற்றும் LTTE இனருக்கிடையில் காணப்படும் முரண்பாட்டு நிலைமையின் வெடிப்பானது உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் அதிகரிப்பையும் மனிதநேய பிரச்சினையை இன்னும் தீவிரப்படுத்துவதாகவும் வடக்கு மற்றும் கிழக்கின் முரண்பாட்டுப் பிரதேசங்களில் காணப்பட்டது. சுனாமி உதவி திட்டங்கள்

குறைந்து கொண்டு சென்றாலும் பல சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் இன்னும் மனிதநேய மற்றும் அபிவிருத்தி உதவிகளை வழங்குவதிலும் இந்த தற்போதைய அரசியல் நிலைமையில் சமாதானத்தை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளில் பங்களிப்பு செலுத்துவதிலும் தொடர்ந்து முன்செல்கின்றன.

**செவிமடுக்கும் குழு எதற்கு செவிமடுத்தது**

இந்த சேகரிக்கப்பட்ட பாரியளவான தகவல்களிலிருந்து புரியக்கூடிய வகையில் தெளிவைப் பெறவும் பகுப்பாய்வு செய்யவும் இந்த கண்டுபிடிப்புகளாவன முக்கிய கொள்கைகளுக்கு ஒழுங்கு செய்யப்பட்டன. நாங்கள் செவிமடுத்த மக்களின் கருத்துக்களை மிகச் சரியாகப் பெறவும் அவர்களை கௌரவப்படுத்தவும் முக்கியமான சில உதாரணங்களையும் சிலவேளை நேரடி கருத்துக்களையும் பதிந்துள்ளோம். இங்கு தெரிவு செய்யப்பட்ட நேரடி கருத்துக்களும் உதாரணங்களுமாவன அனுவங்கள், வகைகள் மற்றும் உள்ளார்ந்த கருத்துக்களை விளக்குவதாக அமைவதுடன் அவை நாங்கள் கேட்ட கருத்துக்களின் பிரதிபலிப்பாகவும் அமைகின்றது. தொடர்ச்சியாகப் பெற்ற ஒரே விதமான கருத்துக்களை நாங்கள் "சில", "கொஞ்சம்", "பல" மற்றும் "பெரும்பாங்கான" போன்ற சொற்பிரயோகங்களில் எடுத்துகாட்டுகின்றோம். ஒரு தனிநபரின் கருத்தையோ அல்லது பொதுவான கருத்தையோ நாங்கள் இங்கு பிரதிபலிக்கவில்லை. எனினும், அறிக்கையிலே தனிநபர்களின் கருத்துக்களாவன நேரடி கருத்துக்களாக எங்கள் கருத்துக்கள் சேர்க்கப்படாமல் தரப்பட்டுள்ளது. ஏனெனில், இந்த நன்கு வகைப்படுத்தப்பட்ட கருத்துக்களாவன அவர்களின் சொந்த கருத்துக்களாக பிரதிபலித்துக்காட்டுவதுடன் எமது தகைமைகாணல் அவசியப்படாது. அதே போன்று செவிமடுக்கும் குழுவின் பிரதிபலிப்புகளையும் அதோடு சேர்த்து அதிகளவான செவிமடுப்பு தேவைப்படும் எனக் கருதிய கேள்விகளையும் நாங்கள் இங்கு சுருக்கமாகத் தருகிறோம்.

## I. சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்றிறன் மற்றும் வினைத்திறன்

### a. *சர்வதேச உதவி முயற்சிகளின் பாராட்டு*

இந்த 6 பிரதேசங்களுக்குமான விஜயத்தின் பொதுவான தலைப்பானது விசேடமாக சுனாமி மற்றும் முரண்பாட்டின் தீவிரம் போன்ற மக்களின் முக்கியமான பிரச்சினைகளுக்கு வெளிநாட்டு உதவிகளைக் கொண்டு வருவதில் ஏற்ற முக்கிய பங்காகும். சுனாமியின் பின் உடனடியாக பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வியக்கத்தகு உள்நாட்டு தொண்டர் சேவை பெறப்பட்டாலும், வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களின் உதவிகள் இல்லாவிடில் சுனாமியில் உயிர் பிழைத்தோர் பசிப்பிணியால் இறந்திருப்பர் அல்லது பாதுகாப்பில்லாமல் கைவிடப்பட்டிருப்பர். தேசிய அரசானது பாதிக்கப்பட்ட வலுவிழந்த மக்களுக்கும் வறியோருக்கும் அவசியமான வசதிகளை சரியான நேரத்தில் பெற்றுக்கொள்வதற்கும் முடியாதிருப்பதை பலர் உணர்ந்தனர்.

"ஆனால், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் இல்லாவிடில் மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கும் அதேவேளை, அவர்கள் இங்கு இருந்திருக்கமாட்டார்கள். சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியானது மிகவும் பெறுமதியானது. அரசாங்கமானது எல்லாருக்குமே தனித்தனியாக சேவை வழங்க முடியாது".
புத்தளம், உள்ளூர் இடம்பெயர்ந்த மக்களின் விடயங்களைக் கையாளும் பரிபாலன உத்தியோகத்தர்.

"அரச சார்பற்ற நிறுவனங்களின் தலையீடானது மிக முக்கியம். ஏனெனில் அவர்கள் செயற்றிறனானவர்கள். அவர்கள் அரசாங்கம் போலல்லாமல் களத்தில் 'காணப்படக்கூடியவர்கள்'. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு சிறந்த வெளியீடுகள், கணக்காய்வு மற்றும் கணக்குக் காட்டும் தன்மை போன்றன காணப்படுகின்றது."

அநுராதபுரப் பாடசாலையொன்றின் பிரதி அதிபர்

"முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் காணப்படும் மக்களுக்கு ர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களாவன நீர் வினியோகம், முகாம்களுக்காக கழிவறை வசதிகளை ஏற்படுத்தல், உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களுக்கான ஆவணப்படுத்தல்கள், மக்களின் பிறப்புச் சான்றிதழ் வினியோகம் போன்ற மிக அத்தியாவசியமான சேவைகளை வழங்குகின்றனர்."
மட்டக்களப்பிலுள்ள இலங்கை மனித உரிமை குழுவொன்றின் உத்தியோகத்தர்

"ஒரு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமொன்று பணிபுரிந்த பிரதேசமொன்றிலே மாற்றங்கள் காணப்படுவதாக நம்புகிறேன். முன்பள்ளி மற்றும் ஆரம்பப் பள்ளி போன்ற துறைகளில் தெளிவான முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. அதே போல் அதிகளவான பிள்ளைகளுக்கான கல்வியைப் பெறுவதற்கும் இடம் ஏற்பட்டுள்ளது. நான் பாடசாலைக்குச் செல்வதைப் பற்றி மாத்திரம் கதைக்கவில்லை. ஆனால் சிறந்த தரமான வளங்கள் மற்றும் பொருட்கள் பற்றியும் நான் கூறுகிறேன். இது எங்களுடைய பாடசாலையை முன்னேற்றக் கிடைத்த ஒரு வெளியுதவி. பாடசாலை கட்டிடங்கள் கட்டிய வகையில் முன்பள்ளி முறைமையில் ஏற்பட்ட நீண்டகால ஒரு விளைவு எனக் கூறலாம். சிலவேளை சில குறைகள் இருந்தாலும் மக்கள் தாங்களாகவே முகாமைத்துவப்படுத்த முடியுமானவர்களாக உள்ளனர். அரசாங்கமும் இதுபோன்ற வெற்றிகரமான திட்டங்களை நன்கறிந்துள்ளனர். எனவே அவர்களும் உதவிகள் தர முன்வந்துள்ளனர்."
பதுளை நகரில் மாகாண உத்தியோகத்தர்

"அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு LTTE இனரின் பிரச்சினைகளுக்கு நிதம் முகங்கொடுக்கின்றனர். அவர்களுக்கு அரசு மற்றும் LTTE இரு பிரிவினரதும் அழுத்தங்கள் காணப்படுகின்றன. அரச சார்பற்ற நிறுவனங்களிடமும் சிலவேளை சில குறைகள் காணப்பட்டாலும் அவர்களின் முயற்சியானது இன்னும் நன்றாகவே இருக்கிறது. இல்லையெனில் மரணம், பட்டினி மற்றும் அல்லல் போன்றன காணப்படும். இந்த நல்ல செயல்களாவன தொடர்ந்து செல்ல வேண்டும். அரச சார்பற்ற நிறுவனங்களாவன இங்கு வந்திருப்பது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் அவர்களின் பிரச்சினைகளிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்குமே. சிலவேளை அரசு கூட இதற்குத் தடையாக உள்ளது."
மட்டக்களப்பிலுள்ள கிறிஸ்தவ மதத் தலைவர்

"[ஒரு] சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமானது இங்கு 10 வருடங்கள் சேவை புரிந்தது. உள்ளூர் வைத்தியசாலைக்கான ஒரு நோயாளி அறை இவர்களால் கட்டப்பட்டது. இங்கு விரைவாக வந்து விரைவாக சென்ற ஏனைய சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் போலன்று இந்த சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் இங்கு 10 வருடங்கள் இருந்தார்கள். இங்கு வைத்தியசாலைக்கான ஒரு நோயாளி அறை, கிராமத்திற்கான ஒரு பாலம், சுத்தமான குடிநீருக்கான வசதி போன்றன காணப்படுகின்றது. இது போன்ற வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட கிராமங்களிலே பாரிய மாற்றங்கள் காணப்படுகின்றன."
பதுளை மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்

### *B. வேகம், போட்டி மற்றும் பிரதிபண்ணல்*

இருந்தாலும் சுனாமியின் பின் நிவாரண உதவி விநியோகத்தைப் பற்றிய அவர்களின் பிரதிபலிப்பின் போது அதிகமான மக்கள் அதற்குப் பதிலளிக்க விரைவதை விட அதிக நேரத்தை நிறுவனங்கள் எடுப்பதன் அவசியத்தைப் பற்றிப் பேசினர். பொருட்களை விநியோகிப்பதிலுள்ள வேகம், நிதிகளை விரைவாக செலவளிப்பதிலுள்ள தேவையும் விருப்பமும் உள்ளூர் மட்டத்திலே அவசரமான தீர்மானங்கள் எடுப்பதற்கும் அனாவசியமான தலையீடுகள் மேற்கொள்வதற்கும் அடிக்கடி வழிவகுத்ததாக மக்கள் எண்ணுகின்றனர். கிழக்கிலுள்ள சில மீள்குடியேற்ற கிராமங்களாவன, சரியான சுற்றாடல் மதிப்பீடு இல்லாமல் வெள்ளம் வரக்கூடிய பிரதேசங்களில் கட்டப்பட்டுள்ளதையும்

தற்போது அங்கு வடிகாலமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதில் முகங்கொடுக்கும் பிரச்சினைகளைப் பற்றியும் மக்கள் சுட்டிக்காட்டினர். ஏனையோர் புனர்நிர்மானத் திட்டங்கள் விரைவுபடுத்தப்பட்டதாகவும் ஒன்றுக்கும் உதவாததாகவும் உதாரணங்களோடு சுட்டிக்காட்டினர். உதாரணமாக நிரல்களாகக் கட்டப்பட்ட வீடுகளில் சொந்தக்காரர்கள் காணப்படாமையும், பாவிக்கப்படாத தண்ணீர்த் தாங்கிகள் போன்றன. தேவைகளையும் சூழமைவையும் மதிப்பீடு செய்ய அவசியமான காலத்தை எடுப்பதுவும், திட்டமிடலில் உள்ளூர் அதிகாரகளையும் சமூகத்தையும் இணைத்துக்கொள்வதையும் சிறந்த விளைவுகளுக்கு இட்டுச் செல்வதுடன் பரிபாலனம், கணக்குக் காட்டல் மற்றும் வெளிப்படைத் தன்மை பொறிமுறைகளை வலுப்படுத்துவதாக அமையும் என்ற பொதுவான கருத்து காணப்பட்டது.

“இங்கு ஒரு குறிப்பிட்ட காலத்துக்குக் காணப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு சமூகங்களில் எவ்வாறு வேலை செய்வது என்ற நல்ல எண்ணம் காணப்பட்டது. ஆனால் இந்த புதிய அரச சார்பற்ற நிறுவனங்களின் வேகமானது ஒரு பாரிய பிரச்சினையொன்றை தோற்றுவித்தது. விசேடமாக இந்த புதிய அரச சார்பற்ற நிறுவனங்கள் - அவர்கள் எல்லோருக்கும் வீடுகள் கட்டவேண்டிய தேவை இருந்தது. மக்களின் உண்மையான தேவைகளைப் புரிந்து கொள்வதில் சிரமங்கள் இருந்திருக்கலாம். ஆதலால் ஒருவர் வேகமாகச் செயற்படக்கூடாது, கவனமாக இருக்க வேண்டும்.”
15 வருடங்களுக்கு மேல் அனுபவமுள்ள இலங்கை உதவிப் பணியாளர்

“மக்களுக்கு இங்கு வந்து அவசரமாக வீடுகள் கட்ட வேண்டிய தேவையிருந்தது. அவர்களுக்கு இந்த பிரதேசத்திலுள்ள மண்ணின் வகைக்கு எவ்விதமான வீடுகள் தாக்குப்பிடிக்கும் என்ற எண்ணம் காணப்படவில்லை. அவர்கள் உதவி வழங்க விருப்பப்படுவதைப் புரிந்துகொண்டு அதை மெச்சுகிறோம். ஆனால் அவர்கள் இங்கு வந்து அந்த விடயங்களை அவசரமாகச் செய்ய வேண்டுவதால் எங்களுக்கு கௌரவக் குறைவு ஏற்படுகின்றது. ஏனெனில், வீடுகள் தேவைப்படாத மக்கள் கூட இப்போது வீடுகள் வைத்திருக்கிறார்கள்.”
மட்டக்களப்பிலுள்ள உள்ளூர் சிவில் சமூகத் தலைவர்

“பங்களிப்பு மற்றும் முரண்பாட்டுக் கூறுணர்வு போன்ற சிறந்த அபிவிருத்திக் கொள்கைகளை நாம் அறிந்திருந்தாலும் பேரழிவின் பின் காணப்படும் நிவாரணத்தில் காணப்படும் துரிதப்படுத்தலால் ஒரு சிலராலேயே இது போன்ற கொள்கைகளை நிலைநாட்ட முடிந்தது. ஏனெனில் பணத்தை விரைவாகச் செலவு செய்வதில் காணப்படும் தேவை காரணமாக.”
பதுளையிலுள்ள வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களோடு பங்காளராக இருக்கும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்

“உள்ளூர் முறைமையைப் பயன்படுத்த கால நேரத்தை எடுங்கள். தற்காலிக உறையுள் மிகவும் முக்கியமானதும் அதேவேளை வேகமாகக் கொடுக்கப்பட வேண்டியதுமாகும். நிரந்தர வீடமைப்பானது சரியான முறையில் ஏற்படுத்திக்கொடுக்க அதிக நேரம் தேவைப்படும் ஒரு விடயம். அதைச் சரியாகச் செய்யுங்கள், அவசரப்படாதீர்கள்.”
மட்டக்களப்பில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமமொன்றின் சமூகமொன்றின் அங்கத்தவர்

“சிலநேரம் திட்டங்கள் விரைவுபடுத்தப்பட்டாலும் பயனாளிகள் அதன் விளைவுகளைப் பயன்படுத்தாமல் இருக்கின்றனர். மற்றுமொரு வகையில் திட்டத்தின் நோக்கங்கள் அடையப்பட்டாலும் அதில் விளைவுகளோ அல்லது பயனாளிகளின் பங்களிப்போ காணப்பட மாட்டாது.”
புத்தளத்திலுள்ள உள்ளூர் உதவிப் பணியாளர்

உதவி நிறுவனங்களுக்கிடையிலான போட்டிப் பிரச்சினையானது சில பிரதேசங்களில் முன்கொண்டுவரப்பட்டன. இது போன்ற போட்டிகளின் ஒரு விளைவாக மக்கள் கண்டது புத்தளத்தில் உதவித் தலையீடுகளாவன முடிவுக்குக் கொண்டுவராத நிலை

காணப்பட்டமையே. ஒருவர் பின்வரும் உதாரணத்தை எம்மோடு பகிர்ந்து கொண்டார். “ஒரு அரச சார்பற்ற நிறுவனம் ஒரு திட்டத்தை ஆரம்பிக்கும் போது அதேவேளை இன்னொரு அரச சார்பற்ற நிறுவனம் அக்கிராமத்துக்கு வந்தால் இந்தப் போட்டித் தன்மை காரணமாக முதலில் வந்த அரச சார்பற்ற நிறுவனமானது தனது உதவிகளை ரத்துச் செய்து வேறொரு இடத்திற்குச் சென்றுவிடுவார்கள். ஆதலால் இறுதியில் மக்கள் தான் இதனால் பாதிக்கப்படுகிறார்கள்.”

அநுராதபுரத்திலுள்ள ஒரு விதவை கூறுகிறார் “சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் வந்து ஒருவருக்கொருவர் போட்டியிட்டுக்கொண்டு ஒரேவிதமான நிகழ்ச்சிகளை நடாத்தினார்கள்.”

“ஒரு முகாமுக்கு உதவி வழங்குவதற்கான பொறுப்பை ஒரு நிறுவனம் ஏற்றுக்கொண்ட பின் வேறொரு நிறுவனம் அக்கிரமாத்துக்கு உள்வருவதை அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். அதனால் தான் நாங்கள் பெருவாரியான உதவிகளைப் பெறுவதற்கு முடியாதுள்ளது. இது அரச சார்பற்ற நிறுவனங்களின் முரட்டுத்தனமான செயலாகும்.”
புத்தளத்துக்கு வெளியில் ஒரு முகாமிலுள்ள உள்ளூரில் இடம்பெயர்ந்த நபர் ஒருவர்

உதவி நிகழ்ச்சிகள் வினைத்திறனாகவும் செயற்றிறனாகவும் காணப்படுவதற்குறிய ஆலோசனைகளையும் மக்கள் வழங்கினர்.

“அரச சார்பற்ற நிறுவனங்கள் மிகவும் சுறுசுறுப்பாகக் காணப்பட வேண்டும். சமூகத்தின் தேவையை அடையாளங்கண்டவுடன் நடைமுறைச் சாத்தியமாகவும் காணப்பட வேண்டும். எங்களுக்குத் தேவை கொள்கைகளல்ல மாற்றமாக நடைமுறைச் சாத்தியமான சமூகத்தை மையப்படுத்திய நிகழ்ச்சிகள்.”
மட்டக்களப்பிலுள்ள உதவி நிறுவனங்களை ஒருங்கிணைப்பதற்குப் பொறுப்பான பாதுகாப்புத்துறை அதிகாரி

பலபிரதேசங்களிலுள்ள மக்கள் *பிரதிபண்ணலைப்* பற்றி அதை ஒரு பிரச்சினையாகப் பேசிய அதே வேளை அதில் வளங்கள் வீணாவதாகவும் கருதினர். மட்டக்களப்பிலுள்ள உள்ளூர் அரச அதிகாரியொருவர் கூறுகிறார் “சுனாமிக்குப் பின் 160க்கும் மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் வந்திருந்தாலும் அவர்கள் ஒருவருக்கொருவர் ஒருங்கிணையவில்லை. அவர்கள் தங்கள் தனிப் பாணியில் நடந்து கொண்டனர். ஆகவே அவர்கள் பிரதிபண்ணிக் கொண்டனர்.”

அநுராதபுத்தில் ஒரு நிறுவனம் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களுக்கு பிளாஸ்டிக் கோப்பைகள் வழங்கினர். அதே போன்று மறுநாளும் இன்னொரு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமொன்று வந்து அதே விடயத்தைச் செய்தனர். இந்த சமூகத்தில் தற்போது பிளாஸ்டிக் கோப்பைகள் அடுக்கிய களஞ்சிய சாலையொன்று காணப்படுகின்றது. ஒரு பௌத்த பிக்கு கூறினார், ஒரு வெளிநாட்டு நிதிநிறுவனம் 5 பால் சேகரிக்கும் நிலையங்கள் கட்டப்பட்டு அது தற்போது எவ்வித செயற்பாடுகளும் இல்லாத நிலையில் காணப்படுவதைக் கூறினார். பாலைச் சேகரிப்பதற்கான ஒரு இடைத்தர நபரில் தங்கியிருக்கும் உள்ளூர் மக்களானவர்கள் சேகரிக்கும் நிலையங்கள் தொடர்ந்து இயங்குவதற்கான முதலீட்டைச் செய்யவில்லை, அதை ஒரு தேவையாகக் கருதி அங்கிருந்து ஆரம்பிப்பதைப் பற்றி நோக்கவில்லை, இந்த உதவியானது ஏற்கனவே அங்கு காணப்படும் பொறிமுறையின் பிரதிபண்ணல் என்று காணவில்லை.

### *C. இலக்குப் பிரதேசங்கள் மற்றும் பயனாளிகளின் தெறிவு*

புத்தளத்தைச் சுற்றிவரவுள்ள பிரதேசங்களின் ஒதுக்குப்புறமான முகாம்களிலுள்ள சில மக்கள் அங்கு கிடைக்கப்பெற்ற பெரும்பாலான சர்வதேச உதவிகள் அரசியல் செல்வாக்கு காரணமாகவே கிடைத்தன எனக் கூறினர். ஏனையோர் இலக்குப்

பிரதேசங்களைத் தெரிவு செய்வதானது நிறுவனங்களின் சுய பாதுகாப்பு கருதியேயாகும் எனக் கூறினர்.

“INGOs அவர்களுக்கு வசதியாக அமையும் பிரதேசங்களுக்கு மாத்திரமே உதவிகளை வழங்குகின்றனர். அவர்கள் உள்ளே காணப்படும் பிரதேசங்களுக்கு அங்கே பாதிக்கப்பட்டிருக்கும் IDP மக்களுக்கோ ஏனைய மக்களுக்கோ உதவிசெய்ய மாட்டார்கள். உதவி வழங்கும் சுருக்கமான வழிமுறைகளை அவர்கள் தேடுகிறார்கள். அதன் விளைவாக எங்களைப் போன்ற மக்கள் மிகவும் உதவியற்றவர்களாகவும் பாதிக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்றோம்.”
புத்தளத்திலுள்ள ஒதுக்கமான பிரதேசத்திலுள்ள IDP முகாமொன்றிலுள்ள பெண்ணொருவர்

“ஏனையோர் உதவி பெறும் அதேவேளை நாங்கள் எவ்வித உதவிகளும் பெறாமலிருக்கிறோம். ஏனெனில், இந்த கிராமத்தின் முகவாயிலானது பெரும் பெரும் வீடுகளால் ஆக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் இந்த பெரிய வீடுகளைப் பார்த்து கிராமத்தின் உள்ளே வந்து பார்க்காமல் சென்று விடுகிறார்கள்.”
புத்தளத்துக்கு வெளியிலுள்ள IDP முகாமொன்றிலுள்ள பெண்ணொருவர்

“தெரிவு செய்யப்பட்ட இலக்குப் பிரதேசங்கள் எந்த நேரமும் வலுவிழந்த பிரதேசமாகக் காணப்படாது. மாற்றமாக அது இலகுவான பிரதேசமாகவும் இருக்கும்.”
அநுராதபுரத்திலுள்ள விதவைப் பெண், சமூகத் தலைவி

“எங்களை விடவும் மிகவும் அதிகளவில் உதவி தேவைப்படும் மக்கள் இருக்கிறார்கள். ஆனால், நாங்கள் தெரிவு செய்யப்பட்டோம். அதேவேளை எங்களுக்கு உதவி வழங்குவதற்கான கோரிக்கையை நாங்கள் நிராகரிக்க மாட்டோம். இங்கிருந்து 5முஆ தொலைவில் ஒரு கிராமம் உள்ளது. அது மிகவும் வறிய நிலையிலுள்ளது. அவர்களுக்கு எந்த உதவியும் சென்றடையவில்லை. அந்த மக்களை சென்றடைவதற்கு உள்ளூர் அதிகாரிகள் வேண்டியும் அம்மக்கள் அவர்களின் தேவைகளை வெளிக்கொண்டு வருவதற்கான எந்தவொரு அறிவோ வசதியோ படைத்திருக்கவில்லை.”
அநுராதபுத்திலுள்ள கடை உரிமையாளர்

“கொழும்பிலுள்ள அரசியல் தலைமைத்துவமானது வெளியிலிருந்து நிதிகளை உள்ளூர் பிராந்தியங்களுக்குக் கொண்டுவருகின்றது. தேசிய அரசை நிதிவழங்கும் நிறுவனங்கள் வந்து சந்திக்கும் போது அவர்களும் அது போன்ற பிராந்தியங்களுக்கே வழிநடாத்தி அனுப்புகின்றார்கள். பெரும்பான்மையான INGOs அது போன்ற மாவட்டங்களிலே கூடியிருப்பது இந்த உதவிகளின் அரசியல்மயப்படுத்தலாலாகும். அவர்களுக்கு ஒன்று யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாத்திரம் உதவிசெய்யமுடியுமாக இருக்கும் அல்லது அரசாங்கத்தாலேயே சில பிரதேசங்களுக்கு வழிநடாத்திச் செல்லப்படுவார்கள்.”
ஊவா மாகாண தோட்டத் தமிழர்களுடன் பணிபுரியும் உள்ளூர் CBO ஒன்றின் தலைவர்

“சரியாக சிந்தித்து வெளிக்கொணரப்பட்ட ஒரு முறைமையில் பொதுவாகப் பெண்களும் விசேடமாக விதவைகளும் வெளிப்படையாகத் தெரியுமளவுக்கு இலக்குக் குழுவுக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். இந்த இலக்குக் குழுக்களுடன் நாம் இணைந்து வேலை செய்தாலும் அவர்களுடைய அபிவிருத்திக்கான பங்களிப்பின் சாத்தியப்பாடுகளை ஒரு போதும் புரிந்து கொள்ளப்படவில்லை. பெண்களின் குடும்பத்தில் வகிக்கும் பாத்திரத்தைப் பற்றி தீவிரமாக ஆராயாப்படுவதில்லை. உதாரணமாக பெண்கள் அபிவிருத்தி நிகழ்ச்சிகளில் அதிகமான நேரம் பெண்கள் செலவழிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதால் அவர்களின் நேரம் மற்றும் பாத்திரங்களில் மாற்றீட்டு விளைவுகள் ஏற்படும்.”
கொழும்பிலுள்ள சர்வதேச நிறுவனமொன்றின் நிகழ்ச்சிப் பணியாளர்

எல்லா செவிமடுக்கும் குழுக்களும் பயனாளிகள் தெரிவு தொடர்பாக அதிகமான விடயங்களைச் செவிமடுத்தனர். சில மக்கள் பயனாளிகள் தெரிவு முறையானது நியாயமாகவும் பொருத்தமான முறையிலும் நடந்ததாக தம் அனுபவங்களை விளக்கினர். உதாரணமாக காலியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள ஒரு கிராமிய நபர் கூறுகிறார் “வலுவிழந்த பிரிவை மக்களாகவே தீர்மானித்து அவர்களாகவே மக்களை ஒரு தொகுதியில் அடக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். அது அனைவரினதும் முன்னிலையில் நடந்தது. திட்டமிடல் முறைமையின் ஒரு பகுதியாக இருப்பதுடன் அது மக்களின் முன்னிலையிலேயே இடம்பெற்றது. இது போன்ற ஒரு பொதுவான முறைமையால் மக்களும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். அது சரியான வழியில் இடம்பெற்றது.”

எனினும், பெரும்பாலான மக்களின் குரல்களாவன பயனாளிகள் தெரிவு மற்றும் வகைப்படுத்தல் பொறிமுறையின் சிறந்த விளக்கம், அதிகமான தெளிவுத்தன்மை மற்றும் கூடிய பங்களிப்புத்தன்மையின் தேவை பற்றியே வலியுறுத்தின. இந்த கருத்துக்களும் பரிந்துரைகளும் அவசர நிவாரண உதவிகள் பெறப்பட்ட பிரதேசங்கள் மற்றும் நீண்ட கால அபிவிருத்தி உதவிகள் பெறப்பட்ட பிரதேசங்களிலிருந்தும் பெறப்பட்டன. அதிகமான மக்கள் ஏன் உள்ளூருக்குப் பொருத்தமான வலுவிலழந்த பிரிவுபடுத்தும் அளவுகோள்களை மிகவும் அருமையாகப் பாவிக்கிறார்கள் எனக் கேட்டனர்.

பதுளையிலுள்ள ஒரு கிராமத்தில் சில தாய்மார்கள் தெறிவுப் பொறிமுறைமையை அவர்கள் புரிந்து கொண்டதாகக் கூறினார்கள். ஒரு நிறுவனத்தின் பணியாளர் ஒரு வீட்டுக்கு முன்னே அமர்ந்திருக்கும் அந்தக் குடும்ப அங்கத்தவர்களை வைத்து புகைப்படம் பிடித்து தெரிவு செய்து உதவிக்காகத் தெரிவு செய்ததன் பின் தலைமை காரியாலயத்திலுள்ள ஒரு நபர் “மிகவும் வறுமையாகக்” காட்சியளிக்கும் புகைப்படத்தைத் தேர்ந்தெடுப்பார். அவர்கள் இந்த முறைமையானது நியாயமானததாக இல்லை என நினைத்தார்கள். உதாரணமாக அநுராதபுர கிராமமொன்றிலுள்ள இன்னொருவர் இதே போன்ற ஒரு கருத்தைப் பகிர்ந்து கொண்டார்: “பயனாளிகளைத் தெரிவு செய்யும் அளவுகோளானது நிச்சயமானதாக இல்லை. விசேடமாக புகைப்படங்களை மையமாக வைத்து அநுசரனை நிகழ்ச்சிகள் வழங்கும் நிறுவனங்கள்.”

“நிறுவனங்கள் ஒவ்வொரு வீடாகச் சென்று அவர்களின் தேவைகளையும் கொள்ளளவையும் புரிந்து கொண்டு யாருக்கு உதவி வழங்க வேண்டுமென்று முடிவெடுக்க வேண்டும்.”
பதுளை கிராமமொன்றிலுள்ள இரண்டு பிள்ளைகளின் தாயார்

“அவர்கள் வருவார்கள், தரவுகளை எடுப்பார்கள். பெரும்பாலாக உலருணவுகள் தான் குடும்பங்களுக்கு வினியோகிக்கப்படுகிறது. அவர்கள் எத்தனை தனிநபர்கள் இருக்கிறார்கள் என்பதில் கணக்கில் எடுப்பதில்லை. 10 பிள்ளைகள் கொண்ட ஒரு குடும்பம் பெறும் அதே அளவை கணவன் மனைவியைக் கொண்ட ஒரு சிறிய குடும்பமும் பெறும்.”
மட்டக்களப்பிலுள்ள உள்ளூர் பெண்கள் குழுவின் இளம் பெண் தொண்டர்

“முன்னைய முகாம்களில் NGOக்களிடமிருந்து அதிகமான சேவைகளைப் பெற்றோம். இங்கு அவ்வளவாக எங்களுக்குக் கிடைப்பதில்லை. வேறு NGOக்கள் சிறிய குழுக்களுக்கு உதவுகின்றனர். நாங்கள் தான் மிகப் பெரிய முகாம். NGO க்களோ மட்டுப்படுத்தப்பட்டு காணப்படுகின்றது. சிறிய குழுக்களுக்கு உணவு வழங்குவது மிகவும் இலகுவானது. அவர்கள் இங்கு வந்தால் அவர்கள் எல்லோருக்கும் சமமாகக் கொடுக்க வேண்டியேற்படும். அது சாத்தியமில்லை.”
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள IDP முகாமிலிருக்கும் தமிழ் நபர் ஒருவர்

“தேவைப்படுபவர்களுக்கும் மிகவும் வறுமைப்படுபவர்களுக்கும் உதவும்படி நாங்கள் INGOக்களிடம் வேண்டுகின்றோம். நீங்கள் இங்கு வந்து முதலில் சரியான தகவல்களைப் பட்டியல்படுத்தும்படி கெஞ்சிக் கேட்கின்றோம்.”
புத்தளத்துக்கு வெளியிலுள்ள கிராமமொன்றில் வதியும் ஒருவர்

### *D. பொருத்தமான தன்மையும் உதவியின் தரமும்*

உதவி நிகழ்ச்சிகள் சமூகத்தின் தேவையை நிறைவுபடுத்தாத விடயத்தைப்பற்றி ஒரு சிலர் கலந்துரையாடினர். சிலர் இந்த உதவிகளின் தரக்குறைவைப் பற்றியும் கதைத்தனர். சுனாமி விநியோகங்களின் மேலதிகமான பொருட்களானது கடலோரத்திலிருந்து வெகுதூரத்திலுள்ள அவர்களின் பிரதேசத்துக்கு வந்து சேர்ந்ததாக அநுராதபுரத்திலுள்ள பிரதி அதிபர் எங்களுக்குக் கூறுகிறார். போத்தலிலடைக்கப்பட்ட குடிபானம் மற்றும் மருந்துப் பொருட்கள் போன்ற சில வினியோகப் பொருட்கள் காலாவதியாகிக் காணப்பட்டதுடன் அதிகமான மாணவர்கள் அதனால் நோய்வாய்ப்பட்டார்கள். சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைவிட அவ்வாறு பாதிக்கப்படாத பிரதேசங்கள் இரண்டாந்தரமாகக் கருதப்படவில்லை எனவும் அவர் கேட்டார்.

“சில முகாம்களில் கிணறுகளுக்கறுகாமையில் மலசலகூடங்கள் கட்டப்பட்டு அதன் விளைவாக பீக்கல் பக்றீரியா நீரில் கலந்து நோய்கள் பரவக் காரணமாகின.”
புத்தளத்தில் காணப்படும் உள்ளூர் ஆய்வு நிறுவனமொன்றின் பணியாளர்

“அவர்களின் (INGO மற்றும் நிதிவழங்கும் நிறுவனங்கள்) பணிகள் கூடிய தரத்தில் காணப்படவேண்டும். பிரித்தானியர் ரயில் பாதைகளையும் வீதிகளையும் பல தசாப்தங்களுக்கு முன்னே அமைத்தனர். அவை இன்றும் நன்றாக இயங்குகின்றன. இதுபோன்ற தரமான உட்கட்டமைப்பு வசதிகள் எங்களுக்குத் தேவை. பாதிக்கப்பட்ட வீதிகளல்ல.”
பதுளையிலுள்ள விவசாயி ஒருவர்

“சற்று எனது வீட்டுக்கு வந்து சுற்றிவர உள்ள எல்ல பயனாளிகளையும் சற்றுப் பாருங்கள். கால்நடைகளும் தென்னம் பிள்ளைகளும் வினியோகிக்கப்பட்டுள்ளன. கால்நடைகள் மேய்வதற்கு ஒரு பொருத்தமான இடமில்லை. இந்த காரணத்தால் கால்நடைகளை நாங்கள் விற்க நேரிட்டது. தென்னங் கன்று கூட ஒழுங்காக பயிர்செய்யப்படவில்லை. ஏனெனில் அதற்குக் கூட இடமில்லை. ஆனாலும் வேறு சில நிறுவனங்களாவன அவர்களின் திட்டங்களையும் நிகழ்ச்சிகளையும் நன்றாக திட்டமிட்டு வெற்றிகரமாகச் செய்து முடித்தனர்.”
மட்டக்களப்பிலுள்ள மீள்குடியேற்ற கிராமமொன்றின் சுனாமியால் பாதிக்கபட்ட ஒரு நபர்

“உதவியானது மக்களின் ஜீவனோபாயத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். ஆதலால் அவர்களின் ஜீவனோபாயத்தை முன்னேற்றக்கூடியதாக அமையும். அவர்களுக்குத் தேவைத் தொழிற்சாலையாக இருக்கலாம். மாறாக அவர்கள் வந்து ஒரு தும்புத் தொழிற்சாலையை நிறுவக் கூடாது.”
காலிக்கு வடக்கேயுள்ள தோட்டம் ஒன்றின் கூலிவேலையாளர்

“உள்ளூர் தொழிற்சந்தையின் உண்மையான நிலைமைக்குப் பொருத்தமானதாக பல INGOக்களால் நிதிவழங்கப்பட்ட பல தொழிற்பயிற்சி நிகழ்ச்சிகள் இளைஞருக்குக்கு அவர்களால் பாவிக்கப்பட முடியாத திறமைகள் வழங்கப்படுகின்றன. உதாரணமாக இந்த பிரதேசத்தல் வீடுகட்டுபவர்கள் மற்றும் குழாய் தொட்டி சீர்திருத்துவோருக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்த பிரதேசத்தில் நடக்கும் எல்லாவிதமான குழாய்த்தொட்டி சீர்திருத்த வேலைகளும் அயல் மாகாணங்களிலிருந்து வரும் ஒப்பந்ததாரர்களின் ஊடாகவே நடக்கின்றன. ஒரு தொழில்பயிற்சி நிலையமாவது இந்த திறமைகளை வளர்ப்பதில் கவனம் செலுத்தவில்லை. இன்னொரு குறையாகக் காணப்படும் திறமையாவது வாகன

மின்கம்பி திருத்துவது. இப்பயிற்சி கூட ஒருவராலும் வழங்கப்படவில்லை. மாறாக அவர்கள் கணணிப் பயிற்சியை வழங்குகிறார்கள். இது பாடசாலையை விட்டு வெளியேறியவர்களுக்கு எந்த விதத்திலும் பயனில்லை.”
ஊவா மாகாணத்தில் இந்திய வம்சாவழி தமிழர்களோடு பணிபுரியும் உள்ளூர் CBO தலைவர்

### *E. நீண்டகால தலையீடுகள் எதிர் குறுகிய கால திட்டங்கள்*

குறுகிய கால திட்டங்களை விட நீண்டகால அபிவிருத்தித் தலையீடுகள் பயனுள்ளதாக அமையும் என்று எண்ணியிருந்தார்கள். குறிப்பாக நிதிவழங்கும் நிறுவனங்கள் மற்றும் INGO க்கள் உட்கட்டமைப்பு அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் கல்வி போன்ற விடயங்களுக்கு பங்களிக்க முடியும் என்று மக்கள் எண்ணுகிறார்கள். நீண்டகால நோக்குடன் வந்து அதிகமான காலம் தங்கியிருந்து பணிபுரியும் அபிவிருத்தி நிறுவனங்களாகவன கூடிய வினைத்திறனாக அபிவிருத்தி பணிகளின் அனைத்து கட்டங்களிலும் சமூகத்தை உட்படுத்துவதில் கூடிய வினைத்திறனாக இருப்பதுடன் அவர்கள் வெளியேறும் போது ஏற்கனவே தயார்படுத்தப்பட்டிருக்கும் மக்களுக்கு அதன் உரிமையை வழங்குவதற்குத் தகைமையுடையவர்களாக இருப்பார்கள்.

“NGO பணிகள் அடுத்த சந்ததியினருக்காகத் தயார்படுத்தப்பட்டிருக்கும் அதே வேளை நாங்கள் கல்வி, விவசாயம், தொழில்பயிற்சி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டும். விவசாயிகள் ஏற்கனவே பழக்கப்பட்டதற்கு மாற்றமாக மாற்றீட்டு ஜீவனோபாய உத்திகளுக்கான பயிற்சிகளைக் கொண்டுவந்ததில் நிறுவனங்கள் வெகுவாக வெற்றியீட்டின. இது திட்டமிடலை இன்னும் முன்கொண்டு செல்வதற்கு ஒரு உந்துதலாக அமைந்தது.”
அநுராதபுரத்தில் இருக்கும் ஒரு கிராமப் பெண்

“[ஒரு INGO] இங்கு சடுதியாக வந்து, பணத்தைக் கொட்டி பின் சென்றுவிட்டார்கள். இது எங்கள் வலுவைக் கூட்டாது. [இன்னொரு INGO] நிகழ்ச்சி எமக்கு பயிற்சி, நுன் கடன் மற்றும் கடன் வசதிகளைத் தந்தது. இது எங்கள் பொருளாதார பலத்தைக் கட்டியெழுப்ப உதவியது.”
பதுளை மாகாணத்திலுள்ள ஒரு கிராமப் பெண்மணி

“சமூகத்திடன் அவர்களின் உரித்தைக் கையளிப்பதற்கான முக்கியமான காரணியாக நீண்டகால நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. அதிகமான திட்டங்கள் குறுங்காலத் திட்டங்களாகும். INGO க்கள் வந்து திட்டங்களைச் செய்து சென்றுவிடுகின்றனர். குறுங்காலத் திட்டங்களில் கவனம் செலுத்தும் திட்டங்களாவன இலங்கையில் நாம் அல்லல்படும், தங்கிநிற்கும் தன்மைக்கு பங்களிப்புச் செய்கின்றது.”
அநுராதபுரத்திலுள்ள பௌத்த பிக்கு

“இங்கு புழக்கத்திலுள்ள சிறிய தொகை கொண்ட நிதியாவன திட்டங்களை மையப்படுத்தியும் 6 மாதம் முதல் 1 வருட காலப்பகுதிக்கு மட்டுப்படுத்தியும் காணப்படுகின்றன. இதுபோன்ற ஒரு குறுகிய கால வரையரையில் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியையும் நேர்மறையான மாற்றங்களையும் எவ்வாறு அடைய முடியும்?”
ஊவா மாகாணத்திலுள்ள முஸ்லிம் பெண்கள் அமைப்பைத் தலைமை தாங்கும் ஒரு பெண்மணி

“நாம் அனைவரும், மக்களின் அபிவிருத்திக்காகவும் அவர்களின் அவர்களின் நிலைமையை முன்னேற்ற எண்ணும் மக்களும் நிறுவனங்களும் அதிகமான நேரங்களில் ‘மேல்மட்டங்களிலிருந்து’ வந்து அதிகமான ‘ஒட்டு போடும்’ வேலைகளை இந்த சமூகங்களிலே செய்கின்றனர். எங்கள் சிறிய திட்டங்களாவன இலகுவாக முகாமைத்துவப்படுத்த முடியும் அதேவேளை குறுகிய காலப் பகுதியில் திட்டக்

குறிக்கோள்களைக் காண முடியும். ஆனால் மக்களின் அபிவிருத்தியானது பழக்கவழக்கங்கள், நிருமாணத்தன்மை மற்றும் வலுவூட்டல் போன்ற அடிமட்டத்தில் காணப்படும் பிரச்சினைகளைக் கவனத்தில் கொள்வதையும் அவற்றில் மாற்றங்கள் காண்பதிலும் வேண்டி நிற்கின்றது. இந்த மதிப்புகள் மற்றும் பலத்தைக் கட்டியெழுப்ப அதிகமான காலம் தேவைப்படும் அதேவேளை இவற்றை நம் அறிக்கைகளில் இலகுவாக அறிக்கையிட முடியாது."
பதுளையிலுள்ள கத்தோலிக்க மதகுரு

புத்தளத்தில் நிறுவனங்களாவன மிகவும் ஆர்வமுள்ளவர்களாக இருக்க வேண்டியதுடன் அவர்களுடைய உதவிகளை அவர்கள் விரும்பும் நீண்டகால மாற்றத்துடன் தொடர்பு படுத்துவதற்கும் முன்வந்தார்கள். ஒருவர் எண்ணினார் "உதவி வழங்கும் நிறுவனங்கள் அவர்கள் உதவி வழங்கும் போது மக்களின் வாழ்க்கையில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்த முயற்சி செய்யவில்லை."

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தொடர்ந்து எழுப்பப்பட்ட பிரச்சினையானது மக்களுக்குப் பொருட்களை வழங்குவதை விட அவர்களின் ஜீவனோபாயத்தை மீளக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்துவதாகும். பொருட்களைப் பெற்றுக்கொள்வது வெகுவாக ஒரு சிரமமானதும் ஊழல் நிறைந்த ஒரு செயன்முறையாக இருப்பதுடன் அது மக்கள் சுயமாக கட்டியெழும்பும் நீண்டகாலத் தேவையைக் கவனத்தில் கொள்ளாது. மக்களின் ஜீவனோபாயங்களை முன்னேற்றும் அபிலாஷைகள் இடம்பெறவில்லை என்று அவர்கள் எதிர்பார்ப்பிழந்திருந்தார்கள். காலியில் ஒரு செருப்புத் தைக்கும் நபரொருவருக்கு (மிகத் தாழ்ந்த வருமானமுடைய தொழில்) சுழியோடி சிங்க இறால் பிடிக்கும் (கூடிய வருமானமுடைய தொழில்) திறன் இருந்தும் அதற்காக ஒரு நிறுவனத்திடம் மீன்பிடி உபகரணங்களை உதவியாகக் கேட்டபோது அவரின் வேண்டுகோள் மறுக்கப்பட்டது. சுனாமிக்குப் பிறகு அவருக்கு செருப்புத் தைக்கும் உபகரணத் தொகுதி வழங்கப்பட்டது. ஆதலால் அவருடைய வாழ்க்கையை முன்னேற்றும் சந்தர்ப்பம் இல்லாமல் போனது.

"எங்களுக்கு அதிகமான பாத்திரங்கள், கோப்பைகள் மற்றும் உலருணவுகள் கிடைத்தன. அந்த நிறுவனங்கள் எமது ஜீவனோபாயங்களை மீளக் கட்டியெழுப்ப பணம் கொடுப்பதைக் கவனத்தில் எடுத்திருந்தால் அது மிகவும் நன்றாக இருந்திருக்கும்."
காலியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமமொன்றிலுள்ள கணவனும் மனைவியும்

"இந்த உணவுதவிகள் நிறுத்தப்பட வேண்டும். இந்தப் பணம் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்ய வழங்கப்பட வேண்டும். இந்த கிராமத்தின் 75ூ குடும்பங்கள் ஒவ்வொரு மாதமும் உலருணவு பெற்றாலும் அவர்கள் வறுமையிலிருந்து மீள முடியாமல் உள்ளனர். பொருளாதார அபிவிருத்தியைக் குடும்பங்கள் தம் கைவசம் எடுத்தால் நிச்சயமாக மாற்றங்கள் ஏற்படும்."
பதுளையிலுள்ள ஒரு சமூக அங்கத்தவர்

*செவிமடுக்கும் குழுவின் பிரதிபலிப்புக்கள்*

உதவி நிறுவனங்கள் வழங்கும் இந்த 'ஒரு கூடை பொருட்கள்' சமூகத்தின் தேவைகளுக்கு பொருத்தமானதாக ஏன் இல்லை என்ற காரணங்களை அங்கத்தவர்கள் ஆழ்ந்து சிந்தித்தார்கள். உதவிகளை வழங்குவதில் ஒரு மட்டத்தில் தலைக்கணம் காணப்படுவதாக கருத்து முன்வைக்கப்பட்ட அதேவேளை அந்த சூழமைவிலிருந்து வெளியேற்றப்பட்ட யாதேனுமொருவர் 'சமூகத்துக்குப் பொருத்தமென தான் கருதுவதைத் தெரிவு செய்து' பெரும்பாலான நேரங்களில் உள்ளூர் நிறுவனப் பணியாளர்களினதோ அல்லது உண்மையான தேவைகளைப் பற்றிய தரவு உள்ளீடு அல்லாமல் செய்கின்றனர். ஒரு பதிலளிக்கும் மற்றும் பொறுப்பான தலையீடானது அந்த சூழமைவைப் பற்றிய சிறந்த புரிந்துணர்வைப் பெற்றிருக்கும் அதே வேளை தலையீட்டின் நெருங்கிய பயனாளிகளான

மக்களிடமிருந்து தரவுகளைச் சேகரித்து அனுமானங்களைப் பரிசோதிப்பதாக அமையுமென குழு அங்கத்தவர்கள் சுட்டிக்காட்டினார்கள் உதவி பெறும் சமூகங்களிலுள்ள மக்கள் சில குறிப்பிட்ட வளங்களுக்காக வேண்டி அவர்களின் தேவைகளை ஒன்றிணைக்கும் அதேவேளை பெறுகின்ற உதவிகளைக் கொண்டு செய்ய வேண்டியதென்ன என்ற தீரமானங்களை எடுப்பதிலும் சுதந்திரம் வேண்டி நிற்கின்றனர். பெருவாரியாக வெளியிலிருந்து வரும் தலையீடுகளாவன அவசரமாகத் திட்டமிடப்படும் அதேவேளை நிறுவனங்கள் மக்களின் விருப்புகளை மதிக்காததுடன் அவர்களுக்குத் தெரிவுகளையும் வழங்காது.

சில குழு அங்கத்தவர்கள் வெளியிலிருந்து வரும் தலையீடுகளாவன மக்களின் நீண்டகால அபிவிருத்திக்கான அபிலாஷைகளை மதிக்காத விடயத்தை எழுப்பினார்கள். ஒரு குழு அங்கத்தவர் கூறினார், "நாங்கள் சிலவேளைகளில் சமூகமானது நிலைத்து நிற்கும் கொள்கை பற்றிய விளக்கம் இல்லாவர்கள், அதை அவர்களுக்கு நாம் விளக்க வேண்டும், அவர்களின் இது தொடர்பான கொள்ளளவை வளர்க்க வேண்டும் என்ற அனுமானங்களோடு செல்கின்றோம். ஆனால் உண்மையில் அதிகமான சமூகங்கள் உதவிகளில் காணப்படும் நீண்டகால பயன்களைப் பற்றி குறிப்பிட்ட எதிர்ப்பார்ப்புகளை வெளிக்காட்டுகின்றார்கள். அவர்கள் எமது தலையீடுகளிலிருந்து மேலும் நிலைத்து நிற்கும் தன்மையைக் கேட்கின்றார்கள்."

இந்த சர்வதேச உதவி வழங்கும் நிறுவனங்களின் குறிக்கோள்களுக்கும் அவர்கள் உதவ முன்வரும் சமூகங்களின் குறிக்கோள்களுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை எது விளக்குகின்றது? நிலைத்துநிற்றலைப் பற்றிய ஒரு பகிரப்பட்ட புரிந்தணர்வு காணப்படுகின்றதா? எவ்விதமான தலையீடுகள் மற்றும் இணைப்புகள் நிலைத்து நிற்கும் மாற்றங்களை ஏற்படுத்த உதவுகின்றன என்றறிய எங்களுக்கு போதுமான ஆதாரங்கள் இருக்கின்றனவா, அதுபோல அவை முன்னேற்றத்தைக் கண்டுள்ளதா என்று எவ்வாறு அளக்க முடியும்? அதிகமான சர்வதேச மற்றும் உள்ளூர் நிறுவனங்கள் இந்தக் கேள்விகளைப் பற்றிப் பிடித்தும், சிலர் கடந்தகால மற்றும் தற்போதைய தலையீடுகள் எவ்வித மாற்றங்களைக் கொண்டுவந்திருக்கின்றன மற்றும் அவர்கள் எவ்வாறு அதன் வெற்றித் தன்மையை அளக்கிறார்கள் என்ற உதவி பெறும் மக்களின் கருத்துக்களை கிரமமாக செவிமடுக்க ஆரம்பித்துள்ளார்கள்.

## II. நிதிநிறுவனங்களின் நிகழ்ச்சி நிரல், NGOக்களின் பணிக்கட்டளை மற்றும் முன்னுரிமைகள்

சர்வதேச நிதிவழங்கும் நிறுவனங்களாலும் அதைத் தொடர்ந்து அவற்றால் நிதிவழங்கப்படும் INGO க்களாலும் உருவாக்கப்பட்ட "கடுமையான பணிக்கட்டளைகள்" மற்றும் "அரசியல் பின்னணிப்படுத்தப்பட்ட முன்னுரிமைகள்" எனப் பொதுவாகக் கருதிய விடயங்களில் காணப்படும் ஒருவிதமான ஏமாற்றம் பற்றி NGOக்கள் மற்றும் கிராம மட்ட நிறுவனங்களிடம் மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான கலந்துரையாடல்களில் வெளிப்பட்டன.

ஊவா மாகாணத்தில் தேயிலைத் தோட்டங்களிலுள்ள இந்த வம்சாவழித் தமிழ் சனத்தொகையுடன் பணிபுரியும் CBO ஒன்றின் தலைவரொருவர் பின்வருமாறு கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கிறார்:

"சில INGOக்கள் மற்றும் நிதிவழங்கும் நிறுவனங்கள் தாங்கள் வேலை செய்யும் சமூகத்தின் முன்னுரிமைகளைப் பற்றி குறைந்த புரிந்துணர்வைக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய சுதேச நிகழ்ச்சிகளின் முன்னுரிமைகளாவன நிதிவழங்கும் நிறுவனங்களின் கட்டுப்பாடு மற்றும் அவர்களின் முன்னுரிமைகளுக்குக் கீழ் காணப்பட வேண்டும். 'சமாதானத்தைக் கட்டியெழுப்பல்' மற்றும் 'சிவில், அரசியல், ஜனநாயகத் தலைமைத்துவம் மற்றும் பரிபாலனம்' போன்ற அவர்களின் பணிக்கட்டளைகளால் நாம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறோம். இந்த வெளியிலிருந்து வரும் நிதிவழங்கும் நிறுவனங்களின் கடுமையான குறிக்கோள்களால் எங்கள் நோக்கங்களும் எங்கோ ஒரு இடத்தில் ஸ்தம்பிதமடைகிறது. எங்களதும் உங்களதும் குறிக்கோள்களை ஒப்பிட்டுப் பார்க்கும்

அதேவேளை நாங்கள் எங்கள் உண்மையான நோக்கங்களை தொடர்ச்சியாக விட்டுக்கொடுப்பதாக உங்கள் வாசகங்களின் கீழ் எங்கள் குறிக்கோள்களை உச்சளவு பொருத்த முயற்சிக்கிறோம். உதாரணமாக தேயிலைத் தோட்டங்களில் சமூகத் தலைமைத்துவத்தைக் எங்கள் பாணியிலே கட்டியெழுப்ப நாம் முன்வந்துள்ளோம். எங்களுக்குத் தேவைப்படும் வளங்களைப் பெற்றுக்கொள்ள, எங்கள் நோக்கை நிதிவழங்கும் முன்னுரிமைகளிலே நாங்கள் பொருத்தும் அதேவேளை அது தலைமைத்துவ அபிவிருத்தியில் ஒரு பகுதியையே தொடுகின்றது.''

“நாங்கள் சமூகத்தின் உண்மையான தேவைகளைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்பதை நாம் அனைவரும் அறிவோம். வேலைகளை அமுல்படுத்தும் போது மக்களின் தேவைகளையும் நிதிவழங்கும் நிறுவனங்களின் கட்டுப்பாடுகளையும் சமப்படுத்த தொடர்ச்சியாகவும் கடுமையாகவும் முயற்சிக்கிறோம்.''
INGOக்கள் நிதிவழங்கும் நிறுவனங்களோடு பங்காளியாகப் பணிபுரியும் உள்ளூர் NGO ஒன்றின் நிகழ்ச்சி முகாமையாளர்

INGO நிதிவழங்கும் நிறுவனங்களிடம் காணப்படும் ஒப்பந்தங்களைச் சரியாக விவரிப்பதில் குறைந்த நெகிழ்வுத் தன்மை சிலரால் தலைக்கணம் என வர்ணிக்கப்பட்டதுடன் இதுபோன்ற நிகழ்ச்சி ரீதியான தேவைகளைப் பேரம் பேசுவதிலும் கலாச்சார பொருத்தமான தலையீடுகளைப் பற்றியும் கருத்துக் கூறுவதிலும் INGOக்கள் மற்றும் CBOக்கள் உணர்ந்திருக்கும் சக்தியில்லாத் தன்மையின் அளவையும் வெளிக்காட்டுகின்றது. ஒரு பெரிய நிதிவழங்கும் நிறுவனத்தால் புத்தளத்தில் நிதிவழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தில் பணிபுரியும் உள்ளூர் உதவிப் பணியாளர் கூறுகிறார் அவருடைய திட்டமானது ‘ஒரு வீட்டுக்கு ஒரு வீடு’ என்ற கொள்கையிலமைந்திருப்பதுடன் அது தானாகவே வீடில்லாதவர்களை நீக்கிவிடுகின்றது. இன்னொரு பெரிய வெளிநாட்டு உதவி நிறுவனம் இந்தத் திட்டத்துக்கான ஆரம்பக் கட்ட கருத்துக்கணிப்புக்களைச் செய்திருந்தாலும் இந்தக் கணிப்பீடானது உண்மையான தகவல்களைக் கொண்டில்லை. அவர் மேலும் கூறினார், “நாங்கள் துரதிஷ்டவசமாக நாங்கள் இந்த கணிப்பீட்டைப் பின்பற்றி இந்த திட்டத்தைச் செய்ய வேண்டியேற்பட்டுள்ளது. இது ஜநிதிவழங்கும் நிறுவனத்தின்ஸ தொழில்நுட்ப ரீதியான பிழையாகும் இந்த கணிப்பீட்டுக் குழுவானது ஒரு நல்ல குழுவாகக் காணப்படவில்லை. அது தான் இந்தப் பிரச்சினைக்கு முக்கிய காரணம். IDPக்கள் கூட இந்த கணிப்பீட்டில் பிழைகளுல்லததாகப் புரிந்து கொண்டுள்ளனர். எங்களிடம் வந்தவர்கள் இந்த கணிப்பீட்டில் கணக்கெடுக்கப்படாமல் விடுபட்டவர்களாகும். அவர்களுடைய உரிமைகளை நாங்கள் தடுத்துள்ளதாக அவர்கள் முதலில் நினைத்தார்கள்.''

“சிறந்த இலக்கு வைத்தல் மூலம் விளைவானது அதிகரிக்கப்பட முடியும். அதிகமான நிறுவனங்களாவன சனத்தொகையின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிரிவில் கூடிய அக்கறை கொண்டிருப்பர். உதாரணம் இளைஞர். நிறுவனங்களாவன ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்ட பணிக்கட்டளைகளோடு வருகின்றனர். அதிகமான தீர்மானங்களாவன ஒரு கற்பனைத் தேசிய பகுப்பாய்வு மூலம் நிர்ணயிக்கப்படுகின்றன.''
கொழும்பிலுள்ள சர்வதேச நிறுவனமொன்றின் நிகழ்ச்சி உத்தியோகத்தர்.

A. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் சுனாமியால் பாதிக்கப்ட்ட

அநுராதபுர மாவட்டத்தில் மற்றும் கிழக்கில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் கிழக்கில் தெற்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களும் அவர்களுக்கு மிகவும் அவசியப்பட்ட சமூகத்துக்குச் செய்யப்பட்ட அனர்த்த நிவாரணம் மற்றும் மனிதநேய உதவிகளைப் பற்றி ஆழ்ந்த மதிப்பை வெளிப்படுத்தினர்.

“விசேடமாக வடக்கு மற்றும் கிழக்கு அரசால் புரக்கணிக்கப்பட்டள்ளது. சர்வதேச உதவிகள் இல்லாவிடில் மட்டக்களப்பிலுள்ள மக்கள் பசி மற்றும் வறுமை போன்றவற்றை

சந்தித்திருப்பர். இந்த சர்வதேச உதவியின் காரணமாகத் தான் மக்கள் இன்னும் வாழ்கிறார்கள். இதனால் தான் அபிவிருத்தியானது முன்னேற்றமடைந்துள்ளது. INGOக்கள் உதவிகள் இல்லாவிடில் அரசின் புரக்கணிப்பால் மக்கள் பசியின் காரணமாக இறந்திருப்பர். மட்டக்களப்பு மாவட்டத்தின் மூன்றில் இரண்டு பங்கு சின்னாபின்னமாகியிருக்கும். பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. INGOக்களுக்கு மாத்திரமே விடுவிக்க முடியும்.”
மட்டக்களப்பிலுள்ள தமிழ் அரசியல் தலைவர்

பிரச்சினைகளின் அடிமட்ட காரணத்துக்கு செல்லும் திறமையானது தற்போது NGOக்களிடம் காணப்படுகின்றது. நான் அதை மதிக்கிறேன். முன்பு அவர்கள் நோயை அல்லாது அறிகுறியை மாத்திரம் குணப்படுத்த முயற்சிப்பார்கள். தற்போது அவர்கள் கவனிப்பது காரணத்தையே அறிகுறிகளையல்ல.”
மட்டக்களப்பிலுள்ள NGO தலைவர்

அதேவேளை, LTTE மற்றும் அரசுக்கிடையில் பிணக்குகள் காணப்படும் போது பாதுகாப்புப் பிரதேசங்களில் மனிதநேய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் வெளிநாட்டு நிதிவழங்கும் நிறுவனங்கள், ஐக்கிய நாடுகள் மற்றும் உதவி வழங்கும் நிறுவனங்களின் நீண்டகால நோக்கைப் புரிந்து கொள்ள முரண்பாட்டுப் பிரதேசங்களிலுள்ள அனேக மக்களுக்குத் தேவைப்பட்டது. நிதிவழங்கும் நிறுவனங்களின் வலுவிழப்பு என்பதன் வரைவிலக்கமானது இப்பிரதேசங்களின் நடப்புக்கால முரண்பாட்டுச் சூழமைவுக்கு நெருக்கமானதாகக் காணப்பட்டது. அநுராதபுரத்திலுள்ள சில மக்கள் கூறினார்கள் பாதுகாப்புப் பிரச்சினை மட்டும் இல்லாதிருந்தால் சர்வதேச உதவிக்கான தேவை மிகவும் குறைந்து காணப்பட்டிருக்கும் அல்லது அடியோடு இல்லாமலும் இருந்திருக்கும்.

கிழக்கு மற்றும் எல்லைப் பிரதேசங்களுக்குச் சென்ற செவிமடுக்கும் குழுக்களானது IDP மீள்குடியேற்றம் தொடர்பான ஒன்றுக்கொன்று தூரமான இருவேறு கருத்துக்களைச் செவிமடுத்தார்கள். மக்களுக்கு முகாம்களை விட்டுச் சென்றால் உதவிகள் நிறுத்தப்பட்டுவிடும் என்று கூறியதால், மக்கள் முகாம்களில் தங்கியிருப்பது INGOக்களுக்குத் தேவைப்பட்டது என சிலர் எண்ணினார்கள். இன்னொரு சந்தர்ப்பத்தில் எங்களுக்குக் கூறப்பட்டது அரசாங்கத்துக்கு மக்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்புவது அவசியப்பட்டதால் INGO க்கள் முகாம்களிலிருந்து வெளியேறும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. அநுராதபுரத்திலுள்ள ஒரு IDP கூறுகிறார், “எங்களுக்குத் திரும்பச் செல்வது பாதுகாப்பில்லை என்றாலும், அரசாங்கத்துக்கு நாங்கள் திரும்பிச் செல்ல வேண்டும். இது LTTE க்கு எதிரான ஒரு தற்பாதுகாப்பு வேலியாகும். INGO க்கள் அல்லது அரசாங்கத்தின் அனுதாபத்திற்கு அதிகமான மக்கள் பாத்திரமானார்கள். புத்தளத்திலுள்ள IDP முகாமொன்றில் வசிக்கும் ஒருவர் கூறுகிறார், “NGOக்கள் அவர்களின் விருப்புகளுக்கேற்பவே உதவிகள் வழங்குகிறார்கள். எங்களுக்குத் உதவி தேவைப்படுகிறதென்று அவர்கள் நினைத்தால் மட்டும் தான் எங்களுக்கு உதவி வழங்குகிறார்கள். இல்லாவிட்டால் இல்லை.”

*B ஏழைகளின் நடப்பு என்ன?*

பதுளையின் உள்ளும் அதனைச் சுற்றிவரவும் உள்ள பிரதேசங்கள், காலிக்கு வடக்கேயுள்ள தேயிலைத் தோட்டங்கள் மற்றும் அநுராதபுரத்தின் சில பிரதேசங்களுக்குச் சென்ற செவிமடுக்கும் குழுக்களானது ஏன் “உதவி இங்கு வந்து சேரவில்லை” என்பதற்கான காரணங்களை அதிகமான மக்கள் பிரதிபலிப்பதைச் செவிமடுத்தார்கள். மனிதநேய மற்றும் அரசியல் காரணங்களால் வடக்கில் மற்றும் கிழக்கில் முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்காக வெளிநாட்டு நிதிவழங்கும் நிறுவனங்கள் மற்றும் சர்வதேச உதவிவழங்கும் நிறுவனங்கள் உந்தப்பட்டிருப்பதை மக்கள் புரிந்திருந்தார்கள். வெளிப்படையாகத் தெரிவதற்கும் பெரியளவான நிதிவழங்கும்

நிறுவனங்களின் எண்ணிக்கைக்கும் விரும்பும் நிவாரண நிறுவனங்களால் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் நிரம்பியிருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள். ‘புறக்கணிப்பட்ட’, ‘கணக்கெடுக்கப்படாத’, மற்றும் ‘முன்னுரிமைப்படுத்தப்படாத’ சனத்தொகை போன்ற வசனங்கள் அடிக்கடி பாவித்த அதிகமான மக்கள் நிதிவழங்கும் நிறுவனங்களால் பாவிக்கப்பட்ட வலுவிழப்பின் வரைவிலக்கணத்தைப் பற்றித் தெளிவில்லாமல் இருந்தார்கள்.

அநுராதபுரத்திலுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் “தேவைக்கு முன்பே பணிக்கட்டளைகள் வரையறுக்கப்படக் கூடாது.” இன்னமும் அதிகமான மக்கள் தீவிர வறுமையின் கீழ் வாழ்வதையும் நாட்டுக்கு வருகின்ற உதவிமூலங்களுக்கான எந்தவித அடைவையும் இல்லாமல் காணப்படுவதையும் வைத்து அதிகமான மக்கள் வெளிநாட்டு நிதிவழங்கும் நிறுவனங்களின் நிதிவழங்கல் விருப்புகளும் முன்னுரிமைகளும் வறுமைக் குறைப்பையும் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதற்காக கவனம் செலுத்துவதில்லையென கணிப்பீடு செய்கிறார்கள். வறுமைக் குறிகாட்டிகளோ தேவைகளோ அல்லாமல் நிதிவழங்கும் நிறுவனங்களின் பணிக்கட்டளைகள் மற்றும் சுலோகங்களை அடிப்படையாக வைத்து இலக்குக் குழுக்கள் மற்றும் பிரதேசங்களைத் தெரிவு செய்வதை எதிர்த்து மக்கள் கருத்துத் தெரிவித்தார்கள்.

“அதிகமான வெளியிலிருந்து வரும் பணமானது கிழக்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் திணிக்கப்படுகின்றன. யுத்தம் மற்றும் ஊடக விளம்பரப்படுத்தல் காரணமாக எங்கள் தேவைகளுக்கு அவர்கள் பாராமுகமாக இருக்கிறார்கள்.”
ஊவா மாகாணத்தில் முஸ்லிம் பெண்கள் CBO ஐ தலைமை தாங்கும் பெண்ணொருவர்

“சுனாமியால் பாதிக்கப்படாத பிரதேசங்களிலுள்ள மக்களுக்காக அம்மக்கள் பின்தள்ளப்பட்டவர்கள் என்று எம்மோடு கோபப்படாமல் இருக்க நிதிவழங்கும் நிறுவனங்களை நாங்கள் தேடினோம். ஆனால் நிதிவழங்கும் நிறுவனங்கள் கூறியது அவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட நிறுவனங்களை முன்னுரிமைப்படுத்துவதென்று ஆகும்.”
காலி மாவட்டத்திலுள்ள சுதேச அரச பணியாளர்

“INGOக்கள் அனர்த்தத்தால் தீவிரமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அப்பால் சென்று அதற்கப்பால் அவர்கள் பார்த்தால் நீண்டகாலத்தில் அவர்களுக்கு அதிகமான மக்களுக்கு உதவி புரியக்கூடியதாக இருக்கும். நிதிவழங்கும் நிறுவனங்கள் தேசிய மட்டத்தில் சந்திப்பதை விட சமூகங்களுக்கு விஜயம் செய்ய வேண்டும்.”
அநுராதபுரத்திலுள்ள ஒரு இஸ்லாமிய அறிவியலாளர்

‘ஒரு IDP’, ‘வீட்டின் தனித் தலைவர்’ அல்லது ‘சுனாமியால் பாதிக்கப்பட்ட’ என்ற வாசகங்கள் இல்லாமலே அதிகமான மக்கள் தீவிரமான வறுமையிலும் வலுவிழந்தும் எவ்வித உதவிகளும் பெறாமல் காணப்படும் இருக்கிறார்கள். சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோரங்களிலிருந்து தொலைவில் காணப்படும் பிரதேசத்தில் குடிசையொன்றில் வாழும் பெண்மணி கூறுகிறார் அவள் சுனாமியால் தாக்கப்பட்டிருந்தால் நன்று என்று. ஏனெனில் அதுதான் அவளுடைய வாழ்க்கையை முன்னேற்றுவதற்கான ஒரே வழி. அவள் செவிமடுக்கும் குழுவுக்கு கூறினாள், “எங்களுக்கு எவ்வித அனர்த்தமும் நிகழாததால் நாங்கள் மிகவும் கவலைப்படுகிறோம். நாங்கள் ஏழைகள் ஆனால் எங்களுக்கு எவ்வித உதவிகளும் இல்லை.”

“இத்தனைக் காலமும் நாங்கள் எவ்வித உதவிகளையும் பெறவில்லை. அவர்கள் சுனாமி என்கிறார்கள் பின் உதவி வழங்குகிறார்கள்; அவர்கள் முஸ்லிம் [IDPக்]களுக்கு உதவி வழங்குகிறார்கள்; ஆனால் சிங்களவர் தமிழர்களாகிய எங்களுக்கு ஒன்றுமில்லை. IDP க்கள் உதவி பெறுவது தொடர்பில் எங்களுக்கு எவ்வித பிரச்சினைகளுமில்லை. அவர்களும் எங்களைப் போன்றவர்கள் தான். ஆனால் நாங்கள் வருத்தப்படுவது

எங்களுக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை என்றே. நாங்கள் நகரத்துக்கு வெளியே ஓரத்தில் இருக்கிறோம். உதவி தேவைப்படும் ஒரு ஒதுக்குப்புறமான பிரதேசமாக இல்லாததால் நாங்கள் கைவிடப்பட்டிருக்கிறோம்.”
புத்தளம் மாவட்டத்திலுள்ள ஒரு கிராமியப் பெண்

இலக்கு வைக்கும் கொள்கைகளின் நேர்மறையான மாற்றத்தைப் பற்றி புத்தளத்திலுள்ள ஒரு மாவட்ட பணியாளர் கூறுகிறார். “அதிகமான உதவிகள் முன்பு IDP க்களுக்கு வழங்கப்பட்டன. ஆனால் தற்போது IDP கிராமங்களில் அயலவர்களாகக் காணப்படும் உள்ளூர் மக்களும் உதவிகளைப் பெறும் பொருட்டு திட்டங்களில் உட்சேர்க்கப்பட்டுள்ளார்கள்.” இன்னொருவர் கூறுகிறார், “அதிகமாக இங்கு காணப்படும் NGOக்கள் ‘IDP NGO’ க்களாகும். புத்தள மக்கள் NGO என்ற வார்த்தையைக் கேள்விப்பட்டதே IDPக்கள் இங்கு வந்த பிறகுதான்.”

சுனாமியால் பாதிக்கப்படாத உதவிகள் பெறாத சமூகங்களான தேயிலைத் தோட்டப் பணியாளர்கள் மற்றும் ஏனைய ஒதுக்குப்புற பிரதேசங்களிலுள்ள மக்கள் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்படும் ஒருமைப்பாடு மற்றும் உதவிகள் பற்றி உண்மையான மெச்சுதலை வெளிப்படுத்தினார்கள். எனினும் அதிகமானோர் தொடர்ந்து நாட்டின் ஏனைய பாகங்களில் இடம்பெறும் நிலச்சரிவு, வெள்ளங்களால் பாதிக்கப்பட்டோருக்கு இந்த உதவிகள் வினியோகிக்கப்பட்டிருக்கலாம் என்றும் அல்லது கரையோரத்திலிருந்து தொலைவிலுள்ள தீவிரமாக வலுவிழந்த சனத்தொகைக்கு வருமானத்தை அதிகரிக்கும் திட்டங்களுக்காக மீள ஒதுக்கியிருந்திருக்கலாம் எனவும் எண்ணினர்.

“எங்கள் நிலைமைகளை மாற்றுவதற்கு எங்களிடம் வருமானமோ கொள்ளளவோ சக்தியோ இல்லை. எங்களுக்கு எங்கே செல்வதென்று தெரியாது. ஏன் இலங்கையில் சில மக்களுக்கு உதவிசெய்யப்படுகின்றது, சிலருக்கு அறவே உதவிகள் இல்லை என்பதும் எமக்குத் தெரியாது.”
பதுளையில் தேயிலைத் தோட்டமொன்றில் நிலச்சரிவால் உயிர்தப்பிய இடம்பெயர்ந்த ஒருவர்

“சர்வதேச நிறுவனங்களின் உதவியோடு தோட்டத்தமிழர்கள் உரிமைகளையும் உதவிகளையும் அரசாங்கதிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியுமானவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் கண்களுக்குத் தெரியாமலிருக்கும் வரை அவர்கள் நிலைமை மாறாது. அவர்களுக்கு சிங்களமோ ஆங்கிலமோ பேசத் தெரியாது. ஆதலால் அரசாங்க உத்தியோகத்தர்களை எவ்வாறு சந்திப்பதென்று தெரியாதுள்ளனர். அவர்களைச் சந்திக்கச் செல்லும் போது வாக்குகளை மட்டுமே பெற்றுக்கொள்கிறார்கள். சர்வதேச உதவியானது இங்கு தான் முதலில் வர வேண்டும். இது தான் இலங்கையின் குரல்கொடுக்க ஒருவருமில்லாத கண்களுக்கு புலப்படாத சமூகம்.”
பதுளை மாகாணத்தில் தேயிலைத் தோட்ட தமிழ் ஊழியர்

## III. உதவி வளங்களை முகாமைத்துவப்படுத்தல்

அனைத்து ஆறு பிரதேசங்களுக்கும் விஜயம் செய்து மேற்கொள்ளப்பட்ட அதிகமான கலந்துரையாடல்களில் செவிமடுக்கும் குழு மக்களிடமிருந்து கேட்டுக்கொண்டது “உதவி இங்கு வந்து சேரவில்லை” அல்லது “இலக்கு வைத்த மக்களுக்கு உதவிகள் சென்று சேரவில்லை”. வேறு பலர் கூறினர் உண்மையிலேயே வெளியிலிருந்து வந்த உதவிகள் அவர்களின் சமூகங்களுக்கு வினியோகிக்கப்பட்டாலும் அல்லது அவர்களுக்கே நேரடியாக வழங்கப்பட்டாலும், வழங்கப்பட்ட உதவி வளங்களாவன ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட தொகையிலிருந்து குறைக்கப்பட்டுள்ளதா என்று சந்தேகப்படுவதாகக் கூறினார்கள். இந்த வளங்களின் சுருக்குதலையும் வீண்போதலுக்கும் பின்னாலுள்ள காரணங்கள் பற்றியும் பலவித கருத்துக்களையும் மக்கள் கொண்டிருந்தனர். நிதிகளின் தவறான கையாளல், ஊழல், நிதி ஒதுக்கீடு தொடர்பில் நிதி வழங்கும் நிறுவனங்களின் தீர்மானம், உதவி

பெறுனர்கள் மற்றும் உதவி வழங்குனர்களுக்கிடையில் மற்றும் உதவி பெறுனர்களுக்கடையேயுமிருக்கும் நம்பிக்கையற்ற தன்மை பற்றியும் அவர்கள் கதைத்தார்கள். ஒருவர் தங்கள் இந்த நிலைமையின் புரிந்துணர்வை பின்வரும் வாசகம் மூலம் வெளிப்படுத்தினார்.

"சர்வதேச உதவியென்பது ஒரு பெரிய ஐஸ்கட்டியைப் போன்றது.
அது பலரின் கைகளையும் தாண்டிச் செல்லும் போது மிகச் சிறியதாக உருமாறுகின்றது.
சில பயனாளிகள் அதன் சிறு துளிகளையே பெற்றுக் கொள்கிறார்கள்."
மட்டக்களப்பிலுள்ள ஒரு நகர சபைப் பணியாளர்

இந்த குறைந்து கொண்டு செல்லும் உதவி வழங்களின் குறைந்த விளைவுகளுக்கு மேலதிகமாக, மக்கள் உதவி வழங்கும் நிறுவனங்கள் மீது நம்பிக்கையிழந்து இருப்பதைப் பற்றியும் கதைத்தார்கள். நாடளாவிய ரீதியில் நாங்கள் செவிமடுத்த மக்களில் நம்பிக்கை, தெளிவுத்தன்மை மற்றும் உதவி வளங்களைப் பற்றிய தகவல்களுக்கான அடைவ போன்ற மிக முக்கிய விடயங்களாகக் கதைக்கப்பட்டன. அநுராதபுரத்திலுள்ள ஒரு கிராமிய நபர் அதைத் தொகுக்கின்றார், "தெளிவுத்தன்மை மற்றும் விழிப்புணர்வு போன்றவற்றோடு நம்பிக்கையே மிக முக்கியமான விடயம்." அபிவிருத்தி திட்டங்கள் சமூக அங்கத்தவர்கள் இணைந்து முன்கொண்டு செல்லும் விடயமாக மாற சமூக மட்டத்தில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவது மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது. அனைத்துப் பாகங்களிலும் மக்கள், சமூகங்களுக்கிடையில் ஒரு போட்டிக் கலாச்சாரம் உருவாக்கப்படுவதைப் பற்றியும், உதவிகளுக்காகச் சமூங்கள் போட்டியிடும் போது நம்பிக்கையில் சரிவும் ஏற்படுவதைப் பற்றியும் கருத்துகள் பரிமாறிக்கொண்டனர்.

### A. *நிதிகளின் தவறான கையாள்தல் மற்றும் ஊழல்*

அனைத்துப் பிரதேசங்களிலும் நிதி வளங்களாவன அரசாங்கத்தூடாக, இடைத் தரகரூடாக, உள்ளூர் நிதிவழங்கும் நிதிவழங்கும் நிறுவனங்களூடாக அல்லது தனிநபரூடாகவோ வழங்கப்படும்போது "வரிக்குட்படுத்தப்பட்டது", அல்லது "மறைந்துள்ளது" என்று அவர்கள் நினைப்பதாக மக்கள் கூறினார்கள். தேவைப்படும் உதவி வளங்களின் திசை திருப்புதலைப் பற்றி மக்கள் ஆழமான கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்கள். உண்மையிலே உதவிகள் விநியோகிக்கப்பட்டாலும் தேவையுள்ள மக்கள் ஒரு நாளும் பயனடையவில்லை என்பதற்கு ஊழலும் ஒரு காரணமாகக் காணப்பட்டது. மறுபக்கம், இந்த ஊழலுக்கு மக்கள் வெளிப்படுத்தும் சகிப்புத் தன்மையின் அளவு பற்றியும் நாங்கள் செவிமடுத்தோம். அநுராதபுரத்திலுள்ள ஒரு இந்து குருக்கள் ஏனைய மக்களின் குரல்களை ஒன்றுபடுத்திக் கூறுகிறார், "ஊழல் இடம்பெற்றாலும் ஏதாவதொன்று இடம்பெறுகின்றது. [அபிவிருத்திப்] பணிகளானது தொழில்களை உருவாக்குகின்றது."

சர்வதேச உதவியானது அரசாங்கத்தினூடாக வழங்கப்படும்போது மாவட்ட மற்றும் கிராம மட்டங்களில் அதிக அரசியல் செல்வாக்குகள் உதவிகள் வழங்கப்படுவதில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக சிலர் குறித்துக்காட்டுகிறார்கள். உதாரணமாக காலியிலுள்ள ஒரு கொள்ளர் நினைக்கிறார் "அரசியல் விருப்புகளுக்கேற்ற வகையிலேயே வீடுகள் வழங்கப்பட்டுள்ளன." INGO க்களின் செயன்முறையானது அரசியல் தலையீடுகளிலிருந்து "அப்பால்" பட்டது என்று நினைப்பதால் பயனாளிகள் தெரிவானது INGO க்களால் செய்யப்பட வேண்டுமென பதுளையிலுள்ள ஒரு அரச உத்தியோகத்தர் நம்புகிறார்.

"NGOக்களின் உதவிகள் வந்தடைந்த பின் அதன் அரைவாசியே எங்களை வந்தடைகின்றது. எங்களுக்குத் தெரிந்தவரையில் அனைத்து முகாம்களிலும் இது தான் நிலைமை. நிதிவழங்கும் நிறுவனங்களை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் இலங்கையர் தான் இலஞ்சம் மற்றும் ஊழல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஏனைய நறுவனங்களூடாக அல்லாமல் நிதிவழங்கும் நிறுவனங்கள் நேரடியாக வரவேண்டுமென நாங்கள்

கேட்டுக்கொள்கிறோம். இது முற்றுமுழுதும் பயனாக அமையும் என்பதுடன் வினைத்திறனாகவும் இருக்கும்.”
புத்தளம் பிரதேசத்திலுள்ள IDP முகாமிலிருக்கும் வயோதிபர்

“எங்களது அரசாங்கத்துக்கு மாத்திரம் வெளிநாட்டுதவிகள் வழங்கப்பட்டால் அது எம்மை வந்தடையாது. அது கொழும்பு மட்டத்திலே அமைச்சுக்களுக்காகவோ தனித் தேவைகளுக்காகவோ பயன்படுத்தப்பட்டிருக்கலாம். அதிசிறந்த பெறுபேறுகள் இடம்பெற சர்வதேச மற்றும் உள்ளூர் NGO க்கள் நேரடியாக உதவி வழங்குவதையே நாங்கள் கேட்டு நிற்கின்றோம்.”
பதுளை நகரத்துக்கருகிலுள்ள கிராமமொன்றின் விவசாயி

“ஊழல் என்பது ஒரு பிரச்சினை. கிராமத்திலிருந்து கையொப்பங்களைப் [பங்குபற்றுனர்களின் பட்டியல்] பெறுவதற்காக ஒரு இடைத்தரகரை ஒரு NGO அனுப்பியது. அதன் பின் அந்த NGO அவ்விடைத்தரகருக்கு மக்களுக்கு வினியோகிப்பதற்காக பணத்தைக் கொடுத்தது… அது அம்மக்களை ஒரு நாளும் வந்தடையவில்லை.”
அநுராதபுரத்திலுள்ள ஒரு பாடசாலைப் பொருளாளர்

“பொய்யான பயனாளிகள் தகவல் உட்பட ஊழல்கள் அதிகரித்துவிட்டன. அரசாங்கம் கூட கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலாளர் மட்டங்களிலும் [இரண்டும் அரசின் ஒரு பகுதி] ஊழல் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. நாங்கள் சர்வாதிகார ஆட்சிக்குப் பழக்கப்பட்டிருக்கிறாம். அது தான் நாட்டிலே விடயங்களை அமுல்படுத்துகின்றது. LTTE யும் அரசாங்கத்தையும் பாருங்கள்.”
முன்னால் LTTE இலிருந்த மட்டக்களப்பு சமூகத் தலைவரொருவர்

“பொய்களும் உறுதிகளும் இருந்தன. நிதிவழங்கும் நிறுவனங்கள் சிலநேரம் நம்பிக்கையற்றவர்களை அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காகத் தெரிவு செய்கின்றனர். ஒரு நபர் வந்து தேவையுள்ள மக்களைப் படம்பிடித்து மருத்துவ உதவி மற்றும் ஏனைய திட்டங்களையும் கொண்டுவருவதாகக் கூறிச் சென்றார். இது மூன்று வருடங்களுக்கு முன் நிகழ்ந்தது. எங்களுக்கு அவரைத் தேடிப்பிடிக்க முடியாது. அவர் மறைந்து விட்டார்.”
பதுளை கிராமமொன்றின் 3 பிள்ளைகளின் தாயார்

“மக்கள் உதவிகளைப் பெறுவதில்லை. அரச அமைச்சுக்களினூடாகப் பணம் வழங்கப்படும் போது எல்லா அமைச்சுக்களும் அப்பணத்தை எடுத்தபின் மக்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். நிதிவழங்கும் நிறுவனங்களுக்குத் தகவல்களை வழங்க மட்டும் அவர்கள் [அரசாங்க உத்தியோகத்தர்கள்] வந்து புகைப்படங்களை எடுக்கிறார்கள். பின் உதவிகள் வழங்கியதாகக் நிதிவழங்கும் நிறுவனங்களுக்குக் கூறுகிறார்கள். அதனை அந்நிறுவனங்களும் நம்புகிறார்கள்.”
புத்தளத்திலுள்ள ஒரு பேருந்து ஓட்டுனர்

“இந்தக் குறைபாடுகளுக்குப் பொறுப்பானவர்கள் உள்ளூர் NGO க்கள். ஊழல் நிகழ்ந்திருப்பது அவர்களிடமே. அது நிதிவழங்கும் நிறுவனங்களிடமோ INGO க்களிடமோ அல்ல. ஏனெனில் நிதிவழங்கும் நிறுவனங்கள் திட்டங்களுக்கு நிதி வழங்குகிறார்கள். அவர்களுக்கு மக்கள் அதனூடாகப் பயனடைந்துள்ளார்களா என்பதை மட்டுமே பார்க்க வேண்டும். எம்மக்கள் அவர்களின் வாக்களிப்புக்களை சரிவரச் செய்கிறார்களா என்தற்குப் பொறுப்பானவர்களாக இருக்க வேண்டும்.”
மட்டக்களப்பிலுள்ள பிரதேச செயலகப் பணியாளர்

"நாங்கள் இங்கு முதலில் வந்தபோது தாராளமான உணவு உடை மற்றும் மருத்துவ உதவிகள் நேரத்துக்குக் கிடைத்தன. ஆனால் தற்போது அதன் ஒதுக்கீடுகளாவன படிப்படியாகக் குறைவதுடன் எங்களுக்குக் கிடைக்கவேண்டிய எதுவும் கிடைப்பதில்லை. எங்களுக்கு வினியோகிக்கவென வைத்த பொருட்களை முகாம் தலைவரும் கிராமத் சேவகரும் ஒன்றுசேர்ந்து திருடியிருக்கிறார்கள்."
மட்டக்களப்பில் IDP கிராமமொன்றிலிருக்கும் முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட பெண்

*<u>செவிமடுக்கும் குழுவின் பிரதிபலிப்புகள்</u>*
பயனாளிகள் தெரிவு மற்றும் வினியோகித்தல் செயன்முறைகளின் போது சமூகத் தலைவர்களாலும் அரச பணியாளர்களாலும் உட்படுத்தப்படும் தேவையற்ற செல்வாக்குகள் மற்றும் பலவிதமான ஊழல் நடவடிக்கைகள் பற்றிய முறைப்பாடுகளை அதிகமான மக்களிடமிருந்து உதவிப் பணியாளர்கள் கேட்கக் கூடியதாகவிருந்தது. தேவையுள்ள சமூகங்களை அடைவதற்கும் அவசியமான தரவுகளைப் பெற்றுக்கொள்ளவும் பன்முகப்படுத்தப்பட்ட பங்குபற்றுனர்களுக்ககிடையே கொள்ளளவையும் பங்களிப்பையும் கட்டியெழுப்பவும் நிறுவனங்களாவன "அதிகார முகவர்கள்" மற்றும் உள்ளூர் அரச பணியாளர்களுடன் நெருக்கமாக பணிபுரிய வேண்டியேற்படும். ஆனால் இவ்வுறவு முறைகளாவன சவால்களாகவிருக்கும் அதேவேளை வெளிப்படையாகவும் திறந்த தொடர்பாடல் நிலைமையுடனும் காணப்பட வேண்டும்.

நாட்டிலுள்ள நீதி மற்றும் சட்டத்தைப் பற்றி தேசிய அரசுடன் வெளிநாட்டு நிறுவனங்கள் கலந்துரையாட வேண்டுமென்ற எண்ணத்தைப் பற்றி செவிமடுக்கும் குழு அங்கத்தவர்கள் கலந்துரையாடினார்கள். நிதிவழங்கும் மற்றும் சர்வதேச நிறுவனங்களாவன வெளிப்படைத் தன்மையை வளர்ப்பதற்காக வேண்டி போதுமான அழுத்தத்தை அரச அமைச்சுக்களுக்கும் உள்ளூர் அரச பணியாளர்களுக்கும் கொடுக்கிறார்களா என்பதைப் பற்றியும் கேள்வியெழுப்பினார்கள். ஒரு குழு அங்கத்தவர் கூறுகிறார், "சர்வதேச NGOக்கள் அவர்களுக்கு நிதிவழங்கும் நிறுவனங்களுக்குக் கணக்குக் கூறும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் அதேவேளை தேவையற்ற செல்வாக்குகள் மற்றும் ஊழல்களைப் பற்றி நாங்கள் மௌனம் சாதித்தால் அவ்வூழல் செய்முறையின் ஒரு பகுதியாக நாமும் ஆகிவிடுவோம். இந்த நாட்டின் மக்களுக்குச் சேவை செய்வதாக நாம் கூறிக்கொள்கிறோம். ஆனால் கொள்கை மட்டத்தில் இன்னும் அழுத்தம் காணப்பட வேண்டும்." முன்னேற்றமான வெளிப்படுத்தும் தன்மை எய்தப்பட வேண்டுமெனில்: அரசு, உதவி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் சமூகம் போன்ற அதன் அனைத்து பங்குதாரர்களும் அவசியப்படுவார்கள்.

### *B. சர்வதேச மற்றும் உள்ளூர் உதவி வழங்கும் நிறுவனங்கள் எவ்வாறு நிதியைச் செலவழிக்கின்றனர்*

நுிதிவழங்கும் நிறுவனங்களின் நிதியைப் பொறுப்பளிக்கப்பட்ட உதவி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் எவ்வாறு பணத்தை ஒதுக்கீடு செய்து அதனைப் பயன்படுத்துகிறார்கள் என்பது பற்றி ஒரு குறிப்பிட்டளவு கண்டிப்பான கணிப்பீடுகளை நாம் செவிமடுத்தோம். சுர்வதேச மற்றும் உள்ளூர் நிறுவனங்களாவன அதிகமான பணத்தை அது எதிர்பார்க்கும் திட்டப் பயனாளிகளை விட சம்பளம், கருவிகள் மற்றும் உட்செலவுகளுக்காக செலவிடுவதாக அனைத்துப் பிரதேசங்களிலும் ஒரு பொதுவான எண்ணப்பாடு காணப்பட்டது. உதவி வரவு செலவுத் திட்டத்தின் அதிகமான சதவீதம் உதவிபெறும் சமூகங்களுக்கான நேரடி உதவிகளுக்கும் அமுல்படுத்தலுக்கும் ஒதுக்கீடு செய்தால் அனைத்து (அரச, வெளிநாட்டு மற்றும் உள்ளூர்) உதவிகளினதும் நீண்டகால விளைவானது பெரிதாகக் காணப்படுமென மக்கள் எண்ணினார்கள்.

"எங்கள் புரிந்துணர்வின் படி அவர்களுக்கு (INGOக்களின் பணியாளர்கள்) முழு பாதீட்டின் 40% ஐ பொருட்செலவுகளுக்காகப் பயன்படுத்த

அனுமதியளிக்கப்பட்டிருக்கிறாரகள். ஆனால் அவர்களோ 60% ஐ பொருட்செலவுகளுக்காக மற்றும் சுகபோகங்களுக்காகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.”
மட்டக்களப்பில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சமூகத்தின் உள்ளூர் சிவில் சமூகத் தலைவர்

“என் அறிவுக்கெட்டிய வகையில் நிறுவனத்தின் பாதீட்டில் 60% ஆனது பரிபாலனத்துக்காகச் செலவு செய்யப்படுகின்றது. 40% அளவில் திட்டமிடப்பட்ட திட்டத்துக்காக ஒதுக்கப்படுகின்றது. மிகச் சிறிய தொகையே நிவாரண உதவிகளுக்காகக் காணப்படுகின்றது. மிகவும் சிரமமான சந்தர்ப்பங்களிலே பணிபுரிவதற்கு சில நிறுவனங்கள் தகைமையற்றுக் காணப்படுகிறார்கள்.”
முட்டக்களப்பிலிருக்கும் உதவிவழங்கும் நிறுவனங்களுக்கிடையே ஒருங்கிணைப்புக்குப் பொறுப்பாகவுள்ள பாதுகாப்புத் துறை அதிகாரி

“சுனாமி உதவியில் மிகவும் தீவிரமாக உதவிதேவைப்பட்டோரில் 10% ஆனோரே பயனடைந்தார்கள். ஏனைய 90% உம் ஹோட்டல்களுக்கும், கருத்தரங்குகளுக்கும், வாகனங்களுக்கும் உதவிப் பணியாளர்களின் உணவுகளுக்குமே குதூகலிக்கச் சென்றது.”
காலியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பார்வையற்ற பெண்ணொருவரை மணமுடித்த பார்வையற்ற நபரொருவர்

ஊவா மாகாணத்திலுள்ள ஒரு உள்ளூர் CBO தலைவர் கூறுகிறார் வீடு கட்டுவதில் நிபுணத்துவம் பெற்ற சர்வதேச நிறுவனமொன்றிடம் சென்று அன்றாடக் கூலி வேலையில் தங்கியிருக்கும் தேயிலைத் தோட்டத்தில் வசிக்கும் மிகவும் வலுவிழந்த மக்களுக்காக வீடு கட்ட உதவி வழங்குமாறு கேட்டு நின்றதை விளக்குகிறார். INGO ஆனது தேவையான நிதியைப் பெற்றுத் தர வாக்களித்த பின் பொருத்தமான அமுல்படுத்துனரைத் தெரிவு செய்ய CBO இடம் பொறுப்புச் சாட்டியது. இந்த குறிப்பிட்ட தோடத்தில் பணிபுரியும் ஒரு அபிவிருத்தி நிறுவனமானது 45% ஐ பரிபாலனக் கிரயமாகவும் 55% ஐ அமுல்படுத்தச் செலவழிப்பதாகவும் கேட்டு நின்றது. CBO ஐப் பொறுத்தவரையில் இந்த நிறுவனமானது சர்வதேச நிறுவனங்களூடாக நிதிவழங்கப்பட்டிருக்கும் அதேவேளை அதிகமான பணியாளர்களும் நிறைய வாகனங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. மற்றும் அவர்களின் தொழில்கள் கூட வேறு தொடர்புகளினூடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. CBO ஆனது முன்வைக்கப்பட்ட இப்பாதீட்டுக்கு உடன்படாததால் இந்நிதி வாய்ப்பை அவர்கள் இழந்தது. இதன் விளைவாக ஒரு வீடும் கட்டப்படவில்லை.

சர்வதேச மற்றும் உள்ளூர் NGO க்களுக்காக வேலை செய்யும் அவர்கள் மறைமுகமான உள்ளெண்ணத்துடன் வேலை செய்கிறார்கள் என்ற அதிரப்தியை சில மக்கள் வெளிப்படுத்தினார்கள். அநுராதபுரத்தில் ஒரு பாடசாலை உத்தியோகத்தர் கூறுகிறார், “சில மக்களுக்கு உல்லாசமான வாழ்க்கை தேவைப்படுகிறது. NGO க்களை உருவாக்குகிறார்கள். நிதிகளைப் பெறுகிறார்கள்.” இந்த அனுமதிக்க முடியாத கணிப்பீட்டின் திரண்ட விளைவுகளைப் பற்றி நாம் கேட்ட கேள்விக்கு ஒருவர் பதிலளிக்கிறார்: “எந்த வெளிப்பாடுகளுமில்லை, ஆனால் உள்ளூர் NGO க்களுக்கு ஒரு [சம்பளம் தொடர்பில்] நல்ல வாழ்க்கைத் தரம் காணப்படுகின்றது.”

“உள்ளூர் NGO க்கள் மேலும் கணக்குக் கூறுபவர்களாக இருக்க வேண்டும். ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் கழிக்கும் இரவுகளுக்கும், கருத்தரங்குகளுக்கும் நியாயப்படுத்துவதற்காக அவர்கள் எந்நேரமும் கிரயங்களை முயற்சி செய்து மறைக்கிறார்கள்.”
அநுராதபுரத்திலுள்ள ஒரு சமூக அங்கத்தவர்

“ஒரு நிறுவனம் அவர்களின் அபிவிருத்திக் குறியீடுகளை மாற்றிக்கொண்டேயிருந்தார்கள். ஏனெனில் பிரதேசத்தில் அவர்களின் பணிகள் தொடர்ந்தும் நடைபெறுவதாகக்

காட்டிக்கொள்வதற்கு. அவர்களின் பணிகள் எப்பொழுதும் ஒரேமாதிரியாகத் தானிருந்தது. ஆனால் குறிகள் மாத்திரம் தான் மாறிய வண்ணமிருந்தது. அவர்களை மெருகூட்டிக் காட்டிக்கொள்வதற்காக வேண்டி பணத்தைச் செலவு செய்கிறார்கள்.”
அநுராதபுரத்திலுள்ள ஒரு அரச உத்தியோகத்தர்

“செலவுகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். ஆரம்ப அமையச் செலவானது செலவு கூடியதென்பதை நாங்கள் மறுக்கமுடியாத அதேவேளை, அது ஒரு நிலைமைக்கு வந்த பின் அவர்களின் செயன்முறைகளை மாற்றியமைக்க வேண்டும். உள்ளூர் சூழமைவைப் புரிந்து கொண்ட ஏற்கனவே உருவாக்கப்பட்ட ‘நாட்டிலுள்ள’ நிபுணர்களைப் பயன்படுத்தவும். சுர்வதேச நிபுணர்கள் எந்நேரமுமே இலங்கையைப் பற்றி நிபுணத்துவம் படைத்தவர்களாக இருக்க மாட்டார்கள். அதேநேரம் அவர்கள் மிகவும் செலவு கூடியவர்களாகக் காணப்படுவார்கள்.”
அநுராதபுரத்திலுள்ள ஒரு மாவட்டப் பணியாளர்

“சில மாவட்டங்களில் ஒரு சில அரச தொழில்நுட்ப அதிகாரிகள் திட்டங்களுக்கு அனுமதி வழங்கவேண்டி உள்ளார்கள். இந்த மட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் நிறுவனங்களாவன அதிகமான நிபுணத்துவக் கிரயங்களை அவர்களுக்கு வழங்கி அவர்களின் சேவைகளை உரிய காலப்பகுதியில் பெற்றுக்கொள்வதற்காக வேண்டி போட்டியிடுகின்றார்கள். இதனைச் சட்டபூர்வமாக்குவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoU) காணப்பட்டாலும் சமூக சேவைகளை வழங்குவதில் இலஞ்சமும் அங்கீகரிக்கப்படாத போட்டிகளும் ஏற்றுக்கொள்ளப்படலாம் என்ற கருத்தையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இது ஒரு நாட்டுக்கு நன்றல்ல. அதேவேளை அது நாட்டின் சிறந்த பரிபாலன முயற்சிகளைக் குறைத்துவிடும்.”
கொழும்பிலுள்ள சர்வதேச நிறுவனமொன்றின் நிகழ்ச்சி உத்தியோகத்தர்

*செவிமடுக்கும் குழுவின் பிரதிபலிப்புகள்*

ஒரு முறைப்படுத்தப்பட்ட செலவீட்டுக்கானதும் நிதிக்கானதுமான வரைமுறைகளை மற்றும் உதவி நிதிகள் ஒதுக்கப்பட்டு எவ்வாறு செலவிடப்படுகின்றன என்ற வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதற்குரிய பங்குதாரர்களுடன் எவ்வாறு ஒன்றிணைந்து வேலை செய்வது என்பதைப் பற்றி குழு அங்கத்தவர்கள் கலந்துரையாடினார்கள். சரியான மக்களை இலக்குப் படுத்தாததையும் நிதியை NGO க்கள் துஷ்பிரயோகப் படுத்துவது தொடர்பாக அரசின் கவனத்தைப் பற்றி குழு அங்கத்தவர்கள் குறிப்பிட்டார்கள். சர்வதேச NGOக்கள் அவர்களின் கண்காணிப்பு நடத்தைகளை முன்னேற்றவும் அவர்களின் பங்காளர்களின் நிதி நடவடிக்கை தொடர்பாக கணக்குக் கூறும் பொறுப்பை முன்னேற்றவும் சர்வதேச NGO க்களுக்கு முடியும் என்று குழு அங்கத்தவர்கள் சிந்தித்ததுடன் அந்தளவுக்கு செய்யவேண்டியுள்ளது.

## IV. வெளிமதிப்புக்களைத் திணித்தலும் கௌரவம் மற்றும் மதிப்பு போன்ற விடயங்களும்

தொடர்ச்சியாக சில கலந்துரையாடல்களில் ‘மறைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்’ என்ற வசனம் தொடர்ச்சியாகப் பாவிக்கப்பட்டது. அதுபோல் வெளிமதிப்புகளை உட்புகுத்தும் சர்வதேச நிறுவனங்களைப் பற்றிய கருத்துக்களை மற்றும் எண்ணக்கருக்களை வெளிப்படுத்தினர். இது பொருத்தமற்றது. இது போன்ற உட்புகுத்தலுக்கு ஆளாகும் உதவி பெறுனர்கள் தவறிழைக்கப்பட்டுள்ளார்கள் என நிரூபணமாகியிருப்பதுடன் இந்த உணர்வுகள் மக்களின் தொனியிலிருந்தும் அழுத்தமாக வெளிப்பட்டன.

### *A. ‘வெளி’ மதிப்புக்களை ஊக்கப்படுத்தல்*

காலி மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களில் குறிப்பாக மக்கள் முறைப்பாடு செய்தது சில INGOக்கள் ‘கலாச்சாரத்தை மாற்றுவதும்’ மற்றும் ‘சமய எண்ணங்களைப் பறப்புதலும்’,

அதேவேளை அநுராதபுரம் மற்றும் காலியில் நாங்கள் செவிமடுத்தோம் சில INGO க்கள் தங்களையே முன்னேற்ற வேண்டி ஒரு பணிக்கட்டளையைத் தொடரந்து செல்வதாக – 'அதாவது மக்களின் நலனை விட தங்கள் நலனுக்காகவே அவர்கள் இங்கிருக்கிறார்கள்.' அநுராதபுரத்தைச் சேர்ந்த ஒரு பௌத்த பிக்கு கூறுகிறார் அவருடைய சமூகத்தில் சிலர் உள்ளூர் அரச அதிகாரியை நேரில் சந்தித்து ஒரு INGO இன் நிகழ்ச்சிகளை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டார்கள். இந்த கிறிஸ்தவ INGO வானது கொள்கை மாற்றத்தை ஏற்படுத்துவதாக அவர்கள் எண்ணுகிறார்கள். INGO பணியாளர்கள் அவர்கள் பிள்ளைகளுக்கு வழங்கிய சிலுவைகளை அணிந்தவர்களாக அவர்களின் புகைப்படங்களை எடுத்தார்கள். ஏனென்று கேட்ட போது தங்கள் நிதிவழங்கும் நிறுவனத்திடமிருந்து நிதியைப் பெறும்பொருட்டு இந்த புகைப்படங்களை அவர்களுக்கு அனுப்ப வேண்டுமென்று. இந்த சமூகத்தின் வேண்டுகோளுக்கு உள்ளூர் அதிகாரிகள் பதிலளிக்காததன் பின் மதநிலையமானது இந்த விடயத்தில் தலையிட்டு இந்த INGO இடமிருந்து பெறவேண்டிய உதவிகளைப் பற்றிக் கேட்டுக்கொண்டதன் பின் அந்த நிறுவனமானது அவர்களுடைய மத நிகழ்ச்சி நிரலை இதனுள் கொண்டுவரக் கூடாது என்ற விதிமுறையும் பிறப்பிக்கப்பட்டது. மட்டக்களப்பில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமமொன்றின் சமூக அங்கத்தவர் அவருடைய எண்ணத்தைப் பகிர்ந்து கொள்கிறார், "சில NGOக்கள் இருக்கின்றன, அவர்கள் மக்களுக்கு உதவுவது போல் வந்து அவர்களை மதமாற்றம் செய்வதற்கு வருவார்கள்." இதே போன்று காலியில் பதவியேற்ற ஒரு அதிகாரி கூறுகிறார், "NGO க்களுக்கு மறைக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சி நிரல் இருக்கின்றது – சிலர் ஏழை மக்களுக்கு பொருட்களை வழங்குவதன் மூலம் அவர்களை கிறிஸ்தவ மதத்துக்கு மாற்றுகிறார்கள்."

வெளியிலிருந்து தீர்மானிக்கப்பட்ட வலுவிழப்புகள் பற்றிய சுட்டிகளின் திணிப்பு பற்றி கவனம் செலுத்திய சில மக்கள் இவை உள்ளூர் மட்டத்திலே தீர்மானிக்கப்பட வேண்டுமெனத் எண்ணினார்கள். காலியிலுள்ள ஒரு அதிகாரி செவிமடுக்கும் குழுவுக்குக் கூறுகிறார், "சுட்டிகளாவன அவர்களுடைய சூழலை மையமாகக் கொண்டுள்ளது, எங்களுடையதை அல்ல." காலியில் உள்ளூர் NGO ஒன்றை நடாத்திச் செல்லும் ஒரு மதபிக்கு பின்வருமாறு தன் கருத்தைக் கூறுகிறார், "NGOக்கள் தம் ஆழுருக்களில் சுட்டிகள் என்னவெனக் குறிப்பிடுகிறார்கள். எங்களுக்கு பணம் வேண்டுமென்றால் அவர்களின் திட்டத்தை இருக்கும்படியே ஏற்றுக்கொள்ளும்படி கூறுகிறார்கள், எங்கள் கவலை எங்களுக்கு மட்டுமே தெரியும். 'வயோதிபப் பெண்கள்' மற்றும் 'விதவைகள்' போன்ற சுட்டிகளாவன வெளிநபர்களால் எமக்குத் தரப்படுகின்றன, ஆனால், நாமாகவே 25% சுட்டிகளையாவது இனங்கான முடியுமானவர்களாக இருக்க வேண்டும். எங்கள் சுட்டிகளை விருத்தி செய்துகொள்வதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும். அது எங்களிடமிருந்து வரவேண்டும். மேல் மட்டத்திலிருந்து கீழ்மட்டத்துக்கல்ல. நாங்கள் அவர்களின் கட்டளைகளை ஏற்றுக்கொள்கிறோம். ஏனெனில் நாங்கள் அவர்களின் உதவியைத் தான் மதிக்கிறோம். கட்டுப்பாடுகளைத் தாண்டிச் செல்வதையல்ல."

இலங்கையின் மரபுரீதியான கலாச்சார வழிகளையும் விழுமியங்களையும் பராமரிக்க வேண்டியதிலுள்ள வெளிநிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் சமூகத்துக்குள்ள பொறுப்புகள் பற்றி மக்கள் பலவித வித்தியாசமான கருத்துக்களை மக்கள் வெளிப்படுத்தினார்கள்.

"எங்கள் கலாச்சார மற்றும் சமய விழுமியங்களுக்கு அதிகமான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. ஆனால் எந்தவொரு INGO உம் பொறுப்பேற்காது!"
மட்டக்களப்பில் வழிபாட்டுத்தளத்திலுள்ள ஒரு பிக்கு

"இது INGOக்களின் பிரச்சினையல்ல. எங்களுடைய சொந்த கலாச்சாரங்களைப் பேணுவது எங்கள் பொறுப்பு என்பதால் அது எங்கள் சொந்த பிரச்சினையாகும். நாங்கள் எங்கள் வழிமுறைகளை மாற்றிக்கொண்டு வெளிநாட்டவர்கள் போன்று நடந்துகொண்டு,

பின் எவ்வாறு அவர்களைக் குறைகூற முடியும்? நாங்கள் வெளிநாட்டவர்களைப் பின்பற்றக் கூடாது, மாறாக நமக்கு சரியானது எது தவறானது எது என்று நன்கு தெரிந்திருக்க வேண்டும்.”
மட்டக்களப்பிலுள்ள மீள்குடியேற்ற கிராமமொன்றில் வசிக்கும் இளம் பெண்ணொருவர்

“கலாச்சார மாற்றங்களுக்காக NGO க்களைக் குறைகூற முடியாது. சரியெது தவறெது என எல்லோரும் அறிந்திருக்க வேண்டும். நாங்கள் நாங்களாகவே [கலாச்சாரத்தை] பாதுகாத்துக்கொள்ள தெரிந்திருக்க வேண்டும்.”
மட்டக்களப்பிலுள்ள முஸ்லிம் சமூகத் தலைவர்

*B. கௌரவம் மற்றும் மதிப்பு போன்ற விடயங்கள்*

காலி, மட்டக்களப்பு புத்தளம் போன்ற பிரதேசங்களில் அதிகமான மக்கள் வெளிநிறுவனங்கள், அதன் பணியாளர்கள் மற்றும் அவற்றின் தலையீடுகளாலும் “கையாளப்படுவதன்” மீது காணப்படும் அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள். மட்டக்களப்பிலுள்ள INGO வாகனமொன்றில் மோதி காயத்துக்குள்ளான ஒரு தமிழ் மனிதர் அந்த INGO பணியாளருக்கெதிராக ஒரு முறைசார்ந்த முறைப்பாட்டைச் செய்ய முற்பட்ட போது அவர் உள்ளூர் அரச அதிகாரியொருவராலும் அந்த INGO பணியாளராலும் அச்சுறுத்தப்பட்டு பின்னர் கணக்கெடுக்க முடியாத பணரீதியான நஷ்டஈட்டை வழங்கினார்கள். அவருடைய மோட்டார் சைக்கிள் அந்த விபத்தால் இல்லாது போனது. காயமான கால்களை வைத்துக்கொண்டு எவ்வித வேலையும் செய்ய முடியாது. ஏங்களுக்கு அவர் கூறினார், “[வெளிநாட்டு நிறுவனங்கள்] மனித உயிர் என்பது விலைமதிக்க முடியாத ஒன்று என்று தெரிந்து கொள்ள வேண்டிய அதே வேளை அவர்கள் செய்வதென்ன என்பது பற்றி மிகவும் கவனமாக இருக்க வேண்டும். மனிதர்களுக்கு ஒரு மதிப்பை வைத்திருக்க வேண்டும். நாங்கள் ஏழையாக இருக்கலாம், ஆனால் நாங்களும் மனிதர்கள்.”

இதேபோல, அவசர உதவிகள் வழங்கப்படும் முறையிலிருந்து உதவி வழங்கும் நிறுவனங்கள் செய்துள்ள தெரிவுகளைப் பார்க்கும் போது உதவி பெறுனர்களின் கொளரவத்திற்கு கூருணர்வற்றவர்களாக நடந்து கொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது. குறிப்பாக, தருமமளிக்கும் விடயங்கள் வந்து தனிப்பட்ட முறையில் நிகழாமல் அனைவரும் தங்கள் அடையாளங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு எவ்வாறு உதவிகள் வழங்கப்பட வேண்டுமென ஆலோசனைகள் வழங்கப்பட்டது. சுனாமியால் பாதிக்கப்பட்ட ஒரு நபர் கூறுகிறார், “ஒரு கூட்டம் இன்னொரு கூட்டத்தைப் போன்று அவ்வளவாக பாதிக்கப்பட்டில்லை என நீங்கள் உணர்ந்தாலும் மற்றக் குழுவுக்கும் ஏதாவதொன்று கொடுப்பார்கள். இவ்வழியில் யார் எவ்வித தருமம் பெறுகிறார்கள் எனத் தெளிவில்லாமலிருக்கிறது.”

இது போன்ற ஒரு முறையில் உதவிகள் வழங்குவது மக்களுக்கு ஒரு தெரிவு செய்வதற்கான ஒரு வழிமுறைக்கு இட்டுச்செல்வது மிக முக்கியமாக இருக்கிறது. ஏனெனில் அதிகமான மக்கள் வினியோகங்களுக்குப் பதிலாக பணத்தைச் சுட்டிக்காட்டியிருப்பது ஏனெனில் அது அவர்களுக்கு என்ன தேவையென்பதை அவர்களே அறிவார்கள் அதோடு அவர்களுக்கு மிகவும் பொருத்தமானதை அவர்களே தெரிவு செய்வார்கள் என்ற அனுமானத்தைக் கொடுக்கிறது. வினியோகிக்கும் நிலையங்களில் பறித்தெடுப்பதைத் தடுத்தலுக்கும் சிக்கல்களைக் குறைப்பதற்கும் மக்கள் தெளிவான ஒழுங்குமுறையான நியாயமான வினியோகித்தலின் தேவையை வேண்டி நின்றார்கள். தேயிலைத் தோட்டத்திலுள்ள ஒரு ஊழியர் பின்வருமாறு கருத்துத் தெரிவிக்கிறார், “பழைய துணிகளைக் கொடுக்க வேண்டாம். ஏதாவது ஒரு பொருளாவது புதிதாக இருக்க வேண்டும். அல்லாவிட்டால் அது அவமானப்படுத்தியதாக ஆகிவிடும். மக்களுக்கு அனுப்பப்பட்ட சில துணிமணிகளாவன வாகனத்திலிருக்கும் கிறீஸ் அழுக்குகளை அகற்றும் பொருட்டு கராஜுகளுக்கு அனுப்பப்பட்டன.”

அரச, உள்ளூர் NGO மற்றும் CBO, அல்லது கிராம மட்ட கொள்ளளவுகளிலிருந்து மேற்கொண்டுவருவதற்கு முடியாமல் போன நிறுவனங்கள் பற்றி மக்கள் குற்றம் சாட்டினர். இலங்கையிலே பொறியியல் மற்றும் கட்டுமானத்துறை நிபுணர்கள் இருக்கும் போதே வெளிநிறுவனங்கள் அவர்களின் தொழில்நுட்பப் பணியாளர்களை வேலைக்கமர்த்துவது பொருத்தமற்ற ஒரு விடயமாகக் கருதப்பட்டது. வெளிநபர்களையும் உள்ளூர் கிராம மக்களிடையேயும் புரிந்துணர்வை இலகுபடுத்தும் பொருட்டு ஒரு உள்ளூர் தகவல் வழங்குனரையோ ஒரு உப பங்குதாரரையோ தங்கியிருக்காமல் வெளிநபர்கள் நேரடியாக வந்து சர்வகலாச்சார விடயங்களைக் கதைப்பது ஒரு தலைக்கணம் பிடித்த விடயமாக மக்கள் கருதினார்கள். காலியிலுள்ள ஒரு சமூக அங்கத்தவர் கூறுகிறார், “நீங்கள் ஏன் உள்ளூர் அறிவையும் கொள்ளளவையும் மதிப்பதில்லை. எங்களுக்கும் பொறியியலாளர்கள் மற்றும் நிபுணத்துவர்கள் உள்ளார்கள்.” இன்னொரு நபர் கூறுகிறார், “நீங்கள் இங்கு முழுமையாக வளர்ந்த பழங்களுள்ள மரங்களைக் கொண்டு வந்து நடக்கூடாது.”

*செவிமடுக்கும் குழுவின் பிரதிபலிப்புகள்*

உதவிகளாவன மக்களுக்குச் சென்றடையும் சரியான பொருட்கள் மாத்திரமல்ல. ஆனால் இவை எதைக் குறித்து நிற்கின்றன என்று செவிமடுக்கும் குழு அங்கத்தவர்கள் கலந்துரையாடினார்கள். உதவிகளின் பொருத்தப்பாடு மற்றும் தரம் போன்ற விடயங்கள் பற்றிய எண்ணப்பாடுகள் அவர்களின் அந்தஸ்து மற்றும் சமூக நிலைமையால் முன்கூறப்படுகின்றன. குழு அங்கத்தவர்கள் முன்வைத்தார்கள் உதவிப் பணியாளர்கள் இது போன்ற விடயங்களுக்குப் பாராமுகமாக இருப்பதால் அவர்களின் உதவிகள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அகௌரவம் மற்றும் அதிருப்தி போன்ற விடயங்களுக்கு இட்டுச் செல்வதைப் பார்க்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். பணியாளர்களின் தேசிய அடையாளமாக இருந்தாலும் பிரச்சினையில்லை நேரடியாக உதவி வழங்குவதிலும் தீர்மானங்கள் எடுப்பதிலும் சம்பந்தப்பட்டிருப்போர் கலாச்சார முறைபற்றி கூறுணர்வுடனிருக்கும் வேளை கலாச்சார சூழமைவைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள வேண்டும். விசேடமாக உள்ளூர் மொழி பேச முடியாத வெளிநபர்களுக்கு இது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

உதவி நிகழ்ச்சிகள் மற்றும் வினியோகங்களில் ஈடுபட்டுள்ள உள்ளூர் மற்றும் வெளிக்களப் பணியாளர்களைப் பற்றி செவிமடுக்கும் குழு அங்கத்தவர்கள் கலந்துரையாடினார்கள். கலாச்சாரத்துக்குப் பொருத்தமற்ற அல்லது ஊறு விளைவிக்கக் கூடிய நிகழ்ச்சித் தீர்மானங்களைப் பற்றி தேசிய பணியாளர்கள் கூட கருத்துக்கள் முன்வைக்கத் தயங்குகிறார்கள் என்பது இந்த கலந்துரையாடல்களில் சுட்டிக்காட்டப்பட்டன. இதுபோன்ற சில தீர்மானங்கள் நிறுவனத்தின் “நிறுவன வாரியான முன்னுரிமைப்படுத்தல்” காரணமாகச் செய்யப்படுகின்றன எனப் புரிந்து கொண்ட அதேவேளை அதற்குத் தேவையான மாற்றங்களை முன்வைக்க அதிகாரமோ சக்தியோ அல்லாதவர்களாக அவர்கள் கருதிக்கொள்கிறார்கள். பால்நிலைக் கூறுணர்வு போன்ற பிரிவுகளைக் கருத்திற்கொள்ளும் போது தீர்மானமெடுக்கும் செயன்முறையானது மேலிருந்து கீழாக வருவதைக் காண்கின்ற அதேவேளை கருத்து முரண்பாட்டுக்கு இடமில்லை.

பால்நிலைக்கூறுணர்வு மற்றும் நிறுவனத்தின் வேறு முன்னுரிமைகள் இருக்கும் வேளை கலாச்சாரத்துக்கு மிகவும் பொருத்தமாக இருப்பது எதுவென தேசிய பணியாளர்கள் அறிந்திருக்கும் போது அவர்களுக்கு எந்த முன்னுரிமையின் மேல் எதனை எடுத்துச் செல்லலாம் என்று நிச்சயமில்லாதவர்களாக இருக்கிறார்கள். ஒரு குழு அங்கத்தவர் குறிப்பிட்டுக் காட்டுகிறார் மனிதநேயம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பால்நிலை சமத்துவத்தைப் பற்றி அதிகமாக அழுத்திக் கூறும் ஒரு வயோதிபப் பெண்மணி அல்லது பெண்களால் தலைமை தாங்கப்படும் குடும்பங்களிலிருந்து தெரிவு செய்து வீடமைப்பு வசதிகளை வழங்கும் போது வயோதிபப் பெண்கள் தனியாக வாழ மாட்டார்கள் என்ற

ஏற்கனவே கிராமத்தில் காணப்படும் சம்பிரதாயங்கள் பற்றி அவர்கள் தெரியாமலிருப்பார்கள். நிகழ்ச்சித் திட்டமிடலின் போது பால்நிலை பற்றிய கவனம் முக்கியமெனத் தீரமானிக்கப்பட்டு தேசிய பணியாளர்களும் உள்ளூரில் அமுல்படுத்தும் பங்குதாரர்களும் அரசியல் ரீதியாக “படகைக் ஆட்டாமல்” சரியாக இருக்கப் பார்க்கிறார்கள். வெளிக்கள பணியாளர்களுக்கு நிகழ்ச்சியின் நோக்குகளைப் பற்றிக் கதைத்து அதில் செல்வாக்குச் செலுத்துவதற்கும் திட்டங்களை வடிவமைக்குமுன் அதன் முன்னுரிமைகளைக் கூறுவதற்கும் மிகக் குறைந்த வாய்ப்புக்களே வழங்கப்பட்டன என குழு அங்கத்தவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

உள்ளூர் அறிவுகளையும் கொள்ளளவுகளையும் மதிப்பிடுவதற்காக வேண்டி உதவி பெறும் சமூகத்திடமிருந்து வரும் வேண்டுகோள்கள் பற்றி குழு அங்கத்தவர்கள் கலந்துரையாடினார்கள். ஒரு குழு அங்கத்தவர் நினைவு கூறுகிறார் ஒரு பௌத்த பிக்குவின் கருத்து முன்வைப்பை அதாவது உதவி வழங்கும் நிறுவனங்கள் மதிப்பும் நம்பகத் தன்மையும் வாய்ந்த உள்ளூர் சமூகத் தலைவர்களை ஈடுபடுத்தினால் தகவலானது மிக நன்றாக மாற்றப்படும் மக்களும் இன்னும் வெளிப்படையாக இருப்பார்கள். இதுபோன்ற மக்களுடன் உறவுமுறைகளைச் சக்திவாய்ந்ததாகக் கட்டியெழுப்பும் சந்தர்ப்பங்களை அதிகமான நிறுவனங்கள் மக்கள் ஆதரவில்லாத இடை நபர்களிடம் தங்கிநிற்றதன் மூலம் இழக்கிறார்கள். அமைக்கப்பட்டுள்ள அதிகார பகிர்வு மற்றும் உள்ளூர் தலைவர்களின் நம்பகத் தன்மை போன்றவற்றின் புரிந்துணர்வை உதவி வழங்கும் நிறுவனங்கள் அதிகமான வெளிக்கள சமூகமளிப்பு, சமூகத்துடன் கலந்துரையாடல் மற்றும் உள்ளூர் பணியாளர்களுடன் ஆலோசிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். உதவி வழங்கும் நிறுவனங்களுக்குத் தெரியும் வெளியிலிருந்து வரும் உதவிகளாவன மக்கள் மத்தியில் பல வழிகளிலும் செல்வாக்குச் செலுத்தி ஏற்கனவே காணப்படும் சுட்டிகளைக் கொண்டு அளவிட முடியாத சிரமமான தாக்கங்களை விளைவாக ஏற்படுத்தும். அவர்களின் சமூகமளிப்பாலும் உதவிகளாலும் நினைக்காத தாக்கங்கள் ஏற்படுவதைக் குறைப்பதற்கு ஏன் இன்னும் நிறுவனங்கள் அதிகமான செவிமடுத்தலையோ பகுப்பாய்வையோ சமூகத்தில் மேற்கொள்வதில்லை என்ற கேள்வி இத்தாழ் எழுப்பப்பட்டது.

## V. பொருளாதாரம் மற்றும் சமூகத் தாக்கங்கள்

### *A. பொருளாதாரத் தாக்கங்கள்: சம்பளம், பணவீக்கம், வணிகம்*

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இடம்பெறும் பாரியளவான வீடு நிர்மானிப்புகளால் ஏற்பட்டுள்ள பொருளாதாரத் தாக்கங்கள் பற்றியும் INGO சம்பளங்களால் ஏற்படும் பணவீக்கம் பற்றியும் சில மக்கள் கவனத்தை ஏற்படுத்தினர். இங்கு நகர்ப்புறம் மற்றும் நகரங்களில் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்களில் பணிபுரியும் வெளிநாட்டுப் பணியாளர்கள் மற்றும் ஆலோசகர்களினால் அறிமுகப்படுத்தப்படும் அதிக தொகையான வெளிநாட்டு நாணயங்களால் உள்ளூர் பொருளாதாரம் பாதிக்கப்படுவது பற்றியும் செவிமடுக்கும் குழு கேட்டனர். இத்தாக்கங்கள் பாதகமானதாகவும் அதேநேரம் காணப்பட்டது – “இது விலைவாசியைக் கூட்டுகின்றது” – உதவி வழங்கும் நிறுவனங்களுக்கு பொருட்களை வினியோகிக்கும் உள்ளூர் சந்தை மற்றும் வியாபாரங்களுக்கு சாதகமானதாக இருக்கின்றது.

“INGO க்கள் அதிகூடிய சம்பளம் வழங்குவதால் ஊழியர் கிரயமானது அதிகரித்துள்ளது. INGOக்கள் வழங்கும் விலை காரணமாக வாடகை அதிகரித்துள்ளது மற்றும் உள்ளூர் மக்கள் அவர்களின் சொந்தத் தேவையைக் கூடச் செய்ய முடியாமலிருக்கின்றது.”
மட்டக்களப்பிலுள்ள உள்ளூர் மனித உரிமைகள் பரிந்துரையாளர்

“INGO க்களும் உள்ளூர் NGOக்களும் ஒரு பெரிய வியாபாரமாக உள்ளது. அது வருமானத்தை ஈட்டும் சாதகமான விளைவாகக் காணப்படுகின்றது.”
கொழும்பிலுள்ள இலங்கை தேசிய ஆய்வு நிறுவனமொன்றின் ஆய்வாளர்

“நாங்கள் உள்ளூர் தலைவர்களாக நின்று இளம் மக்களை அவர்கள் நிபுணர்களாக வருவதற்குப் பயிற்றுவித்துள்ளோம். INGO க்கள் அவர்களுக்கு சிறந்த சம்பளத்தை வழங்கி அவர்களின் நிறுவனங்களுக்குள்ளே ஈன்றெடுத்துள்ளனர். இன்று ஒன்றுமில்லாமல் நாம் இருக்கிறோம்.”
மட்டக்களப்பில் சுனாமியால் பாதிக்கப்பட்ட உள்ளூர் சிவில் சமூகத் தலைவர்

“இலங்கைப் பொருளாதாரமானது ‘NGO உல்லாசப் பயணிகள்’, ‘இரவு விடுதிகள், உணவு விடுதிகள், etc’ போன்ற நேரடியானதும் மறைமுகமானதுமான மனிதநேய மற்றும் அபிவிருத்திப் பணத்தாலே இயங்குகின்றது.”
கொழும்பிலுள்ள வெளிநாட்டு நிதிவழங்கும் நிறுவனத்தின் பிரதிநிதி

*B. சாதகமான சமூக விளைவுகள்: வலுவூட்டல் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு*

வித்தியாசமான மக்களால் சர்வதேச உதவிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள சாதகமான சமூக விளைவுகளைப் பற்றிக் குறிப்பிடப்பட்டது. சுனாமிக்குப் பிந்திய கட்டத்திலே சமூக ஒருமைப்பாடு மற்றும் ஒன்றுபட்ட செயற்பாடுகள் போன்ற கதைகளை செவிமடுத்தோம். உதாரணமாக அனர்த்தம் நடந்து முதல் சில வாரங்களுக்குள் உள்ளூர் மதத் தலைவர்களும் அந்த ஒரு சில வெளிநாட்டு உதவிப் பணியாளர்களும் அங்கு உடனடியாக விஜயம் செய்திருந்தனர். அவர்கள் சமூக மீள்கட்டுமானத் திட்டங்களை ஊக்குவித்தனர். சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள ஒரு சமூக அங்கத்தவர் கூறுகிறார், “ஒன்றில் அவர்களின் இயலாமையால் அல்லது இன பேதத்தால் பாரம்பரியமாக ஒதுக்கப்பட்டு பின்தள்ளப்பட்டு வந்த மக்களானர்கள் ஒரு வீடு மற்றும் ஏனைய வளங்கள் கிடைத்ததன் பின் சமூகத்தால் பின்னர் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் “சுத்தமானவர்களாகவும் மாறினார்கள்”.

ஊவா மாகாணத்தில் ஒரு உள்ளூர் முஸ்லிம் பெண்கள் குழுவின் உற்சாகமான தலைவியாகக் காணப்படும் பெண்மணியின் கதையைக் கேட்டோம், “சர்வதேச நிறுவனங்களுடன் பங்காளராக மாறியதன் விளைவாக எவ்வாறு சமூக அணிதிரட்டல் மற்றும் அடிமட்ட தலைமைத்துவம் போன்ற விடயங்களில் திறமைவாய்ந்தவர்களாக அவரும் ஏனைய பெண்களும் மாறிய கதையைக் கேட்டோம். சுர்வதேச INGOக்கள் மற்றும் வெளிநாட்டு நிதிவழங்கும் நிறுவனங்களுடன் தாங்களாகவே பேரம் பேசுமளவுக்கு வலுவூட்டப்பட்டதைப் பற்றி மிகவும் தன்னம்பிக்கையுடன் பேசிய மிக ஒரு சிலரே இந்த பெண்கள் குழுக்களிலும் அடங்குகின்றனர்.

*C. சுயமாக நிலைத்து நிற்றல் எதிர் தங்கிநிற்றல்*

திரண்ட தாக்கங்களும் சமூக கட்டமைப்பு மற்றும் கிராம அமைப்பிலே சாதகமான விளைவாக இருந்ததாக விளக்கப்படவில்லை. தங்கிநிற்றல் சமூக தொண்டு தன்மையின் மறைவு மற்றும் கிராம அமைதியின்மை போன்ற வேண்டப்படாத தாக்கங்கள் பற்றியும் மக்கள் கதைத்தனர்.

விஜயம் செய்த சில பிரதேசங்களிலுள்ள மக்கள் அவர்கள் சுயமாக நிலைத்து நிற்கும் தன்மையைப் பற்றிக் கூறினார்கள். அநுராதபுரத்திலுள்ள ஒரு மீள்குடியேறிய நபர் கூறுகிறார், “எனக்கு INGO க்கள் என்பது தேவையே இல்லை. நான் ஒரு ஊர்காவற்படையில் (LTTE தாக்குதலை எதிர்க்க கிராம மட்டத்தில் அமைக்கப்பட்ட பாதுகாப்புப் படை) பணிபுரிந்து பணம் சம்பாதிக்கிறேன் மற்றும் நான் 10 வருடங்களுக்கு முன் இங்கு காணியை வாங்கினேன். மக்களுக்கு உதவிபுரிய வேண்டுமென்றால் நன்று. அவ்வாறு இல்லையெனில் எனக்கு பிரச்சினையே இல்லை.” அருகிலுள்ள பிரதேசத்தில் காணப்படும் மீள்குடியேறிய பெண் கூறுகிறார், “மக்களுக்குத் தேவையான மேலதிகமான உதவிகள் அண்மைக் காலத்தில் வந்தடையுமென்றால் நன்று. ஆனால் எனக்கு எவ்வித

எதிர்பார்ப்புமில்லை". அநுராதபுரத்தில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த இன்னொரு நபர் கூறுகிறார், "பாதுகாப்புப் பிரச்சினை சரிசெய்யப்பட்டால் ஒரு பிரச்சினையுமிருக்காது… எங்களுக்கு ஒரு காணி இருக்குமென்றால் எங்களுக்கென்று ஒரு வீடடைக் கட்டிக்கொண்டு எங்களுடைய சொந்த வாழ்க்கையை நடாத்திக்கொண்டு செல்லலாம். காணியும் ஏனைய வினியோகங்களும் தந்தால் எங்களுக்குச் சுதந்திரமாக இருக்க முடியும்."

பதுளையிலுள்ள சமூகத்தில் மக்கள் கூறினார்கள் ஒரு உதவி வழங்கும் நிறுவனம் தன் நிகழ்ச்சிகளிலிருந்து வெளியேறிய பின் கிராம மக்களானவர்கள் வளங்களை ஒன்றுகூட்டி தொடர்ந்தும் ஒருவருக்கொருவர் உதவி செய்ய முன்வந்தார்கள். அவர்கள் இன்னும் கூறினார்கள், "INGO க்கள் வெளியேறினால் பிரச்சினையில்லை. அனைத்துக் காலங்களிலும் அவர்கள் இங்கிருக்க வேண்டுமென நாம் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அவர்கள் மாதாந்த பண உதவி வழங்கும் போது அதிகமானவர்கள் அதில் தங்கிநிற்கும் நிலை ஏற்படுகின்றது. எங்களுக்கு அது விருப்பமில்லை. எங்களுக்கு எமது சொந்தக் காலில் நிற்க வேண்டும்." இன்னொரு சமூகத்திலே உள்ளூர் பெண்மணி மிகவும் பெருமையுடன் கூறுகிறார், "முன்பள்ளியானது எங்களாலே நடாத்திச் செல்லப்படுகின்றது. எங்கள் பிள்ளைகளுக்காக இந்த முன்பள்ளியை நடாத்துவதில் நாம் அனைவரும் கூட்டுறவோடு செயற்படுகிறோம். இது ஒரு [சர்வதேச INGO] ஆல் கொடுத்துச் செல்லப்பட்ட மிகப் பெரிய உதவியாகும்." புத்தளத்தில் ஒரு உள்ளூர் அரச அபிவிருத்தி உத்தியோகத்தர் கூறினார், "NGO க்கள் மூலம் மக்கள் கற்றுக் கொண்டது அவர்கள் உதவிகள் பெறப்பட அவர்களாக முயற்சிக்க வேண்டும், அது வரும் வரை காத்திருப்பதில்லை என்பதே. மக்களின் பழக்கவழக்கங்களை மாற்றுவதில் நிகழ்ச்சிகள் கவனம் செலுத்த வேண்டும். அவர்களுக்கு 'முடியாது' என்பதில் அவர்கள் நிதம் நம்பிக்கை வைத்துள்ளார்கள். இந்த பழக்கமானது 'எனக்கு முடியும்' என்று மாற்றியமைக்கப்பட வேண்டும்."

எனினும் வெளியிலிருந்து வரும் உதவிகளில் தங்கிநிற்றல் அதிகரித்து வருவதாக மக்கள் கவனம் செலுத்தினார்கள். பதுளை மாவட்டத்திலுள்ள ஒரு விவசாயி கூறுகிறார், "இந்நாட்டிலே பல வளங்கள் இருக்கின்றன. ஆனால் அதிகமான ஏழை மக்களும் இருக்கிறார்கள். சமூக அபிவிருத்தியினூடாக வறுமையை ஒழிக்கும் எண்ணக்கருவானது இன்னும் சாத்தியமாகவில்லை, ஏனெனில் மக்கள் தங்கியிருப்பவர்களாக மாறியிருக்கிறார்கள்." புத்தளத்திலுள்ள ஒரு பிக்கு விளக்குகிறார், "NGOக்களாலே மக்களின் சுயமாக எழுந்து நிற்கும் தன்மை பலவீனமடைந்துள்ளது. மக்கள் உதவிகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்."

இன்னும் சில பிரதேசங்களிலே மக்கள் கவனத்தை எழுப்பினார்கள் வெளியிலிருந்து வரும் உதவித் தலையீடுகளானது பேராசையைக் கட்டியெழுப்பும் அதேவேளை கிராம மட்டத்தில் காணப்படும் தொண்டர் தன்மையைக் குறைக்கின்றது. காலியிலும் பதுளையிலும் சோம்பேறித்தனம் மற்றும் உதவிகளை எதிர்பார்க்கும் தன்மைகள் காரணமாக மக்களின் மதிப்புகள் மதிப்புகள் மோசமாக மாறிக்கொண்டு செல்வதை மக்கள் பேசினர். காலியிலுள்ள ஒரு பிக்கு கூறுகிறார், "உதவியின் காரணமாக மக்களின் தனிப்பட்ட மதிப்புகள் மாறுகின்றன. ஆரம்பத்தில் அவர்கள் ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டு தொண்டர் சேவைகளை வழங்கினர். அருமையாகக் காணப்படும் நிலவரங்களில் இது தான் நிலைமையென்றாலும் பணம் வருகின்ற போது மக்கள் நேர்மையற்றவர்களாகவும், பேராசை பிடித்தவர்களாகவும் மரியாதை குறைந்தவர்களாகவும் மாறுகிறார்கள்."

சமூக அபிவிருத்தி மற்றும் புணர்நிர்மான பணிகளுக்காக வேண்டி பங்களிக்கும் மக்களுக்கு பணக் கொடுப்பனவுகள் வழங்குவது ஒருவிதத்திலே தங்கிநிற்கும் தன்மையை வளர்ப்பதாக ஒரு சில மக்கள் கருதினர். மக்கள் ஞாபகமூட்டினர், ஒரு காலம் இருந்தது. அங்கு கிராம மக்கள் அனைவரும் ஒன்றுகூடி கொடுப்பனவுகளின்றி ஒன்றாக வேலை செய்தார்கள். ஆனால் இன்று அதிகமானோர் NGO க்கள் பணம் தரும் வரை

எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த காலங்களில் மக்கள் சமூக நிறுவனங்களுடன் சேர்ந்து கிராம அபிவிருத்திக்காக வேண்டி சமூக விடயங்களில் பங்கேற்றார்கள், ஆனால் தற்போது உள்ளூர் ஊடீழு ஒன்றில் சேர்கின்றார்கள் ஏனெனில், ஒரு உதவி பெறவேண்டும் அல்லது ஒரு விதமான அந்தஸ்து பெற வேண்டுமென்பதற்காக. பதுளையிலுள்ள கிறிஸ்தவ மதத் தலைவர் கூறுகிறார், “பாரம்பரியமாகக் காணப்படும் ஒருவருக்கொருவர் உதவும் தன்மையை வெளியிலிருந்து வந்து மக்களுக்குப் பணம் வழங்கும் இச்செயலால் பாதிக்கப்படும்.” INGO க்களாவன கிராமத்தில் ஏற்கனவே காணப்படும் கட்டமைப்பைப் புதியதொன்றை உருவாக்காமல் பயன்படுத்தியிருக்கலாம் என காலியில் சிலர் கருத்து முன்வைத்தார்கள். இதனால் அவர்கள் ஏற்கனவே காணப்படும் மக்களின் வலுவையும் கட்டமைப்பையும் பறிமுதல் செய்திருக்கிறார்கள்.

உதவி வழங்கலாவன ஒருவித தங்கிநிற்றலுக்கு வழிவகுக்கின்ற ஒரு குறைப்பாட்டைக் கொண்டிருப்பதாக பதுளையிலுள்ள ஒரு கிராமத்தில் மக்கள் குறித்துக்காட்டுகிறார்கள், உதாரணமாக குடிநீர் மற்றும் சுகாதார திட்டங்கள் அவற்றில் பராமரிப்பு ஆற்றல்கள் தொடர்பான பயிற்சிகளை உள்ளடக்காதது. மக்கள் தாங்களாகவே இக்கருவியைப் பொருத்த முடியாதவர்களாக இருப்பதுடன் நகர்ப்புறத்தில் அதிகமான பணம் வசூலிக்கும் நிபுணர்களின் தயவை இச்சேவைக்காக வேண்டி நிற்கிறார்கள். மக்களின் ஆதரவற்ற தன்மையையும் தேவைகளையும் மாத்திரம் கவனிக்காமல் அவர்களின் கொள்ளளவைப் பார்த்து அதில் முதலீடுகள் செய்து அதை அங்கீகரித்திருந்தால் தங்கிநிற்கும் தன்மை இல்லாதொழித்திருக்கலாமென மக்கள் வாதாடினார்கள். பதுளையிலுள்ள ஒரு பெண்மணி கூறுகிறார் இது மிக முக்கியம் “ஏனெனில் நாங்கள் பல விடயங்களைச் செய்ய முடியுமானவர்களாக இருக்கிறோம். சிலநேரம் எங்களுக்கு சில வளங்களும் புதிய அறிவுமே அவசியப்படுகின்றது. எங்களுக்கு வாழ்க்கை பூராவும் பொருட்களைப் பெற்றுக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. எங்களுக்கு சுதந்திரமாக இருக்க வேண்டும். எங்கள் வாழ்க்கைகளை எங்களுக்கு முன்னேற்றிக் கொள்ளலாம்.”

“இந்தப் பாரிய உதவிகளின் காரணமாக ஒரு கவனிக்கத்தக்க மாற்றங்கள் மக்களின் மனோபாவங்களில் காணப்படுகின்றன. தங்கிநிற்றலும், பேராசையும் ஒரு உண்மையான விடயம். சில NGO க்களும் நிதிவழங்குனர்களும் அவசியமில்லாத பொருட்களை வினியோகிக்கிறார்கள். அத்துடன் அவர்கள் ஏற்கனவே வாக்குக் கொடுத்த விளைவுகளைக் காட்டவும் தேவையான அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும் பொருத்தமில்லாத பணிகளை ஆற்றுகின்றார்கள். சில சமூகங்களிலே ஏற்பட்ட பாதகமான விளைவுகளை ஒரு உதாரணமாகக் கூறலாம், தற்போது அச்சமூகமானது சமூகத்தை மையப்படுத்திய நுன்கடன் திட்டங்கள் அல்லாமல் ‘NGO கடன்’ களைக் கேட்டு நிற்கின்றார்கள். அதிகமான மக்கள் மீளச் செலுத்தாமல் தப்பிச் செல்வதால் NGO கடன்களாவன ‘இலவசம்’ என அவர்கள் நினைக்கிறார்கள். சேமிப்புக் குழுக்களிடமிருந்து பெறும் கடன்களாகன அதிக பொறுப்பையும் கண்குக் காட்டலையும் வேண்டி நிற்கின்றது. INGO க்களாவன ஒரு இலகு பணம் வழங்கும் இலகு வங்கியாகக் காணப்படுகின்றது.”
கொழும்பிலுள்ள வெளிநாட்டு நிதிவழங்கும் நிறுவனப் பிரதிநிதி

தனிநபர் தங்கிநிற்றலுக்கு மேலதிகமாக சில அரசியல் கட்சி அங்கத்தவர்களும் அரச அதிகாரிகளும் வெளியுதவிகளில் தேசிய தங்கநிற்றலைப் பற்றி தொடர்ச்சியாக சில விடயங்களை எழுப்பினார்கள். பதுளையிலுள்ள ஒரு அதிகாரி கூறுகிறார், “ஒரே விடயத்தைச் செய்த வண்ணம் நீண்ட காலமாக ஒரு INGO காணப்படக்கூடாது. அரசாங்கம் ஒரு கட்டத்திலிருந்து அதனைப் பொறுப்பெடுத்து வெளியுதவிகளின்றி சுதந்திரமாக அதனைச் செய்ய முடியுமானவர்களாக இருக்க வேண்டும்.” ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கூறுகிறார், “நாட்டின் அடையாளத்தையும் சுதந்திரத்தையும் குறைக்காமல் அதனை மிருதுவாகக் கையாளும் பட்சத்தில் உதவிகளாவன மோசமெனக் கூற முடியாது.”

*செவிமடுக்கும் குழுவின் பிரதிபலிப்புகள்*

சில நிறுவனங்களின் நடவடிக்கைகள் எவ்வாறு தங்கிநிற்றலை உருவாக்குகின்றதென குழு அங்கத்தவர்கள் கலந்துரையாடினார்கள். எப்பொழுதும் உதவிக்காக வர யாராவது இருக்கிறார்களென சிலர் எண்ணியதுடன் மற்றும் சுனாமிக்குப் பின் அதிகமான மக்கள் உதவிகள் பெற்றுக்கொண்டதாலும் அதிகமான மக்கள் "சந்தைக்குச் சென்றார்கள்." திறமைகளை வளர்க்காமல் உதவிகளை வழங்கும் சந்தர்ப்பங்களிலே இது இன்னுமின்னும் உதவிகளைக் கேட்கும் நிலைமைக்கு மக்களைத் தள்ளுகின்றது.

மக்களின் எதிர்பார்ப்பில் உதவி வழங்கும் நிறுவனங்களின் நீண்டகால சமூகமளிப்பானது எவ்வாறான தாக்கங்களை உருவாக்கினறனவென குழு அங்கத்தவர்கள் கலந்துரையடினார்கள். உறவுகளை மேம்படுத்தவும் சூழமைவைப் பற்றிய சிறந்த புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்ளவும் காரணமாவதால் நிறுவனங்கள் நீண்டகாலம் கடமையிலிருப்பதை அதிகமான சமூகங்கள் பாராட்டினர். ஆனால் மறுபக்கத்தில், திட்டங்களாவன விரைவாக வெளியேறும் போது மக்கள் சிலவேளை தங்கள் கொள்ளளவை இன்னும் கட்டியெழுப்ப முடியுமானவர்களாக ஆகுகிறார்கள். ஒரு குழு அங்கத்தவர் கேட்கிறார், "யார் யாரில் தங்கியுள்ளார்கள்? எங்கள் வாழ்க்கையை நாங்களாகவே மேலும் வேலைகளை உருவாக்கிக் கொள்வதன் மூலம் நீடித்துக் கொள்கிறோமா? நம்மில் சிலர் எமது சொந்த விடயங்களை – NGO நீடிப்பு பற்றி மாத்திரம் கவனமாக உள்ளோமா?" இன்னொரு குழு அங்கத்தவர் குறிப்பிடுகிறார், தங்கி நிற்றலென்பது ஒரு மோசமான விடயமன்று சமூக மட்டத்தில் ஒருவகையில் காணப்படும் ஒன்றுக்கொன்று தங்கியிருத்தலில் ஒரு மதிப்பிருக்கின்றது. இதற்கு நிறுவனங்கள் கைகொடுக்க வேண்டும்.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பணியாளர்களின் உறவுமுறைகளில் தங்கிநிற்றலைப் பற்றி செவிமடுக்கும் குழு அங்கத்தவர்கள் கலந்துரையாடினார்கள். உள்ளூர் பணியாளர்களை நிபுணர்கள் வந்து தங்கிநிற்றலைக் குறைப்பதற்காக வேண்டி பயிற்றுவித்தாலும் உள்ளூர் பணியாளர்கள் வெகுவாக வெளிநாட்டவர்களிலே தங்கியிருக்கிறார்கள். வெளிநாட்டுப் பணியாளர்கள் உள்ளூர் பணியாளர்களை வழநடாத்த வேண்டும் அவர்களைக் கட்டுப்படுத்தக் கூடாது, அதேபோன்று உள்ளூர் திட்டமிடல் மற்றும் தீர்மானமெடுக்கும் விடயங்களை ஊக்குவிக்க வேண்டும். அதேபோல் உள்ளூர் பணியாளர்கள் சிலவேளை அவர்களின் தொழில்களை இழந்து விடுவார்கள் என்ற பயத்தில் சுதந்திரமாகக் கதைப்பதற்கு முன்வருவதில்லை. சில முயற்சிகள் சமூகத்தில் அமுல்படுத்துவது சாத்தியமாகாது என அறிந்திருந்தாலும் மேல்மட்ட நிகழ்ச்சி அதிகாரிகளிடமோ தலைமைக் காரியாலயத்திலோ முறுகல் நிலை வருமா என்ற பயத்தில் புதிய தலையீடுகளை அவர்கள் எதிர்ப்பதில்லை.

## *D. பாதகமான சமூக விளைவுகள்: சமூகங்களுக்கு உள்ளே மற்றும் இடையிலுள்ள குமுறல்கள்*

சமூக மட்டத்திலுள்ள உதவிகள் சமானமற்ற முறையிலே வினியோகிக்கப்படுகின்றன என்ற உள்ளெண்ணத்தால் பிரிந்துள்ள சமூகங்களைப் பற்றி அதிகமான மக்கள் கதைத்தார்கள். கடும் பகையின் உணர்வுகளாவன பொறாமை தொடக்கம் நேரடிக் கோபங்களாகவும் ஆட்சேபனைகளாகவும் பலதரப்பட்ட சமூகங்களுக்கிடையிலும் உள்ளும் வெளிக்காட்டப்பட்டன. சுனாமியால் பாதிக்கப்பட்ட காலியிலுள்ள பெண்மணி உதவிகளைப் பெற்ற ஏனைய சுனாமி உதவி பெறுனர்களைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்: "ஒரு பெரிய கல்லையெடுத்து அவர்களை அடிக்க வேண்டும்போல் தோன்றுகின்றது." புத்தளத்தில் INGO ஒன்றால் கட்டப்பட்ட முன்பள்ளிப் பாடசாலையொன்றைப் பற்றி IDP முகாமொன்றில் வசிக்கும் நபரொருவர் கூறுகிறார், "இந்த முன்பள்ளிப் பாடசாலையானது கட்டப்பட்டது மிகவும் பிரயோசனமானது. ஆனால் கட்டப்பட்டது தனியார் காணியில். இப்பொழுது அம்முன்பள்ளிப் பாடசாலையை காணி உரிமையாளர் ஆள்கிறார், மக்கள்

அதனைப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் அதனைப் பொதுக்காணியொன்றில் கட்டியிருந்தால் எங்கள் கிராமம் இரண்டாகப் பிரிந்திருக்காது.”

“வடிகாலமைப்புத் திட்டத்தில் சாதகமானதும் பாதகமானதுமான விளைவுகள் காணப்படுகின்றன. மீள்குடியேற்றமானது அதிகமான விவசாயிகளுக்கு தொழில்களைப் பெற்றுக்கொள்ள இடமளித்தது. என்றாலும் அதிகமான மீள்குடியேறிய மக்கள் சிங்களவர்கள். சனத்தொகைக் கட்டமைப்பை மாற்ற அரசானது சர்வதேச உதவியைப் பயன்படுத்தியது.”
ஊவா மாகாணத்திலுள்ள ஒரு சமூகத் தலைவர்

“பல வருடங்களாக இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட IDP க்களை விட அதிகமான உதவிகள் சுனாமி IDPக்களுக்கு வழங்கப்பட்டதால் சுனாமிக்குப் பின்னர் சிரமங்கள் காணப்பட்டன.”
கொழும்பிலுள்ள மனிதநேய அமைப்பொன்றின் தலைவர்

“வெளிநாட்டு அனுசரனையாளர்களால் தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகள் எனது மகளை இகழ்ந்து பரிகசித்தார்கள். எமது கிராமத்தில் பெற்றோர், அயலவர்கள் மற்றும் சிறுவர்களுக்கிடையில் குமுறல்கள் உள்ளன.”
பதுளை கிராமமொன்றிலுள்ள இரு பிள்ளைகளின் தாயார்

புத்தளத்தில் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் (வெளியூர்காரர்கள்) மற்றும் உள்ளூர் மக்கள் (சுதேச மக்கள்) இடையிலுள்ள குமுறல்களைப் பற்றி மக்கள் கலந்துரையாடினார்கள். ஒரு உள்ளூர் சமூக அங்கத்தவர் கூறுகிறார், “அமைதியாக மேலே காணப்பட்டாமலும் முஸ்லிம் தரப்பினராகிய IDP க்கள் மற்றும் உள்ளூர் மக்களுக்கிடையே பிரச்சினை மெதுவாக உருவாகிக்கொண்டிருக்கிறது.” ஒரு பிரதேசத்திலுள்ள ஒரு பாடசாலை ஐனூ சிறுவர்களுக்கென்றே ஒதுக்கப்பட்டிருப்பதால் இது கூடிய பொறாமையை உள்ளூர் மக்கள் மத்தியில் உருவாக்கியுள்ளது. ஒரு கடை உரிமையாளர் கூறுகிறார், “நாங்கள் IDPக்களுக்கு இடம் கொடுத்தோம், ஆனால் INGO க்கள் எங்களை மிதித்தார்கள்.” ஒரு முஸ்லிம் மதகுரு பின்வருமாறு கணிப்பீடு செய்கிறார், “முதலில் IDP க்களுக்கு உள்ளூர் சமூகம் உதவி செய்தது. பின் அந்த IDP சமூகம் உதவிகள் பெற ஆரம்பித்த பின்தான் அவர்களின் வாழ்க்கைகள் நன்றாக மாற ஆரம்பித்தது. உள்ளூர் சமூகம் பின்தள்ளப்பட்டுள்ளார்கள். தற்போது அவர்கள் மனமுடைந்து கோபப்படுகிறார்கள்.” ஒரு சிற்றொழிலாளர் கூறுகிறார், “அவர்கள் ஒன்றுமில்லாமல் வந்தார்கள். ஆனால் ஓரிரண்டு வருடங்களுக்குள் பணமுள்ளது, காணியுள்ளது, வீடுகளும் கட்டுகிறார்கள். அவர்கள் இன்னமும் உலருணவுகள் பெற்ற வண்ணம் உள்ளார்கள். நாங்கள் இன்னும் ஏழைகளாக இருந்தாலும் எங்களுக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை.”

இந்த குமுறல்களைப் பற்றி சில உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் எங்களோடு கதைத்து உள்ளூர் சமூகத்தில் காணப்படும் வறுமைப் பிரச்சினையானது கவனிக்கப்பட வேண்டுமென ஏற்றுக்கொண்டார்கள். ஒருவர் கூறுகிறார், “உள்ளூர் மக்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்படவில்லை என எங்களுக்குத் தெரியும் அதேவேளை அவர்களுக்கும் இவ்வுதவிகள் வழங்கப்பட வேண்டுமென நாம் நினைக்கிறோம். உள்ளூர் மக்கள் அனைத்தையுமே இழக்காததால் அவர்களுக்கு இவ்வுதவிகள் வழங்கப்படவில்லையென நான் நினைக்கிறேன், ஆதலால் நாம் தான் அதிகம் உரித்துடையவர்களெனக் கருதப்படுகின்றது.”

இதற்கு மாற்றமாக, அரசு மற்றும் உதவி நிறுவனங்களாவன இந்த குமுறல்களை நீக்க மிகவும் கவனமான ஒரு படிமுறையை ஏற்படுத்தியிருக்கிறார்களென புத்தளத்திலுள்ள ஒரு மாவட்டப் பணியாளர் கூறுகிறார். அவர் பின்வரும் உதாரணத்தை முன்வைக்கிறார்: “IDP

முகாம்களுக்கு 20 மலசலகூடங்கள் வழங்கப்பட்டால் இன்னுமொரு 10 அலகுகள் உள்ளூர் சமூகங்களுக்குக் கட்டப்படுகின்றன." உள்ளூர் உதவிப் பணியாளர் கூறுகிறார், "உடனடி நிவாரணமானது IDP க்களுக்குப் போய்ச் சேர வேண்டுமென நாம் எண்ணுகிறோம். ஆனால் நீண்டகால நிகழ்ச்சிகளாவன வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள IDP மற்றும் உள்ளூர் சனங்களைக் கவனிக்க வேண்டும் ஏனெனில் இது அவர்கள் இருதரப்பினருக்குமிடையில் இடம்பெறும் முரண்பாடுகளை நீக்கும்."

இறுதியாக உதவி நிறுவனங்களின் கூலிக்கமர்த்தும் முறைகளின் உதாரணங்களைப் பற்றியும் அவற்றில் ஏற்கனவே காணப்படும் இனப் பிரிவினருக்கிடையில் ஏற்படுத்தும் பாதகமான தாக்கங்கள் பற்றியும் மக்கள் உதாரணங்களை முன்வைத்தனர். மட்டக்களப்பில் INGO க்களால் உதவிப் பணியாளர்களாக தமிழர்களே அதிகம் வேலைக்கமர்த்தப்படுகிறார்கள் என மக்கள் முன்வைக்கின்றனர். அவர்களுக்கு பரிபாலன அதிகாரம் வழங்கப்படும் போது அவர்களுடைய சொந்தங்களை வேலைக்கமர்த்தி தமிழ் சமூகங்கள் அதிகம் பயன்படுமளவு நிகழ்ச்சித் தீர்மானங்களை மேற்கொள்கிறார்கள். மாற்றமாக மறுபக்கத்தில் INGO க்களால் ஒரு சில முஸ்லிம்களே வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். இது இச்சமூகத்துக்கு விளைவாகக் குறைந்த சேவைகளை வழங்குகின்றது. முஸ்லிம் அரசியல்வாதிகள் முஸ்லிம் சமூகத்துக்கு மட்டும் உதவிகள் புரிவதற்கான காரணமாக இதுவும் காணப்பட்டது.

## VI. நிதிவழங்கும் நிறுவனங்களினதும் அமுல்படுத்துனர்களினதும் பாத்திரங்களும் பொறுப்புக்களும்

இலங்கையில் நிதிவழங்கும் மற்றும்.·.அல்லது நிகழ்ச்சிகளை அமுல்படுத்தும் நிறுவனங்களின் பொறுப்புக்கள் மற்றும் பாத்திரங்களையும் பற்றி பொதுவாக அனைத்துக் கலந்துரையாடல்களிலும் மக்கள் கேள்விகள் எழுப்பி, கருத்துக்களைப் பரிமாறி, வேண்டுகோள்களை முன்வைத்து பரிந்துரைகளைச் செய்தார்கள். நிதிவழங்கும் நிறுவனங்களைப் எனும்போது மக்களிடம், வெளிநாட்டிலோ கொழும்பிலோ உள்ள நிதிவழங்கும் நிறுவனங்களுக்கிடையிலும் உள்ளூர் பங்காளர்களூடாகவோ அல்லது நேரடியாகவோ வந்து திட்டங்களை அமுல்படுத்தும் சர்வதேச NGO க்களுக்குமிடையிலும் பெரிதாக வித்தியாசம் காணப்படவில்லை. அதிகமான உதவி பெறுனர்களுக்கு, உதவிகளை அமுல்படுத்துவதிலும் நிதிவழங்குவதிலும் இலங்கையிலுள்ள ஏதாவது ஒரு வெளிநாட்டு நிறுவனங்களானது ஒரு நிதிவழங்கும் நிறுவனமாகவே கருதப்பட்டது.

நிதிவழங்கும் நிறுவனங்களாவன என்ன செய்ய வேண்டுமென்ற மக்களின் புரிந்துணர்வானது அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதிவழங்குனராக அல்லது 'வங்கியாக', திட்டங்களின் தரம் மற்றும் நியாயம் போன்றவற்றை உறுதி செய்யும் "பொலிஸ்காரராக", மற்றும் கண்காணிப்பதற்குப் பொறுப்பானவர்களான, வேறு சில பாத்திரங்களான ஒரு "நண்பர்", "குணப்படுத்துபவர்" மற்றும் "தொழில் ரீதியான நண்பர்" எனக் காணப்பட்டன. உதவி வழங்கும் நிறுவனங்களின் பாத்திரம் மற்றும் பொறுப்பு தொடர்பான கலந்துரையாடல்களில் ஒரு பொதுவான தலைப்பானது நிதிவழங்கும் நிறுவனங்களுக்கும் பயனாளிகள் சமூகத்துக்குமிடையே தொடர்ந்து தொடர்பு வைத்திருத்தலும் உறவுகளைக் கட்டியெழுப்புவதுமாகும்.

### *A. பணிக்கட்டளை மற்றும் பணிக்கட்டளை பற்றிய தொடர்பாடல் செய்தல்*

INGO க்கள் மற்றும் நிதிவழங்கும் நிறுவனங்களாவன அவர்களின் பணிக்கட்டளைகள் என்ன என்றும் பயனாளிகளோடு சேர்ந்து அவர்களுக்காக என்ன செய்யத் தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள் எனவும் விளக்க மக்கள் கேட்டுக்கொண்டனர். ஏனெனில் அவ்வாறில்லாவிட்டால் நிதிவழங்கும் நிறுவனங்கள் மற்றும் INGO க்கள் அவர்களுக்கு வழங்க முடியுமான உண்மையான அளவை விட அதிகமாக அவர்கள் எதிர்பார்ப்பார்கள். அதிகமான உதவி பெறுனர்கள், இந்தத் தொடர்பாடலின் பின்னடைவும்

தொடர்ச்சியாகக் கைகூடாத எதிர்பார்ப்புக்களும் INGO க்கள் மீது ஒருவித நம்பிக்கையற்ற தன்மைக்கும் கோபத்துக்கும் இட்டுச் சென்றுள்ளது.

"உதவி பெறுனர்களுடனான பொது உறவுமுறை உட்பட மக்களோடு எவ்வாறு தொடர்பு வைத்திருக்க வேண்டுமென INGO க்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும்."
மட்டக்களப்பிலுள்ள உள்ளூர் மனித உரிமைகள் பரிந்துரையாளர்

"உங்கள் நிறுவனம் என்ன செய்கின்றதென மக்களுக்கு விளக்க சிரமங்கள் எடுங்கள். அதிகமான மக்கள் புரிந்து கொள்வதுடன் மக்கள் மத்தியில் ஏற்படும் தவறான புரிந்துணர்வுகளையும் தடுக்கலாம்."
காலியில் NGO ஒன்றை நடாத்திச் செல்லும் பௌத்த பிக்கு

"INGO க்கள் வரும் போது அவர்கள் அனைவரினதும் தேவைகளைப் புரிந்து கொள்வதுடன் அவர்களால் என்ன செய்ய முடியுமென்பதையும் முன்வைக்க முடியுமானவர்களாக இருக்க வேண்டும். இது தவறான புரிந்துணர்வுகளுக்கு இடமளிக்காது."
பதுளையில் கிராமமொன்றிலுள்ள ஒரு விவசாயி

"INGO க்கள் சமூகத்துக்கு நேரடியாக விஜயம் செய்வதுடன் அவர்களின் தேவைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். உத்தியோகபூர்வ ஆவணங்களைக் கொண்டு வருவதை விட அவர்கள் முதலில் வந்து கலந்துரையாட வேண்டும். இப்பொழுது நீங்கள் இங்கு செய்யும் வேலையைப் போன்றிருக்க வேண்டும்."
செவிமடுக்கும் குழுவைச் சுட்டிக்காட்டியவராக அநுராதபுரத்திலுள்ள ஒரு விவசாயி

"அவர்களுக்கு பங்குபற்றும் தெரிவுகளைக் கூட்டிக்கொள்ள, உதவிகளுக்கு சவால் விடுவதற்கும் அதில் அவர்கள் [பயனாளிகள் சமூகம்] பங்குபற்றுதலுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துவதிலும் மட்டுப்படுத்தும் வகையில் போதாத தகவல்கள் கொண்ட அச்செயன்முறையில் குறைபாடுகள் இருப்பதாக நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்... சர்வதேச நிறுவனங்களுக்குச் செய்யக்கூடியதைவிட அதிகமாக அளவீடு செய்வதும் திட்டமொன்றின் வெற்றிக்குக் தாக்கம் விளைவிக்கும் ஏனைய காரணிகளைப் பற்றி அறிந்திருப்பதும் ஒரு திட்டத்திலிருந்து பயனடைவதற்கான வழிமுறைகளையும் வாழ்க்கையை முன்னேற்ற அவர்களாக என்ன செய்துகொள்ள வேண்டும் என்பது தொடர்பாக அவர்களுக்குக் கல்வி வழங்கப்பட வேண்டும்."
கொழும்பிலுள்ள சர்வதேச நிறுவனமொன்றின் நிகழ்ச்சிப் பணியாளர்

சில மக்கள் திட்டங்களை அமுல்படுத்துவதிலுள்ள முன்னேற்பாடுகளின் போது சந்தேகங்களுடன் அதைப் பார்ப்பதாகவும் INGO பணியாளர்களின் பழக்கவழக்கங்களைப் பார்ப்பதற்கு "புறக்கணிக்கின்ற" என்ற வசனத்தைப் பாவித்தார்கள். INGO திட்டங்களைப் பற்றி குறிப்பிட்டளவு மக்கள் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை முக்கியமாக ஏனெனில் உருவாக்கப்படும் திட்டங்களுக்குப் பின்னாலுள்ள நோக்கங்களைப் பற்றி ஏற்கனவே செய்யப்பட்ட கணிப்பீடுகள் மற்றும் ஆய்வுகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மக்களானவர்கள் ஒரு கணிப்பீட்டை கிராமமொன்றினூடாக மிக வேகமாகச் செய்து கொண்டு போகும் மேலதிகமான தகவல்கள் வழங்காத அதன் பின் காணவே முடியாத 'கணிப்பீட்டு ஆவிகளை' ப் பற்றிக் குறிப்பிட்டார்கள்."

"சில NGO க்கள் இங்கு வருகிறார்கள், தகவல்களைச் சேகரிக்கிறார்கள் பின் மீண்டும் இங்கு வருவதில்லை. மக்கள் மிகவும் வெறுப்படைந்துள்ளார்கள். ஏனைய நிறுவனங்களும் இதே வழியில் செல்கின்றனர். ஆதலால் மக்கள் இனிமேலும் கலந்துரையாடல்களில் ஈடுபட விருப்பமில்லாதவர்களாக இருக்கிறார்கள்."
பதுளையில் கிராமமொன்றிலுள்ள ஒரு பெண்

“வெளிநாட்டு நிதிவழங்கும் நிறுவனமொன்றால் நிதிவழங்கப்பட்ட ஒரு CBO இனிமேல் வரப் போகின்ற ‘சமாதானக் குழுவொன்றுக்காக’ வேண்டி ஆயத்தமாவதற்கு சுற்றிவரவுள்ள சமூகத்தைக் கணிப்பீடு செய்து கொண்டிருந்தார்கள். இவை என்னவென எங்களுக்கு எவ்வித அறிவுமில்லை. அதேபோல என்ன செய்வார்களென்றும் எங்களுக்குத் தெரியாது. இது எங்களுக்குத் தேவையான விடயமா என எங்களுக்கு நிச்சயமில்லை. அதேநேரம் இக்கணிப்பீடுகளின் வெளிப்பாடாக என்ன வருகின்றது எனப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இது போன்ற திட்டங்கள் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றன என்று நான் மிகவும் குழப்பத்துடன் இருக்கின்றேன்.”
பதுளையில் கிராமமொன்றிலுள்ள ஒரு பெண்

“சில நிறுவனங்கள் ஒரே கணிப்பீடுகளைச் செய்ய வருகின்றன, ஆனால் ஒருவர் கூட ஏன் எதற்காக அவை செய்யப்படுகின்றன எனக் கூறுவதில்லை. சில நிறுவனங்கள் அவர்களின் நோக்கங்களில் மிகவும் தெளிவாக இருக்கிறார்கள், ஆனால் வேறுசிலர் அவ்வாறில்லை. ஆதலால், நிறுவனங்கள் அவர்களின் வேலைகளை முடிப்பதற்குச் சிரமப்படுகிறார்கள். ஏனெனில், சமூகத்துக்கு இந்நிறுவனங்கள் எதனை எய்தப் போகிறார்கள் என்பது தெரியாமலிருக்கிறது.”
அநுராதபுரத்திலுள்ள ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளர்

கிழக்கில் IDP முகாம்களில் தொடர்பாடல் மற்றும் தகவல்களுக்குமான வசதி மிகவும் குறைவாகக் காணப்பட்டதுடன் அநுராதபுரத்தில் முரண்பாட்டுப் பிரதேசங்களில் ஒரு குறிப்பிட்ட மட்டத்துக்குக் காணப்பட்டது. உள்ளூர் அரச அதிகாரிகள் இனிமேல் அவர்களுக்கு நடைபெறப் போகின்றது எனக் கதைக்காததால் IDP க்களுக்கு அவர்கள் தங்கள் பூர்வீக வீடுகளுக்குத் திரும்புவார்களா என நிச்சயமில்லாமலிருந்தது. IDP முகாம்களில் அவர்கள் தங்கிநிற்கும் போது என்ன உதவிகள் மற்றும் சேவைகளுக்கு அவர்களால் அடைய முடியுமென்பது பற்றித் தெளிவில்லாமலிருந்ததுடன் தொடர்ச்சியாக அவர்களுக்கு உணவு வசதியுற்பட என்ன கிடைக்கும் எனத் தெரியாமலிருந்தது. புத்தளத்தில் ஒரு முதிய முகாம் வதிவாளர் கூறுகிறார், “நாங்கள் 1990 இலிருந்து நாங்கள் இங்கிருக்கிறோம். 90 களிலிருந்து எல்லாவிதமான நிறுவனங்கள் எங்களிடம் வந்து எல்லா வாக்குகளையும் தருகிறார்கள். ஆனால் இது வரையும் ஒன்றும் நிகழவில்லை… சில மக்கள் வாக்குகளோடு வருகிறார்கள், தரவுகளைப் பெற்றுச் சென்றுவிடுகிறார்கள் ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. அவர்கள் வாக்குகளைத் தந்து சென்றுவிடுகிறார்கள்.”

சமூக அணிதிரட்டுனர்களால் புரிந்துணர்வை அதிகரிக்கும் சில INGO க்களைப் பற்றி மெச்சப்பட்டன. கடையொன்றில் பணிபுரியும் அநுராதபுரத்திலுள்ள ஒருவர் கூறுகிறார், “INGOக்கள் சமூகத்திலுள்ள மக்களிடமிருந்து உள்ளீடுகளை எதிர்பார்த்தாலும் INGOக்களின் சேவைகளைச் செய்வதற்கு சில நேரங்களில் மக்கள் அவர்களையோ உற்சாகமான பங்களிப்பையோ வழங்குவதில்லை. INGOக்களால் சமூக அணிதிரட்டுபவர்கள் அனுப்பப்படுவது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த உதவவும் அவர்களுக்கு வழிகாட்டல்களை வழங்கவுமாகும். திட்டத்தின் மீது INGOக்களின் பங்களிப்பு இதிலிருந்து புலப்படுகின்றது.”

*செவிமடுக்கும் குழுவின் பிரதிபலிப்புகள்*

வினைத்திறனில்லாத முற்றுப்பெறாத செயன்முறைகள் மற்றும் தொடர்பாடல் வழிமுறைகள் பற்றி மக்கள் தம் கருத்துக்களை செவிமடுக்கும் குழுவுடன் கலந்துரையாடினார்கள். மக்களின் உள்ளீடு மற்றும் பங்குபற்றுதலை வரவேற்பதாகவும் சந்தேகங்கள் மற்றும் குழப்பங்களைக் குறைப்பதாகவும் உடனடியாக மக்களின் எதிர்ப்பார்ப்புக்களைக் கூட்டாததாகவும் அமையும் உதவித் தலையீடுகளின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளாவன தொடர்புபடுத்திக் கொள்வதன் நோக்கம் பற்றிய செயற்பாட்டில் சவால்கள் காணப்பட்டன. இது அடிக்கடி நிகழப்படும் விஜயங்களால் செய்யப்படவேண்டிய ஒரு பன்முக

தொடர்பாடல் நோக்கமாகும். ஒரு தனிப்பட்ட விஜயத்திலோ கூட்டத்திலோ அல்லது அறிவித்தல் மூலமாகவோ வினைத்திறனான கருத்துப் பரிமாற்றமும் உள்ளீடுகள் சேகரிக்கும் நோக்கமும் நிறைவேறாது. நிறுவனங்கள் கிராமத்திலுள்ள அனைவரையும் ஒன்றுசேர்த்து பின் அவர்கள் என்ன செய்யப் போகிறார்களெனத் தெளிவில்லாமல் இருந்தால் அத்தனை மக்களையும் ஒன்றுதிரட்டியதில் அர்த்தமில்லாமல் போய்விடும். ஒரு குழு அங்கத்தவர் தன் சொந்த நிறுவனத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார், "உள்ளூர் மக்கள் இதுபோன்ற கலந்துரையாடல்களில் இணைந்திருப்பதாலும் கூடிய தொடர்பாடலினாலும் எங்கள் நிகழ்ச்சிகள் முன்னேறியுள்ளன. அதிகமான மக்களைத் தொடர்ந்து ஈடுபடுத்துவது குறைந்த குமுறல்களையும் குறைந்த எதிர்ப்புகளையும் ஈடுபடுத்துவதுடன் பிரச்சினைகள் தீர்ப்பதையும் ஊக்குவிக்கின்றது."

*B. செயன்முறையில் உதவி பெறுனர்களை ஈடுபடுத்தல்*

அமுல்படுத்தும் நிறுவனங்களிடம் காணப்படவேண்டிய திட்டங்களைத் திட்டமிடலிலும் மற்றும் அமுல்படுத்தலிலும் மக்களை ஈடுபட்டு சமூகங்களோடு கலந்துரையாடல்களில் ஈடுபடும் பொறுப்பை அதிகமான மக்கள் தங்கள் கலந்துரையாடல்களில் குறித்துக் காட்டினார்கள். சமூகத்தின் அபிவிருத்திக்கான தேவை மற்றும் முன்னுரிமைகளைப் பற்றி அனுமானங்களைக் கொண்டுவரும் INGOக்கள் மற்றும் நிதிவழங்கும் நிறுவனங்களுக்குச் சவால் விடுவதாக இந்த உதவி பெறும் சமூகங்களுடனான கலந்துரையாடல்கள் அமையுமென மக்கள் கூறினார்கள். சில மக்கள் குறித்துக் காட்டினார்கள் சர்வதேச NGOக்கள் நன்கு வரவேற்கப்பட்டு வெற்றிகரமாக அமைய வேண்டுமானால் அவர்களுக்கு சமூகம், உள்ளூர், அரசாங்கம், அபிவிருத்தி நிறுவனங்கள் போன்ற குறிப்பிட் சூழமைவிலுள்ள அனைத்து விதமான பங்குதாரர்களினதும் பாத்திரங்களையும் தேவைகளையும் இனங்காண்பதற்கான ஒரு பொறுப்பு உள்ளது.

"பங்குபற்றுனருடனான திட்டமிடல் என்பது ஒரு வாக்கியம் மட்டுமே. நிதிவழங்கும் நிறுவனங்கள் பக்கத்தில் பணம் மற்றும் காலம் என்பது மிகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர்கள் சமூகங்களுக்கு வந்து பணிபுரிய ஆரம்பிப்பதற்கு மிக நீண்டகாலங்களுக்கு முன்பே ஒரு நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டு விடுகின்றது. திட்டமிடல், கணிப்பீடு மற்றும் சமூகத்திடமிருந்து ஆதரவைப் பெற்றுக்கொள்ள குறைந்தது 6 மாதங்கள் (அவர்களுக்குத்) தேவைப்படுகின்றது."
அநுராதபுரத்திலுள்ள உள்ளூர் அரச பணியாளர்

"NGOக்கள் இயற்கையாகவே சர்வாதிகாரிகள். உள்ளூர் மக்களைக் கேட்காமல் மேலுள்ள அதிகாரிகள் மேலேயுள்ள தலைவர்கள் தீர்மானங்கள் மேற்கொள்கிறார்கள். சுனாமிக்கு முன் உள்ளூர் NGOக்கள் சமூகங்களில் மிகவும் துடிப்பாக வேலை செய்தார்கள். சில INGOக்கள் உள்ளூர் மக்களை அணிதிரட்ட உதவினர். ஆனால் சில ஆலோசனையாளர்களும் வெளிநாட்டுப் பணியாளர்களும் உள்ளூர் கொள்ளளவைப் பற்றி புரிந்திருக்காததால் அவர்களை வேலைக்காரர்களாகவே மதித்தார்கள். மொழி மற்றும் கலாச்சார இடைவெளியானது மிகவும் விரிந்து காணப்பட்டது. NGOக்கள் பாதிக்கப்பட்ட மக்களிலிருந்து மிகவும் தொலைவில் அழகிய ஹோட்டல்களில் ஒருவருக்கொருவர் அம்மக்களைப் பற்றிப் பேசிக்கொள்வார்கள் - வெள்ளைத் தோல் மனோபாவம்'." அவர்கள் சமூகத்தோடு ஒன்றிணைந்து வாழ்ந்திருந்தால் சமூகத்தின் தேவைகளைப் பற்றி நன்கு விளங்கியிருப்பார்கள்."
முன்னால் LTTE இல் இணைந்திருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் சிவில் சமூகத் தலைவர்

"பயனாளிகளின் உதவியின்றி ஜனங்களுக்குஸ எவ்வித உதவியையும் செய்ய முடியாது. அதி உச்ச பங்கேற்றல் தேவைப்படுகின்றது."
புத்தளத்தில் உள்ளூர் நிறுவனமொன்றின் பணியாளர்

“கொழும்பை மையமாகக் கொண்ட இலங்கையின் தேசிய பேழுக்களாவன ஐபேழுக்களையும் நிதிவழங்குனர்களையும் வியக்கவைப்பதற்காக அதிகமாக பரந்தடிப்படையிலான ஆதரவு நாடுபூராவுமான வலைப்பின்னல்கள், மற்றும் அடிமட்ட இயக்கங்கள் எனக் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் உண்மையிலே வெளிநாட்டு NGO க்களைப் போல கொழும்பை மையமாகக் கொண்ட தேசிய NGO க்களும் மிகவும் அரிதாகவே வருகிறார்கள். எங்கள் நோக்கங்கள் மற்றும் முன்னுரிமைகளைப் பற்றிக் கேட்கிறார்கள். இரவின் நடுப்பகுதியில் தொலைபேசியழைப்பு விடுத்து பேருந்தில் மக்களை கொழும்புக்கு பேருந்தில் மக்களை அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றார்கள் இன்னொரு சனத்திரள் நிறைந்த கூட்டமொன்றுக்கு. அதன்பின் அவர்களுக்கு ‘அடிமட்ட சமூகத்தின் தொகைகளைக்’ காட்டலாம். ஆனால் எங்கள் மக்கள் அதனைச் செவிமடுப்பதில்லை. இந்த தேசிய NGOக்களுக்கு ஆதரவு வழங்கும் சர்வதேச NGOக்களுக்கு மற்றும் நிதிவழங்குனர்கள் இதுபற்றி விழிப்புடனிருக்க வேண்டும். இதுபொன்ற இடைநடு நிறுவனங்களில் தங்கியிருப்பதால் நீங்கள் அடிமட்ட மக்களின் குரல்களைக் கேட்க முடியாமல் போகின்றீர்கள். வந்து எங்களுக்குச் செவிமடுங்கள். எங்கள் அன்றாட நடப்புகளையும் உண்மை நிலைமைகளையும் புரிந்து கொள்ளுங்கள்.”
ஊவா மாகாணத்தில் தேயிலைத் தோட்ட சனத்தொகையுடன் பணிபுரியும் CBO ஒன்றின் தலைவர்

“இவ்வளவு காலமும் நிறுவனங்களாவன தலைக்கணிப்பீட்டைச் செய்வதற்காகவே வந்திருந்தார்கள். நீங்கள் ஒருவர் தான் எங்களிடம் வந்து எம் பிரச்சினைகளுக்குச் செவிமடுத்தவர்கள்.”
செவிமடுக்கும் குழுவைச் சுட்டிக்காட்டிய புத்தளத்திலுள்ள IDP முகாமொன்றிலுள்ள வயோதிபர்

“இதுபோல பல INGOக்கள் ஒன்றுசேர்ந்து பிரதிநிதிகளாக வந்து எங்களைச் சந்தித்தது இதுவே முதல் முறையாகும்.”
செவிமடுக்கும் குழுவைச் சுட்டிக்காட்டிய ஊவா மாகாணத்திலுள்ள ஒரு பெண்

பிழையான மக்களுக்கு உதவிகள் சென்றடைவதைப் பற்றி முறைப்பாடுகள் செய்த மக்கள் இது எவ்வாறு பொறாமையை மக்கள் மத்தியில் உண்டுபண்ணியதெனவும் வீணாகும் வளங்களைப் பற்றியும் பேசினார்கள். இதற்கு எந்த விதத்தில் வித்தியாசமாக செய்திருக்கலாம் என முன்வைத்த கேள்விகளுக்கு அதிகமாகக் கூறப்பட்டது சமூகத் தொடர்புடன் ஆலோசனையுடன் அவர்களின் கருத்தில் வெளிப்படையாகவோ பொதுவாகவோ பங்கேற்றலுடனோ அல்லது கிராமத்தின் பலதரப்பட்ட பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுவதாகவோ இருக்கவில்லை என்றேன். சமூகத்தை மையப்படுத்திய கிராமத்தை மையப்படுத்திய ஆலோசனையானது நடுத்தரகர், ஒப்பந்தக்காரர்கள், ஆங்கிலம் பேசுவோர், சுற்றுலா வழிநடத்துனர் மற்றும் வெளியிலிருந்து வரும் தனிநபர்கள் போன்றவற்றில் தங்கியிருப்பதாவுது பொருத்தமில்லாத மாற்றீடாக உணரப்பட்டது.

“அவர்கள் எங்களுக்கு என்ன தேவையெனக் கேட்கவில்லை. ஆனால், அவர்கள் எங்களுக்கு பொருட்களைத் தந்தார்கள்.”
காலியிலுள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்

“ஆங்கிலம் தெரிந்த பயனாளிகள் கவனிப்பையும் உதவிகளையும் பெறுகிறார்கள். நிறுவனங்களாவன செல்வந்த மக்களைத் தொடர்பு கொள்கிறார்கள் - அவர்கள் தீர்மானிக்கிறார்கள் யார் உதவிகளைப் பெறுவதென்று. அவர்கள் வரிய மக்களைத் தொடர்பு கொள்வதில்லை. ஆதலால் அவர்களின் தேவைகளும் உணர்வுகளும் பின்தள்ளப்படுகின்றன.”
காலியிலுள்ள ஒரு முச்சக்கரவண்டிச் (ஆட்டோ-ரிக்ஷா) சாரதி

அநுராதபுரத்திலுள்ள ஒரு புத்த பிக்கு விளக்குகிறார் அவரின் வழிபாட்டு நிலையமானது சமூகத்தக்கும் INGOக்களுக்குமிடையில் ஒரு முக்கிய தொடர்பு நிலையமாக இருப்பதுடன் உதவி வழங்கும் பணியாளர்கள் அவர்களின் கருத்துக்களைக் கொண்டு வருவதடன் மதநிலையமானது இதனை மக்களுக்கு அவர்களின் உள்ளீடுகளுக்காக வழங்கி விடுகின்றார்கள். அவர் கூறுகிறார், "பிரச்சினைகள் எங்கு உருவாகின்றன என்றால் நிறுவனங்கள் சமூகங்களிலுள்ள மக்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு உதவி செய்வதற்காக வேண்டி அவர்களுக்குக் கொடுப்பனவுகள் வழங்கும் போது தான். நோக்கத்தைச் சரியான முறையில் புரிந்து கொள்வதற்கு எந்நேரமும் இந்த மக்கள் இல்லாதிருப்பதுடன் வேலைகளைத் தொடர்ந்து செய்வதற்கும் இயலாதவர்களாக இருப்பார்கள்."

"சமூகப் பங்கேற்பானது மிக முக்கியமானது. சில பணிகளின் அங்கங்களில் தர நிர்ணயத்தைப் பரிசோதிப்பதில் சமூகமானது நல்ல நிலையில் இருப்பதை இது காட்டுவதுடன் திட்டத்தின் ஆரம்பம் முதல் இறுதிவரையுள்ள அத்தனைப் படிமுறைகளையும் அவர்கள் தெரிந்திருந்தால் எதிர்காலத்திலே இத்திட்டங்களை முன்கொண்டு செல்ல சிறந்ததொரு உள்ளீடுகளை வழங்கக் கூடியவர்களாகவும் அவர்கள் இருப்பார்கள்."
அநுராதபுரத்திலுள்ள ஒரு கிராமிய நபர்

"திட்டங்களுடனும் தந்திரோபாயங்களுடனும் அவர்களிடம் வருக்கும் மக்களுக்கு INGOக்கள் முன்னுரிமை வழங்க வேண்டும். சில மக்கள் அங்கு சென்று எனக்குப் பசிக்கின்றது, நான் ஒரு வறியவர் என்று கூறி உடன் உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் அதே வேளை வேறுசிலர் தங்கள் நிலைமையை ஒரு அறிக்கையாகத் தயாரிப்பதற்காக காலத்தையெடுத்து செல்பவர்கள் ஒதுக்கப்படுகிறார்கள்."
அநுராதபுரத்திலுள்ள ஒரு கிராமியப் பெண்

*செவிமடுக்கும் குழுவின் பிரதிபலிப்புகள்*

இலங்கையிலுள்ள நிதி மற்றும் உதவி வழங்கும் நிறுவனங்கள் அவர்கள் உதவி செய்ய எண்ணுகின்ற சமூகத்திடையே ஒரு உண்மையான கலந்துரையாடலைத் தக்கவைத்துக் கொள்ளவோ வளர்க்கவோ முடியாமல் போனதையிட்டு மக்களின் மனோபாவங்களுக்குள் புதைந்திருக்கும் படிப்பினைகளைப் பற்றிச் செவிமடுக்கும் குழுவினர் பிரதிபலித்தனர். இவ்விடயத்துக்கு போதிய கவனத்தைச் சர்வதேச நிறுவனங்கள் வழங்கவில்லையென குழு அங்கத்தவர்கள் கூறினார்கள். ஒரு குழு அங்கத்தவர் கூறினார், "எங்களுக்கென்றே உரிய ஒரு கலந்துரையாடல் பாணி இருக்கின்றது. அது எந்நேரமுமே சமூகத்துக்குப் பொருத்தமானதாக இருக்காது. நாங்கள் 'உள்ளடக்கப்பட்ட' என்கின்றோம். ஆனால் நாங்கள் சிறிது நேரத்துக்கு இடைநிறுத்தி அது எதைக் குறித்து நிற்கின்றதென்று சிந்திக்கின்றோமா? நூங்கள் உட்படுத்தலை உறுதிசெய்ய முழுமையாக முன்செல்லத் தயாராக இருக்கிறோமா? நாங்கள் பங்கேற்றலுடனான என்று கூறி அதே வழியில் ஆரம்பித்தாலும் நாங்கள் திட்டங்களை முன்னெடுக்கும் போது அந்த அணுகலை இல்லாமலாக்கிக் கொள்கின்றோம். நாங்கள் எச்சொல்லால் அழைக்கிறோம் என்பது பிரச்சினையல்ல, ஆனால் மக்கள் எங்கள் செயன்முறையைப் பங்கேற்றலுடனான செயன்முறையாகக் காணவில்லை."

அதிகமான சந்தர்ப்பங்களில் சமூகத்திலுள்ள மக்கள் பங்குபற்ற வசதியான முறையில் சமூக கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்படாதது பற்றி கருத்துக்கள் எழுப்பப்பட்டன. நிறுவன ஊழியர்கள் மக்களை கூட்டங்களிலும் கணிப்பீடுகளிலும் களவிஜயங்களிலும் தவற விடுவது தவிர்க்க முடியாத விடயமெனக் குழு அங்கத்தவர்கள் கருதினார்கள். மக்களின் பாரம்பரியங்கள் மற்றும் உதவி நிறுவனங்களுடன் அவர்களின் முன்னைய அனுபவங்கள் போன்ற அனுபவங்களை கவனத்தில் எடுக்காததால் அவர்கள் மக்களின் பங்குபற்றலை அதிகூடிய முறைசார்ந்ததாகப் பார்ப்பதால் தவறவிட்டு விடுவார்கள் என்பதை குழு அங்கத்தவர்கள் கண்டனர்.

உதவி வழங்கும் நிறுவனங்களாவன அதிகமாக வெளியீடுகளிலே கூடிய கவனம் செலுத்துகிறார்கள், எவ்வாறெனில் அவர்கள் அனைத்து கண்களுக்கு புலப்படும் விளைவுகளைக் காட்டுவதற்கு அனைத்தையும் எண்ணிக்கைப்படுத்துவதாக செவிமடுக்கும் அங்கத்தவர்கள் சுட்டிக்காட்டினர். பெரும்பாலான வேலைகள் திட்டத்தை மையப்படுத்திய வேலைகளாக இருப்பதுடன் நிறுவனத்தின் அறிக்கைகளாவன மக்களுடனும் சமூகத்துடனும் உரையாடுவதற்கு செலவழிக்கப்பட்ட நேரம் மற்றும் முயற்சியின் அளவு பற்றி அறிக்கையிடத் தவறுகின்றது. சமூகங்களை வலுப்படுத்தவும் மக்களின் அபிவிருத்திக்கு ஆதரவு வழங்கவும் நிறுவனங்களின் முன்வருதலை தக்கவைத்துக் கொள்ள இது போன்ற விடயங்கள் மாற்றப்பட வேண்டுமென அவர்கள் எண்ணினார்கள்.

*C. கொள்ளளவைக் கட்டியெழுப்பலும் நட்புறவை ஏற்படுத்தலும்*

சர்வதேச NGO க்கள் மற்றும் நிதி வழங்கும் நிறுவனங்களிடமிருந்து நிதியைப் பெற்று திட்டங்களை அமுல்படுத்தும் உள்ளூர் NGO க்களிடம் செய்த கலந்துரையாடல்களின் போது அவர்கள் “மேலிருந்து-கீழ்” இல்லாத நிதிவழங்கும் நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களோடு பணிபுரிவதற்கு மிகவும் பலமான விருப்பத்தைத் தெரிவித்தக் கொண்டார்கள். சில உள்ளூர் அமுல்படுத்தும் பங்குதாரர்கள் நிதிவழங்கும் நிறுவனங்களுடனான தங்கள் உறவு முறைகளானது திட்ட முன்மொழிவொன்றை வழங்கல், ஒரு காசோலையைப் பெறல் மற்றும் காலத்துக்குக் காலம் அறிக்கைகளை அனுப்பல் என்றளவுக்குக் குறைந்துள்ளதென விளக்கினார்கள். ஊவா மாகாணத்தின் உள்ளூர் CBO ஒன்றின் தலைவர் செவி மடுக்கும் குழுவுக்குக் கூறுகிறார்: “நாங்கள் ஒரு புதுத் திட்டத்தை முன்வைக்கத் தயாராகும் போது, ஒரு திட்ட முன்மொழிவை மிக நன்றாக வரைந்து எங்கள் எண்ணக்கருக்களை சிறந்த சிந்தனையுடன் உருவாக்கி நிதியைப் பெறலாம். ஆனால் அமுல்படுத்தலின் போது எதைச் செய்கின்றோம் என நிச்சயமாகக் கூறமுடியாது. அதேபோல் INGO இன் கண்காணிப்பு முறைமையும் மிகவும் பலவீனமானது. ஏங்களுக்கு நிதிவழங்கும் நிறுவங்கின் ஆதரவு, ஆலோசனை மற்றும் கூட்டு முயற்சி என்பன தேவை. நிதிவழங்கும் நிறுவனங்களாக மட்டும் அவர்கள் இருக்கத் தேவையில்லை, எங்களுக்கு தோழர்கள் தேவை எங்கள் கருத்துக்களையும் நல்ல செயற்பாடுகளைப் பற்றியும் பரிமாறிக்கொள்ள வேண்டும்.”

பதுளையிலுள்ள ஒரு உள்ளூர் குழுவைத் தலைமை தாங்கும் பெண்மணியொருவர் நிதிவழங்கும் நிறுவனங்களைப் பற்றிப் பின்வருமாறு புகழ்கிறார், “எங்களுக்கு அறிவும் கொள்ளளவும் இருந்தாலும் சிலவேளை எங்கள் திட்டங்களை அமுல்படுத்த வளங்கள் தேவைப்படும். எங்களைப் போன்ற ஒரு சிறிய நிறுவனத்துக்கு வெளிநிறுவனங்களோடு கூட்டுறவு ஏற்படுத்தும் செயன்முறையின் கீழ் எங்கள் அடையாளத்தையோ தூரநோக்கையோ இழக்கக்கூடாது என்பது மிக முக்கியம். நாங்கள் தேவைகளை முன்னுரிமைப்படுத்தி, பின் இனங்காணப்பட்டு விருத்தி செய்யப்பட்ட சில நிகழ்ச்சிகளுக்குப் பணம் வேண்டுகிறோம். ஏங்கள் நிதிவழங்கும் நிறுவனங்கள் எமது கொள்ளளவுக்கு எவ்வாறு ஆதரவு வழங்குகிறார்கள் என்றால் அதிகமான நிகழ்ச்சிகளை நாங்களாகவே செய்து கொண்டு செல்லவேண்டும் எண்ணத்துடனாகும்.

“உள்ளூர் NGO க்களாவன உள்ளூர் தேவைகளை அடையாளங் காண உதவினாலும் அவர்களின் உதவிகளான தொலைவுக்குச் சென்றடையாது. கோள்ளளவு தொடர்பாக அவர்கள் சிரமப்படுகிறார்கள். அபிவிருத்தி வரைபில் அவர்கள் அமுல்படுத்துனர்களாகக் காணப்பட்டாலும் இந்த நாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை மாற்றியமைக்கவேண்டி இணைய முடியாது. கொழும்பில் தீர்மானங்கள் அதிகம் எடுக்கப்படும் இந்த சூழமைவில் உள்ளூர் NGO ஒன்றுக்கான பாத்திரம் அவ்வளவாகக் காணப்படுவதில்லை.”
கொழும்பிலுள்ள இலங்கை தேசிய நிறுவனமொன்றின் ஆய்வாளர்

அடிப்படை நிலைமையறிக்கைகளையும் தாண்டி கொள்ளளவைக் கட்டியெழுப்பும் அறிவுப் பகிர்ந்து கொள்ளளலுக்கான வேண்டுகோள்கள் பல காணப்பட்டன. சர்வதேச NGO

க்களில் பணிபுரியும் இலங்கைப் பணியாளர்களில் குறிப்பிட்ட சிலர் உள்ளூர் பணியாளர்களின் கொள்ளளவானது சிலவேளைகளில் கணக்கெடுக்கப்படாததாகவும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் அல்லது போதிய அளவு விருத்தி செய்யப்பட்டாததாகவும் கவனம் எழுப்பினார்கள்.

*செவிமடுக்கும் குழுவின் பிரதிபலிப்புகள்*

சிறந்த ஒரு நிதிவழங்கும் தன்மை சிறந்த பங்காளியாக மாறும் தன்மைக்கு இட்டுச் செல்லும், எவ்வாறெனில் அது பரஸ்பர பயனுடையதாக அமையும் ஒரு காரிய உறவுமுறையை ஏற்படுத்திக்கொள்ளவும் கூட்டுறவுக்கான உந்துதலை ஏற்படுத்தவும் தேவைப்படுகிறது. நிதிவழங்கும் நிறுவனங்கள், INGO க்கள், உள்ளூர் NGO க்கள் மற்றும் CBO க்கள் மற்றும் சமூகங்களுக்கிடையில் நட்புரீதியான அறிவுப் பகிரலோ அல்லது கலந்துரையாடலோ காணப்படவில்லையென்ற மக்கள் கணிப்பீட்டிற்கு குழு அங்கத்தவர்கள் இணங்கினார்கள். இது போன்ற உறவுமுறையைக் கட்டியெழுப்ப மேலும் செவிமடுத்தல், கலந்துரையாடல், ஒவ்வொரு குழுவினரதும் எதிர்ப்பார்ப்புக்கள், கூட்டுறவுக்கான வாய்ப்புக்களைப் பகுப்பாய்வு செய்தல் போன்ற விடயங்கள் தேவைப்படுகின்றன - இதற்கு இன்னும் அதிக நேரம் தேவைப்படும்.

நிறுவனங்களுக்கிடையில் காணப்படும் போட்டித்தன்மை காரணமாக நிதிவழங்கும் நிறுவனங்களுக்கிடையில் காணப்படும் INGO க்களின் செல்வாக்கு பெற்றுள்ளது என்பதைக் கவனித்த குழு அங்கத்தவர்கள் உள்ளூர் NGO க்கள் மற்றும் சமூகங்களின் உதவியோடு விருத்தி செய்யப்பட்ட ஒன்றுபட்ட திட்ட முன்மொழிவுகளை கூடிய பங்கை INGO க்கள் ஏற்கவேண்டும் என்ற விடயத்தையும் நம்பினார்கள். செவிமடுக்கும் குழு அங்கத்தவரொருவர் அவருடைய நிறுவனத்தைப் பற்றிப் பேசும் போது, சமூகத்தின் முன்னுரிமைகளை நிதிவழங்கும் நிறுவனங்களோடு தொடர்புபடுத்திவிட்ட பின் அவர்களின் நிதிவழங்கும் தீர்மானங்களில் மாற்றங்களைக் கொண்டுவர முடியுமானார்கள் என அவர் கூறினார். அவரைப் பொருத்த வரையில், “இந்தப் பிரச்சினைகளில் சில எங்களுடையது, நிதிவழங்கும் நிறுவனத்துடையதல்ல. சமூகத்துக்கும் நிதிவழங்கும் நிறுவனங்களுக்குமிடையில் சிறந்த மத்தியஸ்த நிறுவனங்களாக நாம் இருக்க வேண்டும்.”

## *D. கண்காணிப்பு*

நிதிவழங்கும் நிறுவனங்களின் பாத்திரம் மற்றும் பொறுப்புக்களைப் பற்றி எழும்பிய விடயங்களில் மக்கள் தீவிரமாக குறித்துக் காட்டியது அடிக்கடி மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு விடயங்களின் முக்கியத்துவம் பற்றியாகும். சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் குறிப்பிட்ட சில மக்கள் கூறினார்கள், “பணத்தை வழங்கியவர்கள் எங்களோடு உங்களைப் போல பேசியிருந்தால் ஊழல்கள் தடுக்கப்பட்டிருக்கும்.” நிதிகளின் மோசமான முகாமைத்துவம் பற்றி குழப்பமும் கோபமும் கொண்ட மக்கள் பணத்தை வழங்கிய நிறுவனங்கள் அது எவ்வாறு வழங்கப்படுகின்றது என்பது பற்றி பார்க்க வரவில்லை என்றார்கள். ஊழல் மற்றும் விருப்புவாரியான உதவி வழங்கலை எதிர்த்துப் போரிட சக்தியற்றவர்களாக நினைத்த சமூக மட்ட மக்கள், நிதிவழங்கும் நிறுவனங்களை நேரடியாக வந்து விதிமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் இட்டு திட்டம் மற்றும் அதன் செலவுகளைக் கண்காணித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் எனக் கருதினார்கள்.

கிராம மட்டத்தில் திட்டத்தின்: தேவைகளை, இனங்காணல், அமுல்படுத்தல், கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் போன்ற அனைத்துக் கட்டங்களிலும் நிதிவழங்கும் நிறுவனத்தின் விஜயம் மற்றும் சமூகமளிப்புக்களை சில மக்கள் விசேடமாக எதிர்பார்க்கிறார்கள். காலியிலுள்ள ஒரு நபர் கூறுகிறார், இவ்வாறு செய்வது நிதிவழங்கும் நிறுவனங்களுக்கு அவர்கள் ஏற்கனவே விட்ட பிழைகளிலிருந்து பாடங்களைப் படித்துக்கொள்வதற்கும் எதிர்காலத்தில் நடக்கும் செலவுகள் மிகவும் பொறுப்புடன் செய்வதற்கும் வழிவகுக்கும். நாம் பேசிய மக்கள் முக்கியமாகக் கூறியது சரியான உதவி

சரியான மக்களுக்குச் சென்றடைவதும் பணம் வீணாகப் போகாமல் தடுப்பதுமாகும். அரசாங்கத்தோடு குறுக்கிடவேண்டி ஏற்பட்டாலும் இம்மூன்று விடயங்களைக் கட்டாயமாக நடாத்துவதற்குப் பொறுப்புடையவர்களாக நிதிவழங்கும் நிறுவனங்கள் இருக்க வேண்டுமென அவர்கள் எண்ணினார்கள்.

“வெளிநாட்டு உதவிகள் அதிகமாக அறிக்கைகளிலே காணப்படுகின்றன. அவ்வறிக்கைகள் சரியாகத் தயார்படுத்தப்பட்டிருந்தால் உண்மையான நிலவரம் கணக்கில் எடுக்கப்பட மாட்டாது. நீங்கள் கண்காணிக்கும் போது நடுவிலுள்ளவர்களிடம் செல்வதில்லை, வரிசையின் கடைசியிலுள்ளவர்களிடம் தான் செல்வது.”
சுனாமியால் பாதிக்கப்பட்ட காலியிலுள்ள பார்வையற்ற மனிதர்

“நிதிவழங்கும் நிறுவனங்கள் நிதிவழங்கும் போது அவர்கள் அவர்களுக்கு மேலேயிருப்பவர்களுக்கு கணக்குக் கூறப் பொறுப்பாயிருப்பார்கள். சுனாமியின் பின் யாருக்கும் அவ்வாறு கணக்குக் கூறவேண்டிய பொறுப்பிருக்கவில்லை. உதவி செய்வது மட்டுமே வழக்கிலிருந்தது.”
நிவாரண உதவி வழங்கலில் 15வருட அனுபவமுள்ள ஒரு இலங்கை உதவிப் பணியாளர்

“சரியான முறையில் உதவிகள் வழங்குவதாயின் NGO க்களாவன தேவையுள்ள மக்கள் பற்றிய சரியான தகவலைப் பெறுவதுடன் உதவிகள் யாரைச் சென்றடைந்தன என்பதற்குப் பொருத்தமான கண்காணிப்பு முறைமையை வைத்திருக்க வேண்டும். உதாரணமாக, சுனாமிக்குப் பின் படகுகள் மற்றும் மீன்பிடிப் படகுகள் அனைவருக்கும் வழங்கப்பட்டன. கடலை ஏற்கனவே கண்டில்லாத மக்களுக்கும் அது வழங்கப்பட்டது. மின்சாரத் தொழிலாளர்களுக்கும் கொத்தர்களுக்கும் மீன்பிடிப் படகுகள் வழங்கப்பட்டன. உதவிகளாவன பிழையான மக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது இதிலிருந்து உங்களுக்கு விளங்குகின்றது. உண்மையிலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் உதவிகள் சென்றுச் சேரவில்லை.”
புத்தளத்திலுள்ள ஒரு அங்கிலிக்கன் மதகுரு

“என் புரிந்துணர்வின் படி 95% ஆன சர்வதேச நிறுவனங்கள் சிறந்தவொரு பணியை ஆற்றுகின்றன. அத்தோடு தேவையான உதவிகளையும் கொண்டுவந்துள்ளனர். 5% ஆனவர்கள் மிகவும் தரம் குறைந்த வேலைகளைச் செய்கின்றார்கள் ஏனெனில் அவர்கள் நம்பிக்கையற்றவர்களைப் பணிகளை ஆற்றும் பொருட்டு ஒப்பந்தப்படுத்தியிருக்கிறார்கள். சிலவேளை 200,000 ரூபா கிரயத்தில் செய்ய வேண்டிய இந்த திட்டமானது மோசமான முகாமைத்துவம் மற்றும் ஏனைய பல குறுக்கு வழிகளால் 10,000 ரூபாவுக்குச் செய்யப்படுகின்றன. ஊழியர்கள் சரியாக மேற்பார்வை செய்யப்படவில்லை. மற்றும் கணக்கறிக்கையானது மீள்பரிசீலனை செய்யப்படவில்லை. மற்றும் திட்டமானது மிகவும் ஒழுங்கற்ற முறையில் செய்யப்பட்டிருக்கும்.”
பதுளையில் சமூக வீதியமைப்பு திட்டமொன்றில் இணைந்துள்ள ஒரு விவசாயி

“உங்களுக்கு (வெளிநபர்களுக்கு) ஒரு பொறுப்புள்ளது அரசு ஒழுங்காக நிதிகளைப் பயன்படுத்தாவிட்டால் அதில் தலையிட்டு (அவர்களுக்கு) அழுத்தம் கொடுப்பது. கண்காணிக்கும் பொறுப்பானது நிதிவழங்கும் நிறுவனங்களுக்குச் செல்கின்றது. இடையிலுள்ள தொடர்புகளையோ உங்களுக்கு வழங்கப்பட்ட தரவுகளையோ வைத்து நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டாம். அதிகமான சந்தர்ப்பங்களில் வெளியிலுள்ளவர்கள் நம்புவது அவர்களின் முகவரை. அவர்களை குறுக்கு விசாரணை செய்வதில்லை.”
காலியிலுள்ள ஒரு பாராளுமன்ற உறுப்பினர்

முரண்பாட்டுப் பிரதேசத்திலுள்ள சர்வதேச நிறுவனங்களின் பணிகளில் ஏற்படுத்தப்பட்டள்ள எல்லைகளைப் புரிந்து கொண்ட சில மக்கள் அவர்களின் வழமையான கண்காணிப்பு மற்றும் சமூகமளிப்பு போன்ற தெரிவுகளில் பாதிப்பு ஏற்படுத்துவதை உணர்ந்தார்கள்.

“NGO க்கள் மற்றும் நிதிவழங்கும் நிறுவனங்களால் வினியோகிக்கப்படும் பொருட்கள் சரியான பெறுனருக்குச் சென்றடைந்துள்ளதா என்பதைத் தெரிந்து கொள்வதற்கான கண்காணிப்பு முறையொன்றை வைத்துக்கொள்ள வேண்டும். சில NGOக்கள் சிலவேளை பாதிக்கப்பட்ட மக்களிடம் சென்று நேரடியாகப் பேசுவதில் தடைகள் விதிக்கப்பட்டிருக்கும். சிலவேளை இதற்கு அரச அதிகாரிகளும் தடைவிதித்திருக்கலாம்.”
மட்டக்களப்பிலுள்ள முஸ்லிம் சமூகத் தலைவர்

“NGO க்களாவன அவர்களின் பணிகளைக் கண்காணிப்பதற்கு ஏற்கனவே உட்புகுத்திய கண்காணிப்பு முறைமையை வைத்திருந்தால் நன்று. தேவையற்ற பரிபாலன கிரயங்களைக் குறைக்க NGO க்கள் முயற்சி செய்வதுடன் சிலவேளை, மீட்கப்படாத பிரதேசங்களுக்கு நீங்கள் விஜயம் செய்யும் போது ஆயுததாரிகளால் பொருட்கள் பலாத்காரமாகக் கொண்டு செல்லப்படுவதைத் தடை செய்ய முடியாதிருப்பதால், பெறுனர்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து பொருட்கள் பற்றிய ஒரு பதிவை வைத்திருக்க வேண்டும்.”
மட்டக்களப்பிலுள்ள இலங்கை மனித உரிமைகள் குழுவொன்றின் பணியாளர்

*செவிமடுக்கும் குழுவின் பிரதிபலிப்புகள்*

நிதிவழங்கும் நிறுவனங்கள் அவர்களின் ஒவ்வொரு படிமுறைகளிலும் சமூகத்தில் வந்து கலந்து இணைந்து இருப்பதற்கான மக்களின் கோரிக்கையானது கவனிக்கப்பட வேண்டிய ஒரு முக்கிய விடயமாகும். INGO க்களின் பௌதீக சமூகமளிப்பும் வழமையான கண்காணிப்பும் INGO க்கள் மற்றும் நிதிவழங்கும் நிறுவனங்களை ஊழல்கள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக விழிப்படையச் செய்யும் என்பதில் ஆவர்கள் மிகவும் தீவிரமாக நம்புகிறார்கள். பெரும்பாலான திட்ட வட்டங்களில் கண்காணிப்பானது புகுத்தப்பட்டிருந்தாலும் சமூகம் முன்கூறுகின்ற முறையில் முற்றுமுழுதான மற்றும் ஒழுங்குப் பாங்கான வகையிலும் அது நடக்காமலிருக்கலாம். ஊழல் மற்றும் போதாத கண்காணிப்புகள் பற்றி சமூகமானது ஏன் தன் குரல்களை எழுப்பவில்லை என்ற செவிமடுக்கும் குழுவின் கலந்துரையாடலுக்கு பதிலாக வந்தது அடுத்த கட்ட உதவிக்கு அவர்கள் தகுதியுடையவர்கள் என்பதைக் குழப்பியடிக்கும் ஒரு பயம் மக்களிடம் காணப்படுவதாகும். உத்தியோகபூர்வ கண்காணிப்பு விஜயங்களின் போது சில பாரதூரமான மீறல்கள் அறிக்கையிடப்படாவிட்டாலும் சில நிதி மற்றும் உதவி வழங்கும் நிறுவனங்கள் அதிகமான நேரத்தை அவர்கள் உதவ எண்ணும் மக்களுடன் செலவழிக்க முன்வரும்போது அது போன்ற விடயங்கள் அறிக்கையிடப்படும் அல்லது கவனிக்கப்படும்.

தோடர்ச்சியான கண்காணிப்பு விஜயங்களுக்கான சவாலாக அமைவது அதிகரிக்கின்ற பரிபாலன நிதியின் தேவையாகும்.

## *E. தேசிய மற்றும் மாகாண அரசுடன் பணிபுரிதல்*

நிதிவழங்கும் நிறுவனங்கள் மற்றும் தேசிய மற்றும் மாகாண அரசுகள் எவ்வாறு ஒன்றாக பணிபுரிய வேண்டுமென பலரும் கலந்துரையாடினர். ஏனைய பிரதேசங்களைப் போன்று அநுராதபுரத்திலும் நிதிவழங்கும் நிறுவனங்கள் மற்றும் INGO க்களுக்கு எதிராக அரசாங்கம் தன் பாத்திரத்தை எவ்வாறு பின்வரும் விடயங்களில் ஏற்று நடக்க வேண்டுமென பல்வேறுபட்ட கருத்துக்கள் வெளிவந்தன: அதாவது ஒருங்கிணைப்பாளராக, அபிவிருத்தி பணிகளின் தலைவனாக, முன்னுதாரணமாக, ஆலோசகராக, நிதிவழங்குனராக, தொடர்பாடல் மையமாக, கண்காணிப்பு முகவராக, சமூகத்தை அணிதிரட்டுபவராக அல்லது உதவி வழங்கும் நிறுவனங்களிலிருந்து முழுமையாக வேறுபட்ட அபிவிருத்தி முகவராக.

இந்த அறிக்கையின் ஆரம்பப் பகுதியில் கருத்துக்களின் மூலம் கண்டுகொண்டது போல அதிகமான மக்கள் சர்வதேச NGOக்களாவன அரசாங்கத்தை விட மிகவும்

வினைத்திறனாகச் செயற்படுவதால் உதவி நிகழ்ச்சிகளில் தலைமைத்துவப் பாத்திரத்தை INGO க்கள் ஏற்று நடக்க வேண்டுமென நினைத்தார்கள். அதேவேளை அதிகமான சமூக அங்கத்தவர்களும் காரியாலய பணியாளர்களும் கூறினார்கள் INGO க்கள் வெளியேறும் போது அவர்களுக்குக் கையளிக்கும் பொருட்டு திட்டமிடப்பட்டிருக்கும் மற்றும் தற்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கும் தலையீடுகளைப் பற்றி முழுமையான விழிப்பைப் பெற்றிருக்க வேண்டும் அதேவேளை INGOக்கள் தாங்கள் பணிபுரியும் சூழமைவைப் பற்றிய புரிந்துணர்வைப் பெறுவதை ஊர்ஜிதப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று.

இலங்கையில் பணிபுரியும் INGO க்களுக்கான பரிந்துரைகளில் பெரும்பாலான அரச உத்தியோகத்தர்கள் மற்றும் உதவி பெறுனர்கள் நிறுவனங்களாவன அரசுடன் சரியான தகவல் திரட்டவேண்டி நெருக்கமாக பணிபுரிவதையும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் அமுல்படுத்த முன் முழுமையான தேவைகளை இணங்காணல் இடம்பெற வேண்டுமென்றும் இருந்தது. வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் மற்றும் அனுபவமுள்ள மனிதநேய மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களுக்கும் உள்ளூர் அரச பணியாளர்களின் கொள்ளளவைக் கட்டியெழுப்பல் மற்றும் வினைத்திறனான அனர்த்த முன்னேற்பாட்டுத் திட்டங்கள் அபிவிருத்தி செய்வதில் தேசிய மற்றும் மாகாண அரசுகளுடன் பணிபுரிவது முக்கியமாகக் காணப்பட்டது.

“உள்ளூர் அரசுடன் வேலை செய்தால் கொள்ளளவை விருத்தி செய்வதுடன் நிலைத்து நிற்கும் தன்மையையும் ஊர்ஜிதப்படுத்துகிறீர்கள். நாங்கள் செய்த தவறுகளிலிருந்து நல்ல படிப்பினையைப் பெற்றுள்ளோம். குடந்த காலங்களில் நாங்கள் முற்றுமுழுதாக கவனித்தது கிராம மட்ட அல்லது சமூக மட்ட நிறுவனங்கள், பயிற்றப்பட்ட கிராமியக் குழுக்கள் திட்ட முன்மொழிவுகளைத் தயார் செய்து நிதிக்காக விண்ணப்பிப்பது. ஆனால் நாங்கள் வெளியேறிய பின் இந்த குழுக்கள் செயலிழந்தன. ஏனெனில், உள்ளூர் அரசோடு பொருத்தமான வலைப்பின்னல் இருந்திருக்கவில்லை.”
பதுளையில் பணிபுரியும் INGO ஒன்றின் உள்ளூர் பணியாளர்

“எமது பிரதேசத்திலுள்ள தேவைகளைத் தனிநபரால் செய்ய முடியாது. அரசாங்கத்தைப் போன்று உள்ளூர் மற்றும் INGOக்களால் கிடைத்த உதவிகளைப் பற்றி நாம் மெச்சுகிறோம். ஒன்றாக வேலை செய்தால் இன்னும் அதிகமான விளைவுகள் எய்தப்படுமென நான் நினைக்கிறேன்.”
பதுளையிலுள்ள ஒரு கிராமப் பெண்

“அரசாங்கத்துக்கு ஒரு திட்டத்தைக் கையளிக்கும் போது அங்கு பிரச்சினைகள் தோன்றுகின்றன. உதாரணமாக நீர்வினியோகத் திட்ட சம்பவத்தைப் போல அரசுக்கு எவ்விதமானதொரு முன்னறிவுமிருக்காது ஏனெனில் திட்டமிடும்போது அரசின் அனுமதியையோ அல்லது அவர்களை அத்திட்டம் வரையும் போதோ உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.”
அநுராதபுரத்திலுள்ள அரச மாகாண உத்தியோகத்தர்

உள்ளூர் NGOக்கள் திறந்த மற்றும் வழமையான தொடர்பாடல்களை வைத்திருப்பதுடன் INGO க்களுடன் காணப்படும் அதியுயர் நம்பிக்கையையும் பற்றி அதிகளவான அரச பணியாளர்கள் கூறினார்கள். காலியிலுள்ள ஒரு அரச ஊழியர் அடிக்கடி செவிமடுக்கப்பட்ட ஒரு விடயத்தைக் கூறுகிறார், “எங்களுக்கெதிரான தப்பெண்ணங்களை வைத்திருக்க வேண்டாம். உங்களுக்கு எழும் சந்தேகங்களை எங்களுடன் கலந்துரையாடுங்கள். அப்பொழுது தான் புரிந்துணர்வேற்படும்.”

சிலர் INGO க்கள் மீது ஆழ்ந்த அவநம்பிக்கையை வெளிப்படுத்தியதுடன் அவர்களின் மேலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டுமென வேண்டி நின்றார்கள். மட்டக்களப்பிலுள்ள ஒரு தமிழ் அரசியல் தலைவர் குறிப்பிடுகிறார், “இலங்கை ஒரு

விலைமாது போன்றது. எவருக்கும் வந்து விட்டு தூங்கிவிட்டுச் செல்லலாம். NGO க்களுக்கு ஒரு கட்டுப்பாடோ, ஒருங்கிணைப்போ, மட்டுப்படுத்தல்களோ இல்லை. நாங்கள் தான் NGOக்களைக் கண்காணிக்க வேண்டும்.'' அநுராதபுரத்திலுள்ள இடதுசாரி JVP கட்சியின் அங்கத்தவர் கூறுகிறார், "அரசானது INGO க்களின் நடவடிக்கைகளை மிக நெருக்கமாகக் கண்காணித்து அவர்கள் நடவடிக்கைகளை மட்டுப்படுத்த வேண்டும், ஏனெனில், "[அவர்கள்] ஒரு பொறுப்பு உள்ளது நிதிவழங்கும் நிறுவனங்களுக்கு மட்டும், அவர்களிருக்கும் சமுதாயத்துக்கோ நாட்டுக்கோ அல்ல.''

## VII. முரண்பாட்டுப் பிரதேசங்களில் அரச மற்றும் பாதுகாப்புப் பிரிவினருடனான உதவி வழங்கும் நிறுவனங்களின் உறவு

மட்டக்களப்பு, அநுராதபுரம் மற்றும் புத்தளத்தில் அதிகமான மக்கள் முரண்பாடு இடம்பெறும் நேரங்களில் சிவிலியன் மக்களைப் பாதுகாப்பதற்குரிய பணிக்கட்டளையை வைத்திருக்கும் INGO க்கள் மற்றும் ஐ.நா. நிறுவனங்களின் நம்பகத்தன்மை பற்றிப் பேசினர். காலத்துக்குக் காலம் பலதரப்பட்ட சமூகங்களானது பலவகையான அனுபவங்களை இந்நிறுவனங்களோடு கண்டுள்ளன. உதாரணமாக, புத்தளத்தில் சில குறிப்பிட்ட சர்வதேச நிறுவனங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் சமூகங்களை குடியேற்றி உடனடியாக அவர்களை விடுவிக்க உதவியதில் மிகமுக்கியமாக சர்வதேச நிறுவனங்கள் இருந்ததைக் கூறினார்கள்.

மக்கள் பாதுகாப்பைப் பற்றிக் கூறினார்கள் உள்ளூர் உதவிப் பணியாளர்களினதும் பொதுமக்களின் பாதுகாப்பைப் பற்றியும் எம் கவனம் செல்வதால். கிழக்கிலுள்ள சில உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களின் முகாம்களில் அம்மக்களின் பாதுகாப்புக்கான ஏற்பாடுகள் இம்முகாம்களில் மிகவும் குறைவென்று. அவர்கள் IDP க்கள் ஏதாவது சேவைகளைக் கேட்டு நின்றால் அல்லது உரிமையுடன் கேட்டு நின்றால் சில இனந்தெரியாத நபர்களால் அவர்கள் அச்சுறுத்தப்பட்டிருப்பதைப் பற்றியும் நாம் செவிமடுத்தோம். பல துஷ்பிரயோகங்கள் இங்கு அறிக்கையிடப்பட்டாலும் மக்கள் எண்ணுகிறார்கள் இவ்விடயங்கள் முகாம் அதிகாரிகளாலோ சர்வதேச பாதுகாப்புப் பணியாளர்களாலோ பதியப்படுவதில்லை என்று.

முகாம்களிலுள்ள அதிகமான மக்கள் "[ஒரு சர்வதேச நிறுவனம்] தனது கடமைகளை நிறைவேற்றத் தவறியதையிட்டு'' நம்பிக்கையிழப்பை வெளிப்படுத்தினார்கள். நிறுவனப் பணியாளர்கள் பிரதேச செயலகத்துக்கு (DS) விருப்புகளை வழங்குவதாகவும் மாறாக முகாம்களிலிருக்கும் மக்களுக்குப் பரிந்துரை செய்வதில்லையெனவும் மக்கள் எண்ணுகிறார்கள். பணியாளர்கள் வருகிறார்கள், தகவல்கள் சேகரிக்கிறார்கள், பின் சென்று விடுகிறார்கள். தகவல்களாவன வெளியில் கசிந்த பின் DS வந்து அவர்களை அச்சுறுத்துவார் என்பதால் IDP க்கள் தகல்கள் வழங்க அஞ்சுகிறார்கள்.

"[அரசாங்க அதிகாரிகள்] சில நபர்களோடு அடிக்கடி வருவார்கள் வந்து அவர் எங்களைப் பயமுறுத்துகிறார். சில ஆயுதமேந்திய நபர்களுடன் எங்களை வந்து பார்த்த அவர் நாங்கள் எங்களுக்கு தரப்பட்டதை மாத்திரம் பெற்றுக்கொண்டு எமது பாட்டிலிருக்காவிட்டால் நாங்கள் உங்களை சுட்டுக்கொள்ளுவோம்... நாங்கள் [சர்வதேச நிறுவனங்களை] நம்புவதில்லை ஏனெனில், அவர்கள் கூட கிராம சேவகருக்குச் (GS) [கிராம அதிகாரி] சார்பாக இருக்கிறார்கள். அவர்கள் கூட எமக்குக் கூறுவது புளு சொல்லும்படி செய்யத்தான். ஒரு முக்கிய ஆதாரமானது முகாம் முகாமையாளரை புளு கேட்டிருக்கிறார் நாம் வினியோகிக்கும் உலருணவுகளின் அளவு பற்றிக் கேள்வியெழுப்பினால் எங்களுக்கு அடிக்குமாறும் அதற்காக வேண்டி தடியைப் போன்று வயர்களால் சுத்தப்பட்ட ஒரு பொருளைக் கொடுத்திருக்கிறார். ஆதலால் இனிமேலும் எங்களுக்குப் பேச முடியாது.''

மட்டக்களப்பில் IDP முகாமிலுள்ள யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள தமிழ்ப்பெண்

“வாகரையில் அண்மையில் ஏற்பட்ட யுத்தத்தைச் சற்று நோக்குங்கள். சர்வதேச நிறுவன பணியாளர்கள் அப்பிதேசத்துக்கு வந்து செல்ல முடியுமாக இருந்து மற்றும் அவர்களுக்கு நன்கு அப்பிரதேசத்தின் நிலைமை பற்றித் தெரிந்தும் அவர்கள் ஒருபோதும் பொதுமக்களை அங்கிருந்து விடுவிக்க முயற்சிக்கவில்லை. சர்வதேச நிறுவனங்களுக்கு பல பிரதேசங்களுக்குச் செல்வதற்கான வசதியிருந்தும் இருமுனைத் துப்பாக்கிப் பிரயோகத்தில் சிக்கிய மக்களை அவர்கள் உதாசீனம் செய்தார்கள். மக்கள் உணவு மற்றும் குடிநீரில்லாமல் பெரும் அவதிப்பட்டார்கள். அவர்கள் அவர்களின் ஊழியர்களின் உயிரைப் பற்றி மாத்திரம் தான் கவனம் செலுத்தியிருந்தார்கள். அவர்கள் அங்கு செல்லப் பயப்பட்டார்கள்.”
மட்டக்களப்பில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சமூகத்தின் ஒரு மனிதர்

சர்வதேச நிறுவனத்தின் பணிக்கட்டளையின் படி அவர்களுக்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்கச் சக்தியுள்ளது. வாகரையில் அவர்கள் அதனைச் சரிவரச் செய்யவில்லை. இங்கு நடந்த சம்பவங்களுக்கு ஒரு குறிப்பிட்டளவு பொறுப்பிருக்கிறது. மக்கள் பசியால் வாடும் பொழுது அவர்கள் எந்த உதவியுமே வழங்கவில்லை. அவர்கள் அரசுக்கும் LTTE க்குமிடையில் யுத்தத்தைத் தடுக்க வாய்ப்புக்களிருந்தன. அவர்கள் சென்று இங்குள்ள நிலைமையைப் பற்றி சரியான முறையில் அறிக்கையிட்டிருக்கலாம். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை.”
மட்டக்களப்பிலுள்ள தமிழ் அரசியல் தலைவர்

முரண்பாட்டுப் பிரதேசங்களில் பணிபுரியும் உதவி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் அரச பணியாளர்கள், பாதுகாப்பு படைப் பிரிவினருக்கிடையேயான இறுக்கமான உறவுமுறைகள் மற்றும் நம்பிக்கையற்ற தன்மைகளின் கீழ் சர்வதேச நிறுவனங்களின் நம்பகத்தன்மை பற்றி கலந்துரையாடப்பட்டது.

“அரசின் இயலாமையால் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு மட்டும் NGOக்கள் இங்கு வரவில்லை, ஆனால், தமிழ் மக்களுக்கு குரல் கொடுத்து கௌரவத்தைப் பெற்றுத்தரவும் அவர்கள் வந்தார்கள். இது அரசாங்கத்தின் மீது எதிர்விளைவை ஏற்படுத்தியது. அவர்கள் மனிதநேய விடயங்களில் கவனம் செலுத்தியிருக்கலாம், என்றாலும் தமிழர் மீது பட்சபாதமானவர்களாக இருந்தார்கள். இது சிங்கள மக்கள் மத்தியில் எதிர்ப்பை மூட்டியது. NGO க்கள் பற்றிய எண்ணங்களாவது சிங்கள மக்கள் மத்தியில் மாறிக் காணப்பட்டதுடன் அவர்களுக்கு மிகவும் பாதகமானதாகவும் மாறியது. சிவில் பாதுகாப்புப் பிரிவினர் விடயங்களில் INGO க்கள் பணத்தை பிழையாகக் கையாண்டு LTTE இனருக்கு வழங்குகிறார்களெனக் குற்றம் சாட்டினார்கள்.”
முன்னாள் LTTE இல் இணைந்திருந்த மட்டக்களப்பைச் சிவில் சமூகத் தலைவர்

முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட மற்றும் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் தாக்கம் ஏற்படுத்தக்கூடிய தீர்மானங்கள் மேற்கொள்ளும் போது மனிதநேய NGO க்கள், அரசாங்கம் மற்றம் பாதுகாப்புப் பிரிவினருக்கிடையில் தொடர்ச்சியான தொடர்பாடல் பேணப்படுவதன் முக்கியத்துவத்தை மட்டக்களப்பிலும் அநுராதபுரத்திலுமுள்ள அதிகமான மக்கள் பேசிக்கொண்டனர்.

“NGO க்களுக்கு வேலை செய்வதில் சுதந்திரம் காணப்படுவதில்லை. மட்டக்களப்பையும் ஏனைய விடுவிக்கப்பட்ட பிரதேசங்களையும் பாருங்கள். அந்தப் பிரதேசங்களுக்குச் செல்வதில் NGO க்களுக்கு இன்னும் கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன.”
அண்மையில் பாதுகாப்புப் பிரிவினரால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்குச் செலவதைப் பற்றி மட்டக்களப்பிலுள்ள தமிழ் அரசியல் நிறுவனப் பிரதிநிதி

“[சர்வதேச நிறுவனங்கள்] அரசாங்கம் மற்றும் பொதுமக்களுடன் மாத்திரமல்ல, இன்னும் பலதரப்பட்ட பங்குதாரர்களுடனும் தொடர்புகள் வைத்துக்கொள்ள வேண்டும். அடுத்த கட்சியினருக்குப் பழிசுமத்துவது இலகுவானது. INGO க்களானது எவ்வாறு பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் சிவில் பாதுகாப்பு விடயங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளுடன் தொடர்பு வைத்திருக்க வேண்டுமென்பதைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.”
மட்டக்களப்பிலுள்ள உள்ளூர் மனித உரிமைகள் பரிந்துரையாளர்

“மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களிலே 20,000 மக்கள் குடியேறியுள்ளனர் மற்றும் 15,000 [சிறுவர்கள்] மீள பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். உட்கட்டமைப்பு வசதிகளாவன நாசமாகியுள்ளதால் அதிலும் இன்னும் சிரமங்கள் காணப்படுகின்றன. அரசாங்கத்துக்குத் தான் தலையாய பொறுப்புக்களிருக்கின்றன. ஆனால் அங்கு தற்போது ஒருங்கிணைக்கும் பிரிவாக பாதுகாப்புப் பிரிவினர் காணப்படுவதால் இது இன்னும் சிரமமாகக் காணப்படுகின்றது. பலதரப்பட்ட ஆயுதமேந்திய குழுக்கள் இருப்பதால் இங்கு நடுநிலையைத் தேடுவது சவாலாக இருக்கின்றது.”
மட்டக்களப்பிலுள்ள வெளிநாட்டு உதவிப் பணியாளர்

*செவிமடுக்கும் குழுவின் பிரதிபலிப்புகள்*

நிறுவனத்தின் கொள்கைகளாவன சாமர்த்தியமாகவிருந்தால் சூழமைவுக்கேற்ற முறையில் தன்னைத் தயார்படுத்திக்கொண்ட வெளிநாட்டுப் பணியாளர்கள் இருந்தால் மாத்திரம் அடிக்கடி மாறிக்கொண்டிருக்கும் நிலவரங்களைக் கொண்ட நாட்டின் கிழக்கு மற்றும் வடக்குப் பிரதேசங்களிலே மக்களின் பாதுகாப்பானது வெளிநாட்டு நபர்களின் வருகையால் ஓரளவுக்குப் பாதுகாக்கப்படும் என்று செவிமடுக்கும் குழு அங்கத்தவர்கள் எண்ணுகிறார்கள். வெளிநாட்டுப் பணியாளர்கள் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் உள்ளூர் மொழியைப் பேசுவது மிகவும் பயனுடையதாக அமையும் என அவர்கள் குறித்துக் காட்டினார்கள்.

**செவிமடுக்கும் குழுவின் இறுதிப் பிரதிபலிப்புகள்**

நாட்டின் நிதிவழங்கும் நிறுவனங்கள் மற்றும் INGO க்களுக்குள்ளே மேலும் கற்றல் பகுப்பாய்வு மற்றும் கலந்துரையாடல்கள் தேவைப்படுமென செவிமடுக்கும் குழு அங்கத்தவர்கள் சில எண்ணக்கருக்கள் மற்றும் விடயங்களை குறிப்பிட்டுக் காட்டினர். அதில் ஒன்றாவது தலையீட்டு வகை, புவியியல் நோக்கு, வலுவிழப்பு அளவுகோள்கள் போன்ற பயனாளிகளைத் தெரிவு செய்யும் விடயங்களில் செல்வாக்குச் செலுத்தும் நிதிவழங்கும் நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் நிறுவனப் பணிக்கட்டளைகள் போன்றவற்றின் தாக்கங்களைப் பற்றி விடயங்கள் முன்னெடுக்கப்பட்டன. மக்களிடம் மேற்கொள்ளப்பட்ட விடயங்களிலிருந்து இது தெளிவானது. இதுபோன்ற தலைப்புகள் கொழும்பிலுள்ள உதவி வட்டாரங்களில் இடம்பெறும் கலந்துரையாடல்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல, உதவிகள் பெறும், வினியோகிக்கும் மற்றும் சர்வதேச உதவிகளின் போக்கை அவதானித்துக்கொண்டிருக்கும் இலங்கையர்கள் போன்ற அதிகமானோருக்கு இது முக்கிய பிரச்சினையாக இருப்பது.

சர்வதேச நிறுவனங்கள் மற்றும் நிதிவழங்குனர்களின் பிரதிநிதிகளோடு கொழும்பில் நடாத்தப்பட்ட சுருக்க உரையின் போது இத்தலைப்பும் பார்வையாளர்களிடமிருந்து எழுப்பப்பட்டது. புத்தளம் சம்பந்தமாக மிகவும் விசேடமாகக் கதைத்தார்கள். இலங்கையில் காணப்படும் மிகவும் வறுமையான மூன்று பிரதேசச் செயலகப் பிரிவுகள் காணப்பட்டாலும் அதிகமான உதவிகள் சென்றடைவது IDP முகாம்களுக்கென்று. சமூகத்திலுள்ள மக்களைப் போல நிறுவனப் பணியாளர்களுக்கும் வலுவிழத்தல் மற்றும் வறுமையின் சுட்டிகளை உருவாக்குவதும் அளக்கும் செயன்முறையும் ஒரு பிரச்சினையாகவே காணப்பட்டது. தேசிய மற்றும் உள்ளூர் பங்குதாரர்களின் ஆலோசனையோடு

வலுவிழந்தோரின் அளவுகோள்களை வரையறுக்குமாறு நிதிவழங்குனர்கள் மற்றும் பணியாளர்களைக் பங்குபற்றுனர்கள் கேட்டுக்கொண்டனர்.

நிதிவழங்குனர் நிகழ்ச்சி நிரல் மற்றும் வலுவிழப்பு அலகுகள் போன்றவற்றின் கலந்துரையாடல்களாவன களத்திலே மாற்றங்களாக உருப்பெற அதிக காலம் எடுக்கும் அதேவேளை உதவி பெறுனர்களால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்களிலும் விடயங்களிலும் ஏனைய விடயங்கள் அவசர முன்னேற்றம் தேவைப்படும் விடயங்களாகக் கண்டுபிடிக்கப்பட்டன. நிறுவனங்கள் அவசரமாக செய்ய வேண்டிய வேலைகளாக ஒன்றில், அதிகமான தகவல்களுக்கான தேவைகள் மற்றும் “நோக்கத்தை பகிர்ந்து கொள்ளல்” மற்றும் தலையீடுகளின் நோக்கங்கள் காணப்பட்டன. நீண்டகால நிகழ்ச்சிகளைத் திட்டமிடப்படும் வகையில் விசேடமாக நேரம் மற்றும் ஊழியர் பங்களிப்புகளின் தேவையானது மிகவும் பெறுமதியானதாகக் காணப்பட்டது. சமூகப் பங்களிப்பின் பெறுமதியும் ஊழியர் மற்றும் சிரம மற்றும் நிதிப் பங்களிப்புகளினூடாக கூடிய உரிமையைப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற சமூக அங்கத்தவர்களின் சாதகமான கணிப்பீடானது குழு அங்கத்தவர்களுக்கு இன்னும் கற்கக்கூடிய விடயமாகக் காணப்பட்டது.

பாதுகாப்பு விடயங்கள் காரணமாக செவிமடுக்கும் குழுவுக்கு புவியியல் ரீதியாக செல்ல முடியாத பிரதேசங்களாகக் காணப்பட்டது அந்த தருணத்தில் அதிகாரிகளின் அனுமதியின்றி செல்லமுடியாமலிருந்த வடக்கும் கிழக்கிலுள்ள சில பிரதேசங்களுமாகும். அந்த பிரதேசத்திலுள்ள சமூகங்களோடு கதைக்காமல் சர்வதேச உதவிகளின் திரண்ட விளைவுகளின் ஆதாரங்களைச் சேகரிப்பது முடியாத ஒரு காரியமென்று சில குழு அங்கத்தவர்கள் கவனித்தார்கள். பிரதேசங்களிலுள்ள நிலைமைகள் முன்னேறி கிராம மட்டத்திலே ஏற்பாடு செய்யப்படுகின்ற செவிமடுக்கும் முயற்சிகள் நடந்தேற வழிவகுக்குமென செவிமடுக்கும் திட்டமானது எதிர்பார்க்கிறது.